மாநகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 19 ஞாயிற்றுக்கிழமை (05.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 312

# விசுவமடுவும் ஒட்டுசுட்டானும் தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசங்கள்!

## அரசாங்கம் நேற்றுத் திடீர் அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர்05

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுவும் ஒட்டுசுட்டானும் தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசங்கள் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் தலா 10 சதுரக் கிலோ மீற்றரை மக்களின் பாதுகாப்புக்கருதி தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசமாக்கி உள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இந்தத் தகவலை அனுராதபுரத்தில் வைத்து இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன் சேகாவும்- கொழும்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்காரவும் - தெரிவித்தனர்.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்காகவே மேற்படி இரண்டு பிரதேசங்களும் தாக்குதல் தவிர்ப்புப் பகுதிகளாக்கப்பட்டிருப்பதாக இருவரும் காரணம் தெரிவித்தனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகரில் நேற்றுக் கடும் மழை

வவுனியா, ஒக்.5

கிளிநொச்சி நகரிலும் மற்றும் சூழவுள்ள பகுதிகளிலும் நேற்றுப் பிற்பகலில் கடும் மழை பெய்தது. அரை மணி நேரம் தொடர்ந்து பெய்த மழையால் இடம் பெயர்ந்த மக்கள் பெரும் அவலங்களுக்கு ஆளானார்கள்.

திடீரெனப் பெய்த மழையால் அகதிகள் தமது உடைமைகளை பாடசாலைகள், ஆலயங்களுக்கு மிகவும் கஷ்டப்பட்டு எடுத்துச் சென்று அங்கு தங்கியிருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

## கிளிநொச்சி பிரதான ஆஸ்பத்திரி கட்டம் கட்டமாக வேறு இடங்களுக்கு

வவுனியா, ஒக்.05

கிளிநொச்சி நகரப்பகுதியில் உள்ள பிரதான அரசாங்க வைத்தியசாலை, கட்டம் கட்டமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றது. அதற்கான பணிகள் நேற்று ஆரம்பமாகின.

கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சத்தியமூர்த்தி இத்தகவலைத் தெரிவித்தார்.

இப்போது (நேற்று ஞாயிற்றுக்கிழமை) வைத்தியசாலையில் 157நோயாளர்கள் சிகிச்சை பெறுகிறார்கள். அவர்கள் மாவட்டத்தின் பிற சுற்றயல் வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டு வருகிறார்கள்-

வைத்தியசாலையில் உள்ள பெரும்பாலான மருந்துகள் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட வேண்டியவை. அவற்றை வேறு இடங்களுக்கு மாற்றுவது உடனடியாகச் சாத்தியமில்லை.-

(20ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாணத்தில் தங்கியுள்ள கிழக்கு மக்களுக்கான பதிவு இன்று

கொழும்பு, ஒக். 5

மேல் மாகாணத்திலும், கொழும்பிலும் கடந்த 5வருடங்களுக்குள் வந்து தங்கியுள்ள கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை இன்று பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் அவர்கள் தங்கியுள்ள இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் சென்று பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் இருந்து சென்று மேல்மாகாணம் மற்றும் கொழும்பில் ஐந்து வருடங்களுக்குள் தங்கியிருப்பவர்களுக்கான பதிவுகள் கடந்த மாதம் 21 ஆம் திகதி மேற் கொள்ளப்பட்டன என்பது தெரிந்ததே. (அ-1-2)

## இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் மத்திய அரசு முனைப்புடன் செயற்படவில்லை

### ஜெயலலிதா கண்டிக்கிறார்

புதுடில்லி, ஒக்.5

இலங்கைத் தமிழர்களின் விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசாங்கம் உரிய முனைப்புடன் செயற்படவில்லை என தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்திய மத்திய அரசாங்கம், இலங்கைத் தமிழர்களது பிரச்சினை குறித்து தொடர்ந்தும் மௌனம் சாதித்துவருவது கண்டனத்துக்குரியது (20ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகரிலிருந்து படையினர் இப்போது 2 கிலோ மீற்றர் தூரத்தில்!

வவுனியா, ஒக்.5

கிளிநொச்சி நகரில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் இப்போது இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரில் 3 ஆயிரத்து 500 புலிகள் மட்டுமே தற்போது உள்ளனர். கிளிநொச்சி அவர்களது கோட்டையாக இருப்பதால் அடுத்த ஓரிரு நாள்களில் அவர்களுக்கு இறுதிப்போராக படையினரின் முன்னேற்றம் இருக்கப் போகின்றது.

### இராணுவத் தளபதி அறிவிப்பு



இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத்பொன்சேகா இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

கள நிலைமை குறித்து அவர் மேலும் பின்வருமாறு விவரித்தார்.

பயங்கரவாதிகளின் தாக்குதலை முறியடித்து படையினர் வெற்றிகரமாக முன்னேறிவருகின்றனர். கடந்த இரண்டு நாள்களில் படையினர் தமது முன்னணிக் காவலரண்களை இரண்டு கிலோமீற்றரினால் விஸ்தரித்துள்ளார்கள். இராணுவத்தினர் கிளிநொச்சி மீது பீரங்கித் தாக்குதல்களை இப்போது ஆரம்பித்துள்ளனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பதுங்கு குழிகள்மீது ஹெலிகொப்டர்கள் தாக்குதல்

கொழும்பு, ஒக். 5

அக்கராயன் குளத்துக்கு வடகிழக்கே 3.5கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் பதுங்குகுழிகளின் தொடர் மீது நேற்றுக் காலை 9.15மணிக்கு ''எம்.ஐ.24'' ரக ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தின என்று ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.(20ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி விளாங்குளத்தில் படையினரின் முன்நகர்வு முறியடிக்கப்பட்டது - புலிகள்

வவுனியா, ஒக். 5

வன்னி விளாங்குளத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30மணிக்கு இராணுவத்தினர் மேற்கொண்ட முன்நகர்வு நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் 5படையினர் கொல்லப்பட்டனர்; 10படையினர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் படையினர் சோதனை

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகலுக்குப் பின்னர் படையினர் தேடுதல்களை மேற்கொண்டனர்.

வைத்தியசாலையின் பின்புறம் அமைந்துள்ள பிரேதசாலை மற்றும் இரத்தவங்கி, ஆய்வுகூடம் உட்பட அந்த பிரிவுகளில் அமைந்துள்ள கட்டடங்கள் என்பன துரு

(20ஆம் பக்கம் பார்க்க)

## பன்றிக்கெய்த குளத்தில் விடுதலைப்புலிகளின் 4 பலமான நிலைகளைக் கைப்பற்றி விட்டோம்

### படைத்தரப்பினர் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.5

கிளிநொச்சி மாவட்டத்தில் பன்றிக்கெய்த குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகளின் பலமான நான்கு நிலைகளைப் படையினர் கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

முதலாவது மோதல் முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றது (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவைக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முதல்வர்

கொழும்பு, ஒக். 5

கடந்த வியாழக்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும் (பிள்ளையான்) பங்குபற்றினார்.

அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் கலந்து கொண்டார்.

மாகாண அபிவிருத்தி தொடர்பா

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

25ஆவது ஆண்டு நிறைவு காணும்
மணி கல்வி நிலையத்திற்கு
எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.
மணி கல்வி நிலையம்,
தலையாழி,
கே.கே.எஸ் வீதி,யாழ்.
வாழ்த்துவோர்
தரம் 11 மாணவர்கள் (2008).

மலிவு மலிவு
அநேகரின்
வேண்டுகோளுக்கிணங்க
தீபாவளியை முன்னிட்டு சகல
துணி வகைகளும் மிகக் குறைந்த விலையில், சகல றெடிமேட்
ஆடைகளும் மேலதிக விசேட கழிவுடனும் பெற்றுக்கொள்ள,
27.09.2008 தொடக்கம் 27.10.2008 வரை விரையுங்கள்.
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

உங்கள் திருமுருகன் கொம் நெற்றில்
சகல விதமான கணனி உதிரிபாகங்களும் குறைந்த விலைகளுடன்.......
Your Best Chance
2.0 GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GB Hard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
17" LCD Monitor, UPS
Keyboard & Optical Mouse,
Speaker
1.8GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GBHard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
15" CRT Monitor, UPS
Keyboard & Optical Mouse
Speaker
Computer tables&Chairs
Flash Drive-TDK, adata,Kingston
Mp3,Mp4 Players
Sunglass with Mp3 player
Printers, Scanners & Woofers
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)
வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு
3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு
750/= ரூபா விதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத
1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு,வெளிநாடுகளுக்கு
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள்,
உணவுப் பொருள்கள், உடுபுடவைகள்
மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன
ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப்
பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
Money Master
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

இகம்
01
08
1948



பரம்
05
09
2008

### அமரர் கார்த்திகேசு தர்மலிங்கம்

அன்பு நிறை குடமாய்- எமை
ஆளாக்கி வாழவைத்து- பேர்
இன்ப நிலை எய்திவிட்ட
எங்கள் தலைவா! மாதம் ஒன்று சென்றால்
எம் உள்ள முனை மறவாதே- நும்
ஆத்மா சாந்திபெற நிதம் நாம் துதிப்போம்.

கடந்த 05.09.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரது அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.10.2008) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் யாவரும் இதனை தனிப்பட்ட அழைபபாக ஏற்று தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

குப்பிளான் தெற்கு, ஏழாலை. குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

SONY ERICTIONS K 530 I மொடல் கையடக்க தொலைபேசி 4.10.2008 யாழ்ப்பாணத்திற்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K.தர்மினி, 7 ஆம் கட்டை, சங்கானை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

T.P 0774656069

## தேவை

பழைய கட்டட இடிபாடுகள், கட்டடங்கள் விற்பனைக்கு உள்ளவர்கள் கீழ் காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

கிரிஷா அரைக்கும் ஆலை,
ஆடியபாதம் வீதி.
(கல்வியங்காட்டுச் சந்திக்கு அருகாமை).

## தேவை

தையல் வேலையில் முன் அனுபவமுள்ள ஆண்கள் உடனடியாகத் தேவை.

தொடர்பு:
சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 0777 286070

## வேலை வாய்ப்பு

கணனி ரைப் செற்றிங் செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள் (பெண்கள்) தேவை.

பரணி தொழில் நுட்பசேவை,
166, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.2227442

## நன்றி கூறுகின்றோம்

உலக ஆசிரியர்கள் தினத்தில் எம்மைக் கௌரவித்து, வாழ்த்தி, ஆசியுரை வழங்கிய யாழ்.வலய கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் பெரியோர்களுக்கு
எம் இதயபூர்வமான நன்றிகள்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/சென்.ஜேம்ஸ் மகளிர்
பாடசாலை.

## வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினம் ஒக்ரோபர் - 5

அன்பார்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றி உச்சப் பயன்பாட்டிற்கு மாணவர்களை ஆற்றுப்படுத்தும் இப்பணியில் பங்குகொள்ளும் எங்கள் அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புள்ள சேவைக்கு இந்நன்னாளில் நன்றியுணர்வுடன் இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். ஆசிரியத்துவம் புனிதமானது. ஆசிரியத்துவத்தின் மாண்பைப் போற்றுகின்றோம்.

வாழ்த்துவோர்:
கோட்டக்கல்வி அலுவலகம் (உடுவில்), மருதனார்மடம்.
கோட்டக் கல்விப்பணிப்பாளர், பெற்றோர், உடுவில் கல்விச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது இசைக் கல்லூரியில்
புல்லாங்குழல் ஆசிரியராகப்
பணியாற்றிய
திரு. வே.க.சண்முகராசா (Rtd G.S)
அவர்கள் "கலைஞானச்சுடர்" எனும் சிறப்பு விருதைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கலைச்சேவை தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

54, விபுலானந்தர் வீதி, [illegible] யாழ்ப்பாணம்.
சீதவாஹினி இசைக்கல்லூரி சமூகம், யாழ்ப்பாணம்.

வெள்ளி விழா காணும்
மணி கல்வி நிலையத்திற்கு
எமது மனங்கனிந்த வாழ்த்துகள்
மணி கல்வி நிலையம்,
தலையாழி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (79018)
வாழ்த்துவோர்:
தரம் 10 மாணவர்கள் (2008).

# மரண அறிவித்தல்கள்

## குருசாமி பிரேமசுந்தரம்

இல.35, கச்சேரி கிழக்கு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட குருசாமி பிரேமசுந்தரம் (கேதார்) 02.10.2008 வியாழக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் குருசாமி - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், அருளானந்தம் - ஒய்யாரலஷ்மி தம்பதியினரின் அன்பு மருமகனும், கலாராணி (பொபி)யின் அன்புக் கணவரும், அஸ்வினி, அச்சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்கலேஸ்வரி, காலஞ்சென்ற பத்தசுந்தரம் (மின்சாரசபை பணியாளர்), கனகேஸ்வரி, நகுலேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குகதாசனின் (மின் அட்தியட்சகர்) உடன் பிறவா சகோதரனும், சுபாங்கனியின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 222 6362 (சி/55500)

தகவல்:
திருமதி உதயகுமார் சுபாங்கனி
(சுபா - பெறாமகள்).

## சபாரத்தினம் சசிகுமார்



சரவணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, சிவாஸ் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சசிகுமார் (கிஷாக் கபே) நேற்று முன்தினம் (03.10.2008) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சபாரத்தினம் - சந்தானலட்சுமி தம்பதியினரின் செல்வப் புதல்வனும், திருமகள் (ஆசிரியை, யா/பெரியபுலம் ம.வி), சாந்தகுமார், கலைச்செல்வி, நிர்மலா, உமையாள் (நிகழ்ச்சித் திட்டமிடல் உதவியாளர், யாழ்.பிரதேச செயலகம்), சுகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவநீதகாந்தன் (லிங்கம் ஸ்ரோர்ஸ்), தமிழ்ச்செல்வி, மகேந்திரநாதன், முத்துராசா, பன்னீர்செல்வன் (ஆசிரியர், யா/Dr.தியாகராஜா ம.ம.வி, காரைநகர்) ஆகியோரின் மைத்துனரும், கிருஷாந்தி, துஷாந்தி ஆகியோரின் சித்தப்பாவும், கிஷாந்தன், திலக்ஷன், அபிரவன், காலஞ்சென்ற மயூரன் மற்றும் கோசலா, சஞ்சீவினி, தசாங்கி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவாஸ் லேன், அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (79019)

தகவல்:
இ.சபாரத்தினம்
(தந்தை).

## இராமலிங்கம் கந்தையா

(இளைப்பாறிய அதிபர்)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் கரம்பன் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கந்தையா நேற்று (04.10.2008) சனிக்கிழமை உடையார் கட்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற பரத்துவாசன் (முன்னாள் விரிவுரையாளர், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், மொறட்டுவ), முகுந்தன் B.Sc. (பிரான்ஸ்), இளங்கோவன் (கால் நடை வைத்தியநிலையம், புதுக்குடியிருப்பு), கலாவல்லி (நூலகர், பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிதேவி (அனலைதீவு), அருந்தவராணி (பிரான்ஸ்), அருந்தவம் (ஆசிரியர், உடையார் கட்டு மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் (இளைப்பாறிய அதிபர், நெடுந்தீவு) சகோதரரும், நடராசா (இளைப்பாறிய எழுதுவினைஞர், இந்தியா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், லவன்பிரகலாத், பராந்தகன், மதுமதி, சாண்டில்யன், இளவேனில், இலக்கியன், இரமணன், ஆரணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை உடையார் கட்டு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பா.கலாவல்லி (மகள்),
இல.8, இராச வீதி,
கல்வியங்காடு, நல்லூர். (79020)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் நலனுக்காகத் தமிழகக் கட்சிகள் ஒன்றுபட்டு ஒரே குரலில் ஒலிக்கும் காலம் வருமா?

வன்னி மீதான இலங்கை அரசின் தாக்குதல்கள் அதிகரித்துச் செல்கின்ற வேளையிலே மீண்டும் தமிழகத்திலிருந்து ஈழத்தமிழருக்கு ஆதரவான எழுச்சி அலை ஒன்று கிளம்பியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, தேசிய முற்போக்குத் திராவிடர் கழகம், மறுமலர்ச்சி உலகத் தமிழர் பேரவை எனத் தமிழகத்தின் மிக முக்கியமான, அரசியல் செல்வாக்குக் கொண்ட கட்சிகளும், அமைப்புகளும் கச்சையை இறுகக் கட்டிக் கொண்டு ஈழத் தமிழருக்கு ஆதரவான அகிம்சைப் போராட்டக் களத்தில் அவசர அவசரமாகக் குதித்திருக்கின்றன.



அதனைக் கண்டதும் ஈழத் தமிழருக்காக அதிகம் போராடியது யார்? கண்ணீர் சிந்தியது யார்? என்கிற பட்டிமன்றத் தோரணையில் போட்டி போட்டுக் கொண்டு அறிக்கைகளும், அழுகைகளும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி முதற்கொண்டு எல்லாத் தமிழக அரசியல்வாதிகளிடம் இருந்தும் வெளிக்கிளம்பத் தொடங்கியுள்ளன.

ஈழத்தமிழருக்கு ஏதேனும் ஒன்றென்றால் அலறித் துடித்துக் கொண்டு, ஓடி வந்து தமிழகம் உதவி செய்வதும், தமிழகத்தையே தமது தாயகமாக ஈழத்தமிழர்கள் உருவகப் படுத்திக் கொண்டு, இலங்கை பற்றிய நிலவரங்களைக்கூட 'இந்திய வானொலிச் செய்திகளை'க் கேட்டு அறிந்து வந்ததுமான நகமும்சதையும் போன்ற பிணைப்பு மிக நீண்டகாலமாகவே நிலவி வந்தது. ஆனாலும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணத்தோடு எல்லாமே தலைகீழாகிப் போனது. ஈழத் தமிழருக்கும் தமிழகத்தாருக்கும் இடையேயான தொப்புள் கொடி அறுத்தெறியப்பட்டது போல் தமிழகத்தில் வெகுவேகமாகக் காரியங்கள் அரங்கேறத் தொடங்கின. 'தடா', 'பொடா' என்று வகை வகையான சட்டங்கள் தடல்புடலாகக் கொண்டு வரப்பட்டு, ஈழத்தமிழருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்களெல்லாம் சிறையில் அடைக்கப்பட்டனர். புலிகளுக்கு ஆயுதங்கள், பொருள்கள் என்பவற்றைக் கடத்துவதாகத் தெரிவித்து ஏராளமான ஈழத்தமிழர்களும் கைது செய்யப்பட்டனர்.

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற சூத்திரத்திற்கேற்ப, முன்னெப்போதும் இல்லாதளவுக்கு இலங்கை அரசோடு இந்திய மத்திய அரசு உறவு கொண்டாடத் தொடங்கியது. கடற்புலிகளின் நடமாட்டத்தைப் பற்றிய தகவல்களை இலங்கைக் கடற்படைக்குத் துல்லியமாகத் தெரிவிக்கும் கைங்கரியத்தையும் இந்திய அரசு செய்யத் தொடங்கியது. இதைவிட அக்கம் பக்கத்துக்குத் தெரியாமல் நவீன இராணுவ உபகரணங்களையும், ஆயுத தளபாடங்களையும் இலங்கை அரசுக்கு அள்ளிக் கொடுப்பதிலும் இந்திய அரசு குறைவைக்கவில்லை.

சில வேளைகளில், மிக இரகசியமான முறையில் ஆளணி உதவிகளையும் இந்தியா செய்து வந்துள்ளது. அண்மையில் வன்னிக் கூட்டுப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பெருந்தாக்குதலில் சிதறிப்போன இந்தியா -II ரக வான்வெளிக் கண்காணிப்பு ராடரும், அந்த ராடரை இயக்கிக் கொண்டிருந்த இரு இந்திய அதிகாரிகள் காயமடைந்ததும் இந்திய மத்திய அரசு ஈழத்தமிழ் மக்களுக்குச் செய்து வந்த துரோகத்தைத் துகிலுரித்துக் காட்டியது. இவ்விடயம் ஏற்கனவே நீறுபூத்த நெருப்பாகத் தமிழக மக்களின் மனங்களுக்கிடையே புதையுண்டு கிடந்த ஈழத்தமிழர்கள் மீதான அக்கறையை, அதிகப்படுத்தியது. மக்களின் எண்ண அலைகளுக்கு ஏற்றவாறு செயற்படா விட்டால் பதவி நாற்காலிகளில் இருந்து தூக்கியெறியப்பட்டு விடுவோமென்ற பயத்தில் இதுநாள்வரையும் ஈழத்தமிழர் விடயத்தில் பாராமுகமாக இருந்த கட்சிகள் கூட, - குறிப்பாக தி.மு.க, அ.தி.மு.க போன்ற கட்சிகள் - ஈழத்தமிழருக்காய் ஒப்பாரி வைத்தபடி பல்வேறு போராட்டங்களையும் நடத்தத் தொடங்கியுள்ளன.

இதற்கு முன்னரும் இலங்கைத் தமிழ் மக்கள் அரச படைகளால் அழிவுகளை எதிர்கொள்கின்ற வேளைகளிலும் சிறு சிறு எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. ம.தி.மு.க, பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், உலகத் தமிழர் பேரவை போன்ற அரசியற்பலம் குறைந்த கட்சிகளாலேயே இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. எனவே சிறுகட்சிகளால் நடத்தப்பட்ட ஈழத்தமிழருக்கான அகிம்சைப் போராட்டங்களும், கவனயீர்ப்பு நிகழ்வுகளும் இந்திய மத்திய அரச யந்திரத்தில் எவ்வித அசைவையும் உண்டு பண்ணவில்லை. தன்னுடைய அதிகார நலனைத் தக்கவைப்பதிலேயே இந்திய மத்திய அரசு குறியாய் இருந்தது.

இந்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போது வன்னிக்கு

## தமது அரசியல் இலாபங்களுக்காக இடைவெளிவிட்டு வித்தை காட்டுவதால் எதுவுமே தேறாது———!

வந்து சென்ற தமிழகத்தைச் சேர்ந்த புத்தி ஜீவிகள், கலை இலக்கிய கர்த்தாக்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் மூலம் தமிழகத்தில் மீண்டும் ஈழத்தமிழருக்கு ஆதரவான எண்ண நிலை உருப்பெறத் தொடங்கியது. புலிகள் பற்றியும்,



அவர்களின் நடவடிக்கைகள் பற்றியும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பினையும் புரிந்துணர்வுக் காலம் தமிழக மக்களுக்கு வழங்கியது. இதனால் இதுவரை காலமும் 'ராஜீவ் கொலையுடன்' தமிழக மக்களின் மன ஓரங்களில் ஒட்டிக் கொண்டிருந்த ஈழத் தமிழர் விரோதப் போக்கு ஓரளவேனும்விலக்கப்பட்டது. ஈழத் தமிழர்களுக்கு தமிழீழமே ஒரே தீர்வு என்ற ஒருமித்த கருத்து நிலை தமிழகத்தில் தோன்றியது.

இதனை உறுதி செய்வது போல் அண்மையில் 'ஆனந்த விகடன்' என்ற தமிழகத்தின் முன்னணி வார இதழ் நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவுகள் அமைந்திருந்தன. தமிழகத்தில் அதிகம் விற்பனையாகும் வாரஇதழான 'ஆனந்த விகடன்' நடத்திய கருத்துக் கணிப்பின் போது, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் நியாயமானது எனவும், தமிழீழம் அமைவதே ஈழத் தமிழருக்குச் சரியான தீர்வாக அமையும் எனவும் தமிழக அரசியற் கட்சிகள் ஒன்றிணைந்து ஈழத் தமிழர் நலனுக்காகக் குரல் கொடுக்க வேண்டுமெனவும் பெரும்பாலானோர் தமது தீர்ப்பினை வழங்கியிருந்தார்கள்.

ஆனந்த விகடன் வார இதழின் கருத்துக் கணிப்பினை வெறுமனே 'காகித முடிவாகக்' கருதவியலாது. ஏனெனில் இதற்கு முன்னர் ஆனந்த விகடனின் கருத்துக் கணிப்பு முடிவுகள் தமிழகத்தில் ஆட்சிக் கட்டிலினை பலமுறை பலமாக அசைத்துள்ளன.எனவே தமிழக மக்களின் எண்ண வெளிப்பாடாகவே ஆனந்த விகடனின் கருத்துக் கணிப்பைக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தமிழக அரசின் கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன.

இதனால் இதய சுத்தியோடு இல்லாவிட்டாலும் தமது அரசியல் இருப்பினைத் தக்க வைத்துக் கொள்வதற்காவது ஈழத்தமிழருக்காகப் போராட வேண்டிய அவசியத்தில் தமிழகத்தின் முக்கிய பெரிய கட்சிகள் இருந்தன. ஆனால் இதுவரை காலமும், ஈழமக்களின் கண்ணீரைக் கணக்கெடுக்காமல் இருந்துவிட்டு, இப்போது திடீரென 'ஈழமக்கள் எங்கள் உடன் பிறப்புகள், தொப்புள் கொடி உறவுகள், துடிக்கிறது இரத்தம், முடியட்டும் யுத்தம்' என்றெல்லாம் வீர வசனம் பேசிக் கொண்டு ஓடிவந்தால் அது அரசியற் கட்சிகளின் போலித்தனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும். எனவே சரியான சந்தர்ப்பத்துக்காய் - ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடி நின்ற கொக்காய் - தமிழகக் கட்சிகள் கால் கடுக்கக் காத்திருந்தன. வவுனியா படைத்தளத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலும், வன்னி மீதான இராணுவ நடவடிக்கைகளும் ஈழத்தமிழர் பிரச்சினையில் மீண்டும் குரல் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை தாம்பாழத்தில் வெற்றிலை, பாக்கு வைத்து வழங்கியுள்ளன.

இராணுவ பயன்பாட்டுப் பொருள்களையும் ஆயுதங்களையும் இலங்கைக்கு இந்தியா வழங்கி வருவது ஏற்கனவே அரசல் புரசலாக எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. ஆனால் ஆளணி உதவி செய்வதென்பது எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் விடுதலைப்புலிகளின் விமானங்கள் பறப்பிலீடுபடும்போது கண்டறிவதற்காய் இந்திரா - II ரக இருபரிமாண ராடரை வழங்கியதோடு மாத்திரமல்லாது, அதனைச் சரியான முறையில் இயக்கி தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாரிகள் தரத்திலான இந்தியர்கள் இருவரையும் இலங்கைக்கு இந்திய அரசு கொடுத்திருந்தது. விடுதலைப் புலிகளின் தாக்குதலால் இவையெல்லாம் அம்பலத்துக்கு வந்தபோது, இந்திய மத்திய அரசின் செயற்பாட்டைக் கண்டிக்கும் வகையில் ஈழத்தமிழர் ஆதரவு என்ற முகமூடியை சந்தர்ப்பவாத தமிழக அரசியற் கட்சிகள் அணிந்து கொண்டு வெவ்வேறு வகையிலான அகிம்சைப் போராட்டங்களை நடத்தத் தொடங்கின.

வன்னிப் பகுதியில் தமிழ் மக்கள் மீது இலங்கை அரச படைகள் பிரயோகித்து வருகின்ற விமானத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுக்கள், பொருளாதாரத் தடைகள் என்பனவும் அவற்றால் ஏற்படுகின்ற அழிவுகளும் தமிழகக் கட்சிகளின் ஈழத்தமிழர் ஆதரவு நிலைக்கு இன்னமும் வலுச்சேர்த்தன. ஆனாலும் எல்லாத் தமிழக அரசியற் கட்சிகளும், அமைப்புகளும் தமது சுயநலத்துக்காகவே ஈழத் தமிழருக்காய் செயற்படுகின்றன என்பதும் உண்மையல்லத்தான். எந்த இடர் வரினும் எம்பணி தொடரும் என்பது போல தமக்கு நெருக்கடியான சூழ்நிலைகள் தோன்றும்போது, இலங்கைத் தமிழ் மக்களுக்காய் உழைத்த அரசியற் கட்சிகளும், அமைப்புகளும் தமிழகத்தில் இருக்கவே செய்கின்றன. எனினும் ஏலவே குறிப்பிட்டது போன்று போதிய அரசியல் வலு அவற்றுக்கு இல்லாத காரணத்தினாலும், அவை நடத்திய போராட்டங்கள் சர்வதேசத்தின் முன்னாலும், இந்திய அரசின் முன்னாலும் பயனற்றுப் போயிருந்தன.

இந்நிலையில்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில் அ.தி.மு.க, தே.மு.தி.க, ம.தி.மு.க, ல.தி.மு.க, பா.ம.க, விடுதலைச் சிறுத்தைகள், உலகத்தமிழர் பேரவை என - தி.மு.கா, காங்கிரஸ் கட்சிகள் தவிர்ந்த - தமிழகத்தின் எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து உண்ணாநிலைப் போராட்டமொன்றை நடத்த முற்பட்டன. இந்தப் போராட்டத்திற்கு ஆரம்பம் முதலே ஆதரவளித்த தமிழகத்தின் மிகப்பெரிய கட்சிகளில் ஒன்றான அ.தி.மு.க வழமை போல கடைசி நேரத்தில் காலை வாரிவிட்டது. தி.மு.கவுக்கு அடுத்தபடியாக தன்னுடைய அரசியல் எதிரியாகக் கருதும்

**சமகால விவகாரம்**

விஜயகாந்தின் கட்சியான தே.மு.தி.கவினர் உண்ணாநிலைப் போராட்டத்தில் பெருமெடுப்பில் கலந்து கொண்டதாலேயே அ.தி.மு.க கடைசி நேரத்தில் பங்கேற்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்த உண்ணாநிலைப் போராட்டத்துக்கு தன்னையும், தனது கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சி புறக்கணித்ததால் சீறியெழுந்த முதல்வர் கருணாநிதி உண்ணாநிலைப் போராட்டத்துக்குப் போட்டியாக செப்ரெம்பர் ஆறாம் திகதி ஈழத்தமிழர் ஆதரவுக் கூட்டமொன்றைப் பெருமெடுப்பில் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார். கூடவே நாடாளுமன்ற உறுப்பினராக தன்மகள் கனிமொழி மூலமாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் ஈழத்தமிழர்களின் அவலம் பற்றி தான் எடுத்துரைப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு ஒன்றுபட்டுக் குரல் கொடுப்பதில்கூட அரசியல் லாப நட்டக் கணக்குகளுக்கேற்ற வகையிலான காய் நகர்த்தல்களையே தமிழக அரசியற் கட்சிகள் மேற்கொண்டு வருவதனையே ஏட்டிக்குப் போட்டியான ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டங்களும், ஈழத்தமிழர்களுக்கு நான் என்னென்ன் செய்தேன் என்று அரசியற் தலைவர்கள் போடுகின்ற பட்டியலும் கோடி காட்டுகின்றன. இதனால் ஏதிலிகளாக நிற்கின்ற ஈழத்தமிழர்கள் மீது தமிழக மக்கள் கொண்டுள்ள உண்மையான அக்கறையையும், அதன் வெளிப்பாட்டினையும் கொச்சைப் படுத்துவதாகவே தமிழக அரசியற் கட்சிகளின் கோணங்கித் தனமான செயற்பாடுகள் அமைந்துள்ளன.

தமிழக மக்களின் எண்ண அலைகளுக்கு ஏற்றாற்போல ஒருமித்த குரலில் ஈழத்தமிழர்களின் அவலத்தை எடுத்துரைத்து, அந்த அவலங்களை நீக்கி, கண்ணீரைத் துடைக்க தமிழகக் கட்சிகளெல்லாம் முன்வரவேண்டும். அவ்வாறில்லாது வெறும் அரசியற் நலனுக்காகவும், போலிக் கௌரவத்திற்காகவும் ஈழத்தமிழர் பிரச்சினையை வைத்துப் பித்தலாட்டம் பண்ணும் வேலைகளில் தமிழக அரசியல்வாதிகள் இறங்கினால், அவர்கள் தமிழக மக்களால் மட்டுமல்ல, எதிர்காலத்தில் வரலாற்றின் பக்கங்களில் இருந்தும் தூக்கியெறிப்பட்டு விடுவார்கள் என்பதே காலத்தின் நியதியாகும்.

ஈழத் தமிழர்களின் நிம்மதியான வாழ்வுக்கும் உரிமைக்கும் வலுச்சேர்ப் பதற்காய் தமக்குள் ஒன்றுபட்டு, ஒரே குரலில் ஈழமக்களின் அவலங்களை ஒலிக்கின்ற அர்த்தமுள்ள நடவடிக்கைகளையே தமிழக அரசியற் கட்சிகளிடமிருந்து ஈழத்தமிழரும் எதிர்பார்க்கின்றனர். ✱

- ஊரன்பன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கற்பகப்பிள்ளையார் கோயில் லேன் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ஜெகநாதன் - நிர்மலாதேவி தம்பதியரின் புத்திரியும் யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவியுமான

**செல்வி தர்மினி**

2008 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவரது கல்விக்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் டச்சு வீதி கோப்பாய் தெற்கு மதுரம் இன்ஸ்ரிரியூட் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மணிராஜா கலாஜினி குடும்பம்
காந்தரூபன் சுகிதா குடும்பம்
ஈஸ்வரன் கவிதா குடும்பம்.

(78987)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா சிவசுப்பிரமணியம் (ஆனந்தம்) - பருத்தித்துறை



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சிவசுப்பிரமணியம் (ஆனந்தம்) அவர்கள் (30.09.2008) செவ்வாயக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - லட்சுமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பெரியதம்பி - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவி (இந்தியா) அவர்களின் அன்புக் கணவரும் ஞானராஜா (கண்ணன் - அமெரிக்கா), ஜீவராணி (ஜேர்மனி), ஜெயலட்சுமி (ஜேர்மனி), விஜயலட்சுமி (இங்கிலாந்து), நித்தியா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுசூயா (அமெரிக்கா), சிவானந்தம் (ஜேர்மனி), தர்மப்பிரியா (ஜேர்மனி), உதயகுமார் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனும் வேந்தன், மூர்த்தி, ஓவியன், கிருஷ்ணா, டினூஜன், சரண்யா, அபிநயா, நிவேதன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அருள்பிரகாசம் மற்றும் சிவயோகவதி (ஆஸ்திரேலியா), ஈஸ்வரி (இலங்கை), பாரதி இந்துநந்தினி (கனடா), சுவனேஸ்வரன் (ஜேர்மனி) அவர்களின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இராமநாதன், தங்கநாதன், பாக்கியநாதன், மங்கயற்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கண்ணன் (மகன் - அமெரிக்கா)
Cell: 1-646 - 483 - 9346
email:gsiva 007@gmail.com

## வடமராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு மானிய விலையில் உரம்

வடமராட்சி,ஒக்.4

காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள வடமராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு மானிய விலைக்கு உரம் வழங்கும்பணிகடந்தவியாழக்கிழமைமுதல்நடைபெற்று வருகிறது.

நெற்செய்கையாளர்களுக்கான மானிய விலை உரம் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு கமநல சேவை நிலையங்களில் களஞ்சியப்படுத்திவைக்கப்பட்டிருந்தன. அவற்றை விவசாயிகளுக்குவிநியோகிக்கும்நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புலோலி கமநல சேவை நிலையத்தில் வைத்து வடமராட்சிப்பிரதேச நெற்செய்கையாளர்களுக்குமானியவிலையாக350ரூபாவுக்கு உரம்வழங்கப்பட்டுவருகின்றன. (202-236)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன் முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ் பூத்த சுய தெரிவு முறை முன்னோடி, தனி மனித நிறுவுநர். சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துனர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. கொழும்பு நேரடித் தொலைபேசி - 2360488, 2360694, 4873929.

## 'லயம்' நுண்கலைப் பயிலகம்

(வண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக உள்ள யாகினி பிறிண்டேர்ஸ் வீட்டில்)

மிருதங்க வகுப்புக்கள்

- புதிய மிருதங்க வகுப்புக்கள் 09.10.2008 வியாழக்கிழமை
- விஜயதசமி அன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.
- சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல.0602211101 620, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

Econo Power C -70 மோட்டார் சைக்கிள், *Panasonic* ரேப் றெக்கோடர் என்பன விற்பனைக்குண்டு.. இல. 17. விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

1980ஆம் ஆண்டில் பிறந்த (மூல நட்சத்திரம், 4ஆம் பாதம்) கொழும்பில் பிரபல தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் மாணமகனுக்கு (செவ்வாய்க் குற்றமற்ற) கொழும்பில் சொந்த வீடு உள்ள மணமகள் தேவை. ஏனைய விவரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் நேரில் வரவும்). தொடர்பு: நரன் 0774163023 C/O. இ.மகேந்திரம் இருபாலை வீதி, கோண்டாவில் மேற்கு [உப்புமடச்சந்தி அருகில்].

## நூல் அமுது சஞ்சிகை வெளியீடு

மானிப்பாய் கிராம ஆனைக்கோட்டை உப அலுவலகத்தினால் "நூல் அமுது" என்ற சஞ்சிகை விரைவில் வெளியிடப்படவுள்ளதாக உபஅலுவலக பொறுப்பதிகாரி எஸ்.சந்திரமவுலி தெரிவித்தார். (202-100)

## மாபெரும் நட்சத்திர கலைவிழா



யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழக அனுசரணையுடன் கலாஷேத்ரா கலைஞரான திருமதி பிரசாந்தி உதயபாபு அவர்களின் நெறியாள்கையின் கீழ் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த ஆசிரியர்களின் மாணவர்கள் ஒரே மேடையில் இணைந்து கலக்கும் சலங்கையும் சந்தமும் நட்சத்திரக் கலை நிகழ்ச்சி வட இந்திய, தென் இந்திய நடனங்களை (*Folk Dance*) உள்வாங்கிய வித்தியாசமான கலை முயற்சி. காணத் தவறாதீர்கள்...!!!

இடம்: யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி (பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்)

காலம்: இன்று (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 3 மணி

குறிப்பு: ரிக்கெற்றுக்களை மண்டபவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்

விளம்பர அனுசரணை

| சீமாட்டி புடைவைக் கடல் | G.S.லிங்கநாதன் அன்கோ |
|---|---|
| 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | 47, பெரிய கடை, யாழ்ப்பாணம். |

கஜமுகன் காட்வெயர் 144, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## வசீகர தோற்றத்திற்கு சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO A/L 250

## A LIFE - TIME CHANCE STUDY MEDICINE



கிழக்கு ஐரோப்பாவில் (BELARUS)

Vitebsk State Medical University

Belarus க்குப் புறப்பட்டுச் சென்றுள்ள 9 ஆவது மாணவர் அணி



இன்றே விண்ணப்பித்து, 20 நாட்களுக்குள் புறப்படுங்கள்.

வங்கி அறிக்கை, விசா தொடர்பான விசாரணை அனுசரணையாளர் (Sponsors)-தேவையில்லை.

விசா 100 % உத்தரவாதம்.

A/L மாணவர்கள் அதிபர் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.

Recognized by Sri Lankan Medical Council(SLMC) & over 70 countries across the globe

மருத்துவக் கலாநிதி - MD (ஆங்கிலம் மூலம் 6 வருடம்)

அனுமதிபெற தொடர்புகளுக்கு 0773017883 (ஆங்கிலம் மற்றும் தமிழ்)

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office 37, School Lane, Colombo - 03. Tel : 2502012

Overseas Student Placement Department 111-1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.

www.patheacademy.org

## விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க BBS இன் மற்றுமொரு புதிய நல்லூர் வளாகம்

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும் பாலர் பாடசாலை

| | |
|---|---|
| PLAY GROUP | 2-3 Years |
| MONTESSORI | 3-4 Years |
| PRE-SCHOOL | 4-5 Years |

விசேட நிகழ்ச்சிகள்: English Concert, முத்தமிழ் விழா, ஒளி விழா, பட்டமளிப்பு விழா, Sports Meet, மாணவர் சித்திரம்/கைவேலைக் கண்காட்சி

சிறார்களுக்கு... Pre-Foundation, Foundation, Level 1,2,3,4 — படிப்படியாக ஆங்கில அறிவை விருத்தி செய்யும் 6 மாத கால பாடநெறிகள்.

G.C.E.(O/L), G.C.E.(A/L) கற்றோருக்கு.. IELTS, Diploma in English, Certificate in English



வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு வெளிநாட்டு / உள்நாட்டுத் தொழில் வாய்ப்புகளுக்கு சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கு

BRITISH BUSINESS SCHOOL
HOT LINE: 021-222 5796, 0773 627055
e-mail: british.businessschool@gmail.com

நல்லூர் (வளாகம் 1) : இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
நல்லூர் (வளாகம் 2) : இல:34, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
மானிப்பாய் வளாகம் : இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.
சுன்னாக வளாகம் : லக்சுமி கோட்டேச் கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
புலோலி வளாகம் : Dr.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை, புலோலி.

British BUSINESS SCHOOL — Where Students Come First

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்

## ஆசிரியத்துவம் குறித்த ஆசிரியர் தினச் சிந்தனைகள்

**ஒக்ரோபர் 05**

''மிருகக்காட்சிச் சாலையிலே நிகழ்ந்ததை அறிந்த பள்ளிக் குழந்தைகள் விரைவிலேயே படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டனர். ரவுடிகளாக மாறிவிட்டனர். அவர்கள் மதுவருந்தி விட்டு ஜன்னல்களை உடைத்துக் கொண்டு திரிவதாகத் தகவல். அவர்களுக்கு யானை மேல் நம்பிக்கையற்றுப் போயிற்று''

இப்படித்தான் முடிகிறது, ஸ்லவோமிர் ம்ரொசெக்கின் 'யானை' என்கிற போலந்துச் சிறுகதை.

போலந்து நாட்டு மாணவர்கள் மத்தியிலே வன்முறை தலைவிரித்தாடிய காலம் அது. வன்முறையால் பொதுச் சொத்துக்கள் நாசமாகிக் கொண்டிருந்தன. இந்த வன்முறைகளுக்குப் பின்னால் இருந்திருக்கக் கூடிய காரணங்கள் குறித்துப் பலரும் பல வகைப்பட்ட விளக்கங்களை வழங்கிக் கொண்டிருந்தபோது, இவற்றிற்கான பூடகமான விடையைக் கொடுத்ததற்காகச் சிலாகிக்கப்படும் கதைதான் 'யானை'.

கதையின் சாராம்சம் இதுதான். தலைநகரில் இருந்த மிருகக் காட்சிச் சாலையில் ஒரு யானையாவது இல்லாதிருந்தது ஒரு பெரிய குறை. அரசோ மிகுந்த நிதி நெருக்கடியில் இருந்தது. எனினும் மிருகக் காட்சிச் சாலைக்கு ஒரு யானை தேவை என்ற கோரிக்கை வலுத்ததால் அமைச்சரவையும் அதனை வாங்க ஒப்புதலளித்துவிட்டது.

## கற்று அறிவதைவிட யதார்த்தத்தைக் கண்டு பெறும் கல்வி மனதில் நிலையாகப் பதியும்

மிருகக் காட்சிச் சாலையின் இயக்குநர் ஓர் அற்பத்தனமான மனிதர். தன்னுடைய பதவியுயர்வினை மனதிலிருத்தி, யானை வாங்குவதற்கான அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்த பின்னர், அவர் அமைச்சரவைக்கு ஓர் ஆலோசனை அறிக்கையை வழங்கினார். யானை மிகவும் விலை உயர்ந்தது. அதனிலும் மேலாக அதன் பராமரிப்புக்கு நிறையச் செலவு பிடிக்கும். ஆகவே இவ்வாறான வீண் செலவுகளைத் தவிர்ப்பதற்காக தடித்த, ரப்பரினால் ஆன, யானை போலவே இருக்கக் கூடிய, காற்றடைத்த யானை ஒன்றை உருவாக்கலாம். இந்த யான்னை மந்தமானது. அரிதாகவே

**சிறப்புக் கட்டுரை**

அசையும் என்றதோர் அறிவித்தல் பலகையைப் போட்டு எவருக்கும் சந்தேகம் எழாதபடி சமாளித்துவிடலாம். இதனால் மீதமாகும் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்காகச் செலவழிக்கலாம். தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான எனது சிறு பங்களிப்பாக இதனை நான் விதந்துரைக்கிறேன் என்றவாறாக அமைந்தது அவரது அறிக்கை. அந்த அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது தான் எல்லாவற்றிலும் மேலான துரதிஷ்டமாக அமைந்துவிட்டது.

யானை மிருகக் காட்சிச் சாலைக்கு வந்தது பள்ளிக் குழந்தைகளுக்கு மிக்க மகிழ்ச்சி. முதல் நாளே யானையைப் பார்க்க அவர்கள் போட்டி போட்டனர். ஆசிரியர்கள் அவர்களுக்கு யானை மகாத்மியம் குறித்து விலாவாரியாக விளக்கமளித்துக் கொண்டிருந்தனர். யானை துதிக்கையால் மரங்களைப் பிடுங்குவது குறித்தும், நிலத்தில் வாழும் மிகப் பெரிய மிருகம் இது தான் என்பது குறித்தும், ஒன்பதினாயிரம் தொடக்கம் பதின்மூவாயிரம் இறாத்தல் வரை இருக்கக்கூடியதான அதன் எடை குறித்தும் அவர்கள் விவரித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது தான் அந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

''அந்தக் கணத்தில் யானை காற்றுக்கு நடுங்கி மேலே எழும்பியது. சில விநாடிகள் தரைக்குச் சற்று உயரத்தில் ஊஞ்சலாடியது. ஆனால் திடீரென வந்த காற்று அதன் பருத்த நிழலுருவம் ஆகாயத்திற்கெதிராகத் திரும்பும் வரை மேல்வாக்கில் தள்ளியது. அதன் பாத வட்டங்களையும், பானை வயிற்றையும் தரையிலிருந்த பார்வையாளர்களால் சிறிது நேரமே பார்க்க முடிந்தது. சீக்கிரத்திலேயே காற்றின் உந்துதலால் வேலிக்கு மேலே மிதந்து மர உச்சிகளுக்கப்பால் மறைந்துவிட்டது. கூண்டுகளுக்குள்ளிருந்த குரங்குகள் பிரமித்துப் போய் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தன. அடுத்துள்ள தாவரவியற் பூங்காவில் முட்கள்ளிச் செடியின் முள் குத்தி யானை காற்றிறங்கிக் கிடந்ததையும் பள்ளிக் குழந்தை கள் சென்று பார்த்தார்கள்''

இவ்வாறுதான் நிகழ்ந்தது யானையின் மீதான பள்ளிக் குழந்தைகளின் நம்பிக்கை இழப்பும் அதன் விளைவான வன்முறைகளும் என முடிவுற்றது ம்ரொசெக்கின் 'யானை' சிறுகதை.

* * *

இளம் சிறார்கள் தங்களுக்குச் சொல்லப்படுவதனூடாக கற்பதை விட யதார்த்தங்களைத் தரிசிப்பதற்கூடாகவே அதிகமாகக் கற்கிறார்கள். பௌதீக உலகு குறித்த தரவுகள், தகவல்கள், கொள்கைகள், கோட்பாடுகள் போன்றவற்றை அவர்கள் 'சொல்லிக் கொடுப்பதனூடாகக்' கற்றுக் கொள்ளலாம். ஆயினும் தனி மனித நடத்தை, சமூக நடத்தை, சமுதாயத் தோற்றப்பாடுகள் என்பவை குறித்து 'சொல்லிக் கொடுத்து' அறிவதை விடவும் யதார்த்தங்களை உள்வாங்கிக் கொள்வதனூடாகவே அவர்கள் அதிகம் அறிந்து கொள்கின்றனர்.

சூழல் யதார்த்தத்தை தமது அனுபவ வாயிலாக உள்வாங்கி அதனை அக உலகில் படிமங்களாக படியவைப்பதனூடாகவே மனிதர்களுடைய ஆளுமை, உலக நோக்கு என்பன படிப்படியாகக் கட்டமைக்கப்படுகின்றன என்பது கல்வியியலாளர்களின் கருத்து.

இவ்வகையில் 'சூழலின் யதார்த்தம்' மாணவர்களின் வாழ்வில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. குடும்பச் சூழல், வகுப்பறைச் சூழல், பாடசாலைச் சூழல், பாடசாலைச் சமூகம், உள்ளூர்ச் சூழல், தேசியச் சூழல், பிராந்தியச் சூழல், சர்வதேசியச் சூழல் என விரிந்து செல்லும் சூழல் யதார்த்தங்கள் மாணவப் பருவ ஆளுமை, உலக நோக்கு என்பவற்றில் செல்வாக்குச் செலுத்துவதாக, தாய்லாந்து சத்ய சாயி கல்வி நிறுவக இயக்குநரும், முன்னாள் 'நாசா' நிறுவன விஞ்ஞானியுமான கலாநிதி ஆர்ட் ஒம் ஜூம்சாய் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.

மாணவப் பருவத்தில் தான் விழித்திருக்கும் நேரத்தின் பெரும்பகுதியை ஒரு மாணவன் தனது பாடசாலைச் சூழலிலேயே செலவிடுகிறான். இதனால் பாடசாலைச் சூழலின் யதார்த்தம் அவனது மனவுலகின் செழுமையில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக அமைகின்றது.

பாடசாலைச் சூழலின் இயல்புருவாக்கத்தில் ஆசிரியர்களது வகிபாகம் மிகவும் முக்கியமானது. ஆசிரியர்களது தனி மனித நடத்தைக் கோலங்கள், தனது மனவெழுச்சிகளை ஆற்றுப்படுத்தும் பாங்கு, பாடசாலைச் சூழலில் நிகழும் அவர்களது சமுக உளபாட்டங்கள், அச்சூழலில் எழும் முரண்பாடுகளைக் கையாளும் விதம், வகுப்பறைக் கற்பித்தலிலும், புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களுக்கு இருக்கும் அர்ப்பணிப்பு, தொழிற் தேர்ச்சி என்பவை பாடசாலைச் சூழலின் இயல்புருவாக்கத்தில் மிகவும் முக்கியமானவை.

ஆசிரியர்களின் அர்ப்பணிப்புணர்வு நிலை, தொழிற்தேர்ச்சி மட்டம் ஆகியவற்றின் வேறுபட்ட கூட்டிணைவுகளின் அடிப்படையில் ஆசிரியர்களைப் பருமட்டான நான்கு வகுதியினராக நோக்கலாம். இவர்களுள் முதலாவது வகுதியினர் குறைவான அர்ப்பணிப்பு ணர்வு நிலையையும் தாழ்ந்த தொழிற் தேர்ச்சி மட்டத்தையும் பிரதிபலிக்கும் நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டுபவர்கள்.

நீண்ட காலமாகக் கற்பித்தலில் ஈடுபட்டு வருவதால் ஏற்படும் மனச்சோர்வு, விரக்தி நிலை, மாறிவரும் உலகச் சூழ்நிலைக்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ள முடியாமை ஆகிய காரணங்களினால் சில முதுநிலை ஆசிரியர்கள் இவ்வாறான நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டுவது மிகவும் துரதிஷ்டவசமானது. இவர்களை விட, வேறு வழிகளற்றுக் கடைசிப் புகலிடமாக ஆசிரிய சேவைக்கு வந்ததாகத் தம்மைச் சுருக்கிக் கொள்ளும் சில இளநிலை ஆசிரியர்களும் தம்மைத் தாமே இவ்வகுதிக்குள் சிறைப்படுத்திக் கொள்கின்றனர்.



இரண்டாவது வகுதியினர் குறைவான அர்ப்பணிப்புணர்வு நிலையையும், உயர் தொழிற்தேர்ச்சி மட்டத்தையும் பிரதிபலிக்கும் நடத்தைக் கோலங்களை வெளிக்

## மாணவப் பருவ ஆளுமையில் சூழல் யதார்த்தங்கள் செல்வாக்குச் செலுத்தும்

காட்டுபவர்கள்.

சில பிரபலமான தனியார் கல்விநிலைய ஆசிரியர்கள் இவ்வகுதியினருக்குரிய வகைமாதிரிகளாகத் திகழ்கின்றனர். தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதற்கும், அதனூடாகப் பொருளாதார மேல்நிலையை அடைவதற்கும் தமது சக்தி முழுவதையும் செலவிடுவதால், பாடசாலைச் சூழலுக்குத் தேவையான அர்ப்பணிப்புணர்வு நிலையை இவர்கள் வெளிக்கரட்டுவதில்லை. இவ்வாறானவர்களைத் தவிர, பாடசாலையின் முகாமைத்துவக் குறைபாடுகளால் வகுப்படுத்தப்பட்ட (*Traumatized*) திறமை வாய்ந்த ஆசிரியர்களும் கால ஓட்டத்தில் இவ்வகுதியினருக்குரிய நடத்தைக் கோலங்களையே வெளிப் படுத்துகின்றனர்.

மூன்றாவது வகுதியினர் நிறைவான அர்ப்பணிப்புணர்வு நிலையையும், தாழ்வான தொழிற்தேர்ச்சி மட்டத்தையும் பிரதிபலிக்கும் நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டுபவர்கள்.

மிக இளநிலை ஆசிரியர்கள் சிலரும், தமது தனிப்பட்ட இயல்புகள், வாழ்க்கைப் பின்னணி ஆகியவை காரணமாக வாண்மை விருத்திசார் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத பிற ஆசிரியர்கள் என்போர் இவ்வகுதியில் அடங்குகின்றனர்.

நிறைவான அர்ப்பணிப்புணர்வு நிலையையும், உயர் தொழிற் தேர்ச்சி மட்டத்தையும் பிரதிபலிக்கும் நடத்தைக் கோலங்களை நான்காவது வகுதியினர் வெளிக்காட்டுகின்றனர். செய்யும் தொழிலைத் தெய்வமாக மதிக்கும் பல முதுநிலை ஆசிரியர்கள், உயர்வான அறக்கோட்பாடுகளைக் கைக்கொள்ளும் மிகச் சில பிரபல தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், முன்னேறத் துடிக்கும் இளநிலை ஆசிரியர்கள் என்போர் இவ் வகுதியினுள் அடங்குகின்றனர். இவ்வகுதியினரே நல்லாசிரியர்களுக்கான குணவியல்புகளை வெளிக்காட்டுபவர்கள்.

ஒரு பாடசாலைச் சூழலில் நான்காவது வகுதியினர் பெரும்பான்மையினரையும், செல்வாக்குடையவர்களாகவும் விளங்குமிடத்து அச்சூழல் மகோன்னத நிலையை அடைகின்றது. எனினும் இன்று பெரும்பாலான பாடசாலைகளிலும் இவ்வாறான மகோன்னத நிலை, அச்சம் தரும் வகையில் அருகி வருகின்றது. முதலிரு வகுதிகளையும் சார்ந்த ஆசிரியர்கள் பெரும்பான்மையினராகவும், செல்வாக்கு மிக்கவர்களாகவும் உருவெடுத்து மற்றைய வகுதியினரை, குறிப்பாக நான்காவது வகுதியினரை, விளிம்பு நிலைக்குத் தள்ளுவதனூடாக ஆரோக்கியமான பாடசாலைச் சூழல் இப்போதெல்லாம் அருகிவருகின்றது. நல்லாசிரியர்கள் புறமொதுக்கப்படும் செயன்முறையைத் தடுக்க அல்லது கேள்விக்குள்ளாக்கத் திராணியற்றதாகப் பாடசாலை முகாமைத்துவம் அமையும்போது சூழ்நிலை மிகவும் மோசமடைகின்றது.

இவ்வாறான எதிர்மறையான பாடசாலைச் சூழலில் தமது மாணவப் பருவத்தினைச் செலவிடும் மாணவர்களின் ஆளுமையும் உலக நோக்கும் மிக மோசமான முன்னுதாரணங்களினால் பின்னப்படுகின்றன. எதிர்மறையான யதார்த்தங்களைத் தரிசித்தபடியே அவர்களது கற்றல் நிகழ்வதனால் 'போதனைகள்' மீது நம்பிக்கை வைப்பதற் கான மிகக் குறைந்த ஏது நிலை கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதன் விளைவாக அவர்கள் தமது 'சூழலின் குழந்தைகளாக' ஆகிவிடுகின்றனர். அவர்களுக்கு 'யானை' மேல் நம்பிக்கை அற்றுப்போய் விடுகின்றது.

* * *

வெறுமனே 'போதனைகள்' மட்டும் மனிதர்களை உருவாக்குவதில்லை. ஆங்கிலக் கவி எமர்ஸனின் நீ 'யார்' என்பது எனது செவிகளில் ஓங்கி ஒலித்துக் கொண்டி ருக்கிறது. எனவே நீ என் செவிகளில் உரத்துச் 'சொல்வது' எனக்குக் கேட்கவில்லை - என்ற கவி வரிகள் இதனையே எமக்கு வலியுறுத்துகின்றன. 'நடப்பவன் சொன்னால் நாடு கேட்கும்' என்ற தமிழ் வரிகளும் இதே விடயத்தை இன்னுமொரு வகையில் விளம்புகின்றன. அதாவது சொல்பவ னின் 'சுயமும்' அவனது போதனைகளும் ஒத்திசையும்போது மட்டுமே 'போதனைகள்' கேட்கப்படுகின்றன. அர்த்தம் பெறுகின்றன.

**உம் பணிக்கு ஈடு உண்டோ?**

புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாய் ஏற்று
புன் முறுவல் பூக்கின்ற முகத்தினோடு
மகிழ்ச்சியோடு திருத்தொண்டு ஆற்றுகின்றீர்
மறுப்பில்லை உம்மை இங்கு மதிக்கக் காணோம்

அகமகிழ்ந்து ஆசிரியப் பணியை ஆற்ற
அரசு தரும் வேதனம் போதாதுன்மை
மிகப்பெரிய தொண்டினை ஆற்றிநீவிர்
மிக்க பெரும் சேவைதனைச் செய்வதாலே

உகந்தும்மைத் தெய்வமென போற்றி நின்ற
உத்தமியாம் ஔவைதனை மறக்கலாமோ
இகத்தினிலே உம் பணிக்கு ஈடும் உண்டோ
இறவாத புகழ்பூத்து வாழி நீடு.'

- விகடகவி.

நல்லாசிரிய நடத்தை வெறுமனே 'போலச் செய்ய' முடியாதது. (*Unimitable*) அது ஆசிரியர்களது சுயத்தின் (*Self*) வெளிப்பாடாக மட்டுமே அமைய முடியும். ஆசிரியர்களது (ஆசு+இரியர்) சுயம் ஆசு (குற்றம்) இரியம் (இன்மை) வாய்ந்ததாக அமையும் போதே உன்னதமான ஆசிரிய நடத்தையும், அதன் விளைவாகக் கட்டியெழுப்பப்படும் மகோன்னதமான பாடசாலைச் சூழலும் அமையப் பெறுகின்றன. இதற்கு ஆசிரியர்கள் 'யானை போல' இருப்பதை விடுத்து 'யானை ஆக' இருப்பது மிகவும் அவசியமானது.

இந்த மாற்றம் அடிப்படையிலே அகநிலைப்பட்டது. சுயம் சார்ந்தது. எனினும் இது பாலைவனத்தில் நிகழ முடியாது. இம் மாற்றத்திற்கு ஏதுவான ஆகக் குறைந்த புறநிலைகள் பாடசாலை முகாமைத்துவச் சூழலிலும், பாடசாலைச் சமூகச் சூழலிலும் உருவாக்கப்படவேண்டும். எனவே நல்லாசிரிய உருவாக்கத்திற்கான அகநிலைப் பயணமும், அதற்கான 'நற்கல்வி ஆட்சியும்' (*Good Educational Governoma*) கைகோர்க்கும்போது மட்டுமே உன்னதமான மாற்றங்கள் நிகழும். இன்றைய ஆசிரியர் தினத்திலே, நமது ஆசிரியர்களும், கல்விச் சமூகத்தினரும் இவ்வுன்னத மாற்றங்களிற்கான அக, புறச்சூழ்நிலைகளை உருவாக்குவதற்கான ஆரம்ப அடிகளைஎடுத்து வைப்பார்கள் என எமது சமூகம்நம்பிக்கையுடன் காத்திருக்கின்றது. *



**சி.சுந்தரேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 02.04.1927

மறைவு: 04.09.2008

# அமரர் தம்பையா நடராசா

அன்பின் உறைவிடமே! குடும்பத்தின் குல விளக்கே!
அருமைத் தந்தையே அழைக்கும் குரல் கேட்கிறதோ!
தூங்காது எம்மைக் காக்கத் துல்லியமாய் தொழில் செய்தீர்
தூயவரே எம்மை ஏங்கவைத்துச் சென்றீரோ!

பேரப்பிள்ளைகளின் நன்மை பல கண்டிடவே
ஆசை கொண்டீரே அதற்கிடையில் ஏன் சென்றீர்!
ஐயா! ஐயா! என அன்புருகி அழைப்போமே
ஆருயிராய் எம்மருகில் இருப்பதற்குக் கிடைக்கலையோ?

கண்ணிமைப் பொழுதெல்லாம் கண்ணெதிரே நிறைந்தவரே!
கதி கலங்க வைத்துவிடக் காலனும் துணிந்தானோ?
முப்பத்தொரு நாள்கள் சுழன்று ஓடினாலும்
சுகம் கேட்க ஒருமுறை எம்முன் வாருமையா!
மறைந்தாலும் மறையாத சூரியனாய் எம் மனதில்
என்றும் சுடர் வீசி நித்திலமாய் இருப்பீரையா!

என்றும் நினைவுடன்:
N.சத்தியரூபன் (மகன்)
(சிறி நதியா நகை மாடம்)
K.செல்லத்துரை (மருமகன்)
[சோபனா நகை மாடம்]
மகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

171/6, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(மனோன்மணி அம்மன் கோவில் அருகாமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர் பெயர்ந்த பூமியின் நூலறா நினைவுகள்

''தம்பி! பரமேஸ் உந்தக் கற்பூரத்தை ஒருக்காக் காட்டிப்போட்டு வந்து இந்த அடுப்பை மூட்டி விடப்பு'' கிட்டிணன் சொன்னான். நான் எழுந்து சென்று மணியை எடுத்து அடித்துக்கொண்டு பூசையைத் தொடங்கினேன். கழுமரத்தடியில் மாவிலை, வேப்பமிலை எல்லாம் வைத்து பித்தளைச் செம்பில் கும்பம் வைக்கப்பட்டிருந்தன.

முதல் முதல் கொண்டு வந்த அரிசியும் மரக்கறியும் கும்பத்துக்கு முன்னால் படைக்கப்பட்டிருந்தன. கற்பூரத்தைக் காட்டி விட்டு, கொண்டு சென்று அடுப்புக்குள் போட்டேன்.



சங்கரனும் கெங்கனும் கிடாரத்தைத் தூக்கி அடுப்பில் வைத்து நெருப்பை மூட்டினர். தேவன் கோடரியை எடுத்துக் கொண்டு விறகு கொத்தப் போனான். உருத்திரனும் யோகநாதனும் கல்லை எடுத்து வைத்து மற்ற அடுப்பை மூட்டினர். செல்லமணியும் வியாழாச்சியம்மாவும் ஆளுக்கொரு அரிவாளில் மரக்கறி வெட்டத் தொடங்கினர். இன்றைக்குக் குளிர்த்தி! அயலட்டையில் இருக்கிற சனங்கள் எல்லோரும் இங்கே கூடுவார்கள்.

### எல்லாம் தெரிந்த விதானையார்

விதானையாருடைய கார் வந்து விட்டது. கறுப்பு ''மொறிஸ்மைனர்'' அவர் தான் வைச்சிருக்கிறார். அதுவும் 'வண்சிறி' மற்றவர்களிடம் ஏஃபோட்டி, சோமசெற்தான் நிற்கிறது. விதானையார் காரை நிறுத்திவிட்டுச் சாமான்களை எடுத்துக் கெண்டு வந்தார். துரைக்குட்டி விதானைக்குப் பட்டோலை கொடுக்கத் தேவையில்லை. மற்றவர்களுக்கென்றால் பட்டோலை கொடுக்க வேண்டும். துரைக்குட்டிக்கு எல்லாம் தெரியும். என்னென்ன வாங்க வேண்டுமென்று. எல்லாம் 'நம்பர்வண்' தரமான சாமான்கள் தான் வாங்கி வருவார். நான் செம்புகளை எடுத்துக்கழுவி சாம்பிராணிப்புகை காட்டி விட்டு, தண்ணீரை விட்டு அதனுள் அபிடேகக் கூட்டையும் இட்டு பன்னீரையும் விட்டேன். விதானையார் மடிக்குள்ளிருந்து சில்லறைக்காசை எடுத்துத் தந்தார், கும்பத்துக்குப் போடுவதற்கு. வாலுப்பிள்ளையக்கா சந்தனக்கல்லடியிலிருந்து பிராணாயாமப் பாவனை பண்ணிவிட்டு உருத்திராட்ச மாலையை எடுத்துக் கையில் வைத்து ஜெபம் செய்து கொண்டிருந்தார். கழுத்தில் ஒரு பெரிய பதக்கச் சங்கிலியுடன் காட்சி தரும் வாலுப்பிள்ளையக்கா (அவருக்குப் பெயர் வாலாம்பிகை எல்லோரும் வாலுப்பிள்ளையக்கா என்றுதான் அவரைக் கூப்பிடுவர்.) ஆசாரம் மிக்கவர். அன்றொருநாள் நான் பஞ்சாராத்தி காட்டி விட்டு வாயால் ஊதி அணைக்க, அதைக் கண்டு ''ஐயர் உதென்ன எச்சில் பறக்கப்போகுதெல்லே'' என்று ஏசினார்.

முந்தி கருகப்பனை, கொல்லங்கலட்டிப் பிரதேச மக்கள் எங்களது கோயிலுக்கு வருவதில்லை. குருக்கள் மாமா கொடியேற்றத் தொடங்கிய பிறகுதான் வரத்தொடங்கினார்களாம். கீரிமலைச் சுடலையை கிராமசபை கையேற்க நடவடிக்கை எடுத்தபோது குருக்கள் மாமாதான் கிராம சபையுடன் வழக்காடி வென்றவராம். அதற்குப் பிறகு கருகம்பனை, கொல்லங்கலட்டி ஆள்களெல்லாரும் குருக்கள் மாமாவில் நல்ல மரியாதை.

பறை ஒலிக்கும் ஓசை கேட்டது. ''இதென்ன கோயிலிலையும் பறை அடிக்கிறதே. செத்த வீட்டுக்கெல்லோ பறையடிக்கிறது.'' நரசிங்கம்தான் பறையடிக்கிறவர்களைக் கூட்டிக்கொண்டு வாறது. பறையடிக்கிறவர்களுக்கு காசும் கொடுப்பதில்லை. பின்னேரம் மிஞ்சுகிற அரிசி, மரக்கறிகள்தான் அவர்களுக்குக் கூலி.

அங்கிருபனைச் சின்னத்தம்பி பஞ்சாமிர்தம் குழைக்க ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். விதானையார் இரண்டு பலாப்பழம் கொண்டு வந்திருந்தார். சிறியதைப் பஞ்சாமிர்தத்திற்குப் போடச்சொல்லிக் கொடுத்தேன். அங்கிருபனைச் சின்னத்தம்பி கத்தியில் தேங்காயெண்ணெயைப் பூசி விட்டு வெட்டினார். பெரிய பலாப்பழம் படையலுக்கு. விதானையார் எல்லா இன வாழைப்பழமும் எப்பாடுபட்டென்றாலும் வாங்கிக் கொண்டு வந்துவிடுவார். காற்போத்தல் 'ஒறிஜினல்' தேனும் கொண்டு வந்திருந்தார். பஞ்சாமிர்தத்துக்கு விட்டபின் மிகுதித் தேனை, சர்க்கரைப்பொங்கலை பெரிய தாம்பாளத்தில் இட்டு அதன்மேல்விட்டு நெய்யும் விட்டுப் படைக்க வேண்டும்.

### குருக்கள் மாமாவும் குளிர்த்தியும்

நான் பழவகைகளை வெட்டித் தட்டத்தில் வைத்து விட்டு இளநீர் எடுக்கச் சென்றேன். 'உல்லைக்' கழுவி விட்டு இளநீரைக் குலையிலிருந்து பிடுங்கி ஒவ்வொன்றாக எறிந்தேன். உல்லிலிருக்கிற அலவாங்கில் இளநீர் குத்திய படி நிற்க இளநீர் வழிந்தோடியது. இந்த உல்லை எப்படித்தான் செய்தார்களோ தெரியாது. ஒரு பெரிய கல்லுக்குள் அலவாங்கை வைத்து அலவாங்கின் நுனி நீட்டிக் கொண்டிருக் கத்தக்கதாக இறுக்கியிருக்கிறார்கள். இளநீரை எடுத்துக் கொண்டு போய் ஆதி மூலத்திற்குள் வைத்தேன். தம்பித்துரை மாமாவும் இந்திரனும் கிடாரத்தில் தண்ணீரை நிரப்பி எடுத்து வந்தனர்.

குருக்கள் மாமா வந்து கும்பத்தடியிலிருந்து கொண்டு பூந்தட்டத்தை எடுத்து வைத்துவிட்டு தெற்பையை எடுத்து துரைக்குட்டியிடம் கொடுத்தார். துரைக்குட்டிக்கு ஒன்றும் சொல்லத்தேவையில்லை, அவருக்கு எல்லாம் தெரியும். அதனால் நாங்களெல்லோரும் மிகக் கவனம். ஏதாயினும் பிழைவிட்டால் உடனே துரைக்குட்டி கண்டுபிடித்துவிடுவார். நான் பஞ்சகவ்வியத்தை எடுத்து வீதி முழுவதும் தெளித்துவிட்டு கிணற்றிலுள்ளும் ஊற்றி விட்டு அபிடேகம் செய்யத் தொடங் கினேன். பங்குனி மாதம் கடும் வெப்ப காலம். சின்னமுத்து, கொப்புளிப்பான் என்று அம்மாள் வருத்தங்கள் வராமலிருப்பதற்காக அம்பாளைக் குளிரச்செய்வது தான் ''குளுத்தி''; குளிர்த்தி என்று குருக்கள் மாமா சொல்லியிருந்தார்.

ஈஸ்வரக் குருக்களுக்கு எங்களது கோயிலுக்குச் சனம் வருவது கொஞ்சம் பொறாமை. ''மாரியாச்சீட்டைப் போட்டோ வாறியள்'' என்று சிவன் கோயிலுக்குப் போகிறவர்களிடம் கேட்பார் என்று ஒரு முறை சிறி மாஸ்ரர் சொன்னவர். சென்ற வருடம் அவருடைய பிள்ளைகளுக்கு அம்மாள் அள்ளிப்போட்டிட்டுது. பிறகு ஐம்பது ரூபா தந்து பூசை கட்டுவித்தவர்.

### அபிஷேகம் ஆரம்பம்

இன்றைக்கு விபூதியால் அபிடேகம் செய்ய வேண்டும். பிறகு அந்த விபூதியைத்தான் அள்ளி வைத்து வருசம் முழுக்க கொடுப்போம். இன்றைக்கு ஆறுதலாக அபிடேகம் செய்யலாம். அவசரப்படத்தேவையில்லை. சமையல் முடிவதற்கு மூன்றரை மணியாகும். அம்பாளுக்குத் தலையிலிருந்து பாதம் வரை நிறைய நல்லெண்ணெய் சாத்திக்கிடக்கு. அரிசிமா, மஞ்சள்மா, பழவகை, பால் எல்லாம் அபிடேகம் செய்து முடிந்தவுடன் தயிரை எடுத்து அம்பாளின் தலையிலிருந்து பாதம் வரை தேய்த்தேன்.

நிறைய நல்லெண்ணெய் சாத்திவிட்டு தயிரால் உரோஞ்சிக் கழுவினால் தான் சுவாமியிலிருக்கும் அழுக்கு எடுபடும் என அப்பா அடிக்கடி நினைவூட்டுவார். தயிரைக்கழுவி பஞ்சாமிர்தம் சாத்தி பஞ்சாராத்தியைக் காட்டி மண்டபத்தையும்' கழுவி விட்டு வந்தேன். குருக்கள் மாமா ஓமம் வளர்த்துக் கொண்டிருந்தார். சர்க்கரைப் பொங்கல் இறக்கப்பட்டு விட்டது . சருவத்துக்குள் கொஞ்சத்தை விட்டு விட்டு மிகுதியை தங்கை தளிசையாக அடித்துக் கொண்டிருந்தாள்.

### அம்பாளுக்குத் [illegible]

கற்கண்டுப் [illegible] அடிக்கப்பட்டு விட்டது. அம்மா பாயாசம் காய்ச்சிக் கொண்டிருந்தார். இஞ்ஞறைக்கு சவ்வரிசியில் பாயாசம் காய்ச்சுவதில்லை: அரிசிப்பாயாசம் தான் காய்ச்சப்படும். அம்பாளுக்குப் பாயாசமென்றால் நல்ல விருப்பமென்று குருக்கள் மாமா சொன்னவர். ''சகஸ்ரநாமத்தில் பாயாஸான்னப்ரியாயை நம'' என்றும் ஒரு மந்திரம் வருகிறது. பாயாஸான்னப்ரியாயை நம என்றால் பாயாசத்தை விரும்பிச் சாப்பிடுபவள் என்று அர்த்தமாகும். நான் ஓமகுண்டத்தடிக்கு வந்தேன். குருக்கள் மாமா பூர்ணாகுதி போடத் தயாராக இருந்தார். வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பட்டுத்துண்டு எல்லாம் ஒரு தட்டத்தில் வைத்துக்கிடக்கிறது. நான் தட்டத்தை எடுத்து துரைக்குட்டியிடம் கொடுத்தேன். துரைக்குட்டி ஒரு ரூபா நாணயத்தை எடுத்து வாழைப்பழத்தினுள் செருகி விட்டு ஓமகுண்டத்தினுள் போட்டார்.

நான் வெற்றிலையையும் தெற்பையையும் எடுத்து தெற்பையை ஓமகுண்ட நெருப்பில் பிடித்து எரித்து வெற்றிலைக்குள் வைத்து நசித்து நெய்யையும் விட்டு குருக்கள் மாமாவிடம் கொடுத்தேன். குருக்கள் மாமா அதை வாங்கி தெற்பையால் தொட்டுக் கும்பத்துக்குப் பொட்டிட்டு விட்டு துரைக்குட்டியிடம் கொடுத்தார். துரைக்குட்டி வாங்கி நெற்றியில் திலகமிட்டு விட்டு மனைவி பிள்ளைகளிடம் கொடுத்தார்.

> **குளிர்த்தி**
>
> உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்துக்களின் புனித ஸ்தலமான கீரிமலையின் கடற்கரையோரமாக சுனாமிக்கும் அசையாமல் உள்ளது மாரியம்மன் கோயில். பங்குனி மாதம் மூன்றாம் திங்களன்று இங்கு குளிர்த்தி உற்சவம் வெகுசிறப்பாக நடைபெறும். அன்றைய தமிழ் மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்தவும், ஆன்மீகத் தேடலை அதிகரிக்கவும் இவ்வகையான சடங்குகள் முக்கியமானவையாகக் காணப்பட்டன. இன்றைய அவசர உலகில் மறக்கடிக்கப்பட்டுப் போன 'குளிர்த்தி'ச் சடங்கினை மண்மணம் கமழ விவரிக்கின்றது இந்த நடைச்சித்திரம்.

நான் பஞ்சாராத்தியைக் கொளுத்திக் கொடுத்தேன். குருக்கள் மாமா வாங்கிக் காட்டிவிட்டு கும்பத்தை இருகைகளாலும் தூக்கினார். அப்பா சால்வை ஒன்றை எடுத்து தலையில் தலைப்பாகை கட்டிக் கொண்டு கும்பத்தை வாங்கித் தலையில் வைத்தார்.

நான் இரு கைகளிலும் ஒவ்வொன்றாக கும்பங்களைத் தூக்கிச் சென்று ஆதிமூலத்தினுள் வைத்தேன். இதற்கு முன்னரெல்லாம் துரைக்குட்டி இத்தினத்தில் சங்காபிடேகம் செய்விப்பவர். இந்த முறை செய்யவில்லை. நூற்றெட்டுச் சங்குகளை வைத்து அபிடேகம் செய்வதென்றால் ஒருவாறு சமாளிக்கலாம். ஆயிரத்தெட்டு சங்கு வைத்து அபிடேகம் செய்வதென்றால் அவ்வளவு சங்கையும் தட்டத்தில் அடுக்கி தூக்கிக் கொண்டு போய் அபிடேகம் செய்வதற்கிடையில் நாரி முறிந்து விடும்.

கும்பம் சுற்றிக்கொண்டு வந்தாயிற்று. கும்பம் ஊற்றி முடிந்தவுடன் பஞ்சாலாத்தியைக் கொளுத்திக் கொடுத்து விட்டு வந்து சந்தனத்தை எடுத்து சந்திர ஐயரிடம் கொடுத்தேன். சந்திர ஐயர் திரையைப் போட்டு விட்டு சந்தனக்காப்பு போடத் தொடங்கினார்.

### நாமுத்துவின் ஞாபகம்

நான் நைவேத்தியத்தைக் கொண்டு வந்து வைத்துவிட்டு போய் அசையா மணியை அடித்தேன். நாமுத்து மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் விறகு கொத்திக் கொண்டு நின்றான். ''முந்தி ஒருக்கா குளுத்திக்கு விறகு கொத்திக் கொண்டிருக்கேக்கை காலை பாம்பேறினது, நான் கவனிக்கேல்லை. பிறகு சனங்கள் தான் கண்டிட்டு எடே பாம்பெடா எண்டு சொன்னான். பிறகுதான் நான் பார்த்தனான். எண்டாலும் பாம்பு கடிக்கேல்லை மாரியாச்சி விடா'', என்னைக் கண்டதும் பழைய சம்பவமொன்றை நினைவூட்டி விட்டுத்தான் வேலையைத் தொடர்ந்தான்.

நான் வந்து அடுக்குத்தீபத்தைக் கொளுத்தி அப்பாவிடம் கொடுத்தேன். அப்பா வாங்கிக் காட்டிவிட்டு ஆதி மூலத்தினுள் நுழைந்தார். நானும் சூட்டியும் தேங்காய்களை எடுத்து உடைத்து விட்டு அர்ச்சனைத் தட்டுகளிலிருந்த கற்பூரம், [illegible] என்பவற்றை எடுத்து தனித்தனியாக பைகளுக்குள் போட்டுவிட்டு காசை எடுத்து செம்புக்குள் போட்டோம். இடைக்கிடை மடிக்குள்ளும் செருகிக் கொண்டேன். அந்த நேரம் பார்த்து கோயில் மாமா வந்தார். வந்தவர் விறுவிறென்று திரும்பிப் போய் வெளியே நின்று கொண்டு ''கோயில் நவசற்றை கோயில்'' என்றார். (அவருடைய தகப்பன் நமசிவாயம் தானாம் கோயிலைக் கட்டுவித்தது.) சனங்களெல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். நான் மடிக்குள்ளிருந்த காசை எடுத்து அவரிடம் கொடுத்தேன். குருக்கள் மாமா ''தம்பி நீ ஒண்டுக்கும் யோசியாதை உனக்கும் அரைவாசி தருவம்'' என்றார். பாவம் அவர் தான் நித்திய பூசை செய்வது வேறு வருமானமுமில்லை.

### முடிந்தது சமையல்

உள்பூசை முடிந்து விட்டது. சமையல் மும்முரமாக நடக்கிறது. பெண்களில் அரைவாசிப்பேர் தேங்காய் துருவிக் கொண்டிருக்க ஏனையோர் மரக்கறி வெட்டிக் கொண்டிருக்கின்றனர். இரண்டு கிடாரம் சோறு இருக்கு: கொடிக்கம்பத்தடியில் ஓலைப்பாயில் படைக்கப்பட்டுள்ளது. ரத்தினண்ணை கிடார அகப்பையால் சோற்றைத் துளாவிக் கொண்டிருந்தார். நான் ''துவங்கலாமே'' என்று கேட்டேன். அவர் ''சமையல் முடிஞ்சுது நீங்கள் துவங்குங்கோ'' என்றார். நான் வசந்த மண்டபத்தினுள் போய் சேயனுக்குக் கண்ணைக் காட்டினேன். சேயன் அடுக்குத்தீபத்தைக் கொளுத்திக் கொடுத்தான். வசந்த மண்டப பூசை முடிந்து சுவாமி வெளிக்கிட்டு விட்டது. இரண்டு மூன்று பெண்கள் உரு ஆடுகின்றனர். கிளானையிலிருந்து வருகின்ற அந்தத் தொக்கை மனுசி கையில் வேப்பிலையையும் வைத்துக் கொண்டு துள்ளித் துள்ளி ஆடுகிறது. நிறையப் பெண்கள் திருகணையில் கற்பூரச்சட்டியை வைத்து வேப்பமிலையையும் வைத்து தலைக்கு மேலே பிடித்தவாறு சுவாமிக்கு முன்னால் செல்கின்றனர்.

வீதிவலம் முடிந்து சுவாமியைக் கொண்டு வந்து ஊஞ்சலில் இருத்தியாச்சு. சித்திராவும் கணபதியாரின் பேத்தியும் அம்மனுக்கு இரு புறமும் நின்று சாமரம் வீசுகின்றனர். குருக்கள் மாமா ஊஞ்சல் பாட்டுப் புத்தகத்தை எடுத்து தெய்வேந்திரத்திடம் கொடுத்து விபூதியையும் கொடுத்தார். தெய்வேந்திரம் இரு கைகளாலும் புத்தகத்தைப் பணிவாக வாங்கி விபூதியைப் பூசிக்கொண்டே பாடத் தொடங்கினார்.சனிற்றறியர் ஊஞ்சலைப் பிடித்து மெதுவாக ஆட்டி விட்டார்.

### அரோகராவுடன் அன்னதானம்

சோறு கறி எல்லாம் படைக்கப் பட்டிருந்தன, சோறுகறிக்கு மேல் வாழைப்பழமும் உரித்துப் போடப்பட்டிருக்கிறது. வாளிக்குள் நீர் மோரும் கரைத்து வைக்கப்பட்டுள்ளது. ஊஞ்சல் பாட்டு முடிந்து விட்டது. இன்றைக்கு இரு பக்கத்தாலும் விபூதி சந்தனம் கொடுக்க வேண்டும் இல்லா விட்டால் சமாளிக்க இயலாது. இரண்டு பக்கத்தாலும் இருவர் விபூதி கொடுக்க பின்னால் இருவர் கையில் கொண்டியுடனும் மறுகையில் வாளியில் தீர்த்தத்துடனும் சென்று கொண்டிருந்தனர். பின்னால் சந்தனம், குங்குமம்.

அரைவாசிப்பேர் நீர்மோர் வாங்குவதற்குச் சிரட்டை தேடித்திரிந்தனர். சிறியனும், குமாரும் நீர்மோரை எடுத்துக் கொடுக்கத் தொடங்கினர். எல்லோரும் அடிபட்டு நீர்மோர் வாங்கினார்கள். என்ன இருந்தாலும் நீர்மோர் ஒரு தனி 'ரேஸ்ற்' தான். (சோற்றுக்குள் தேங்காய்ப் பாலுடன் மிளகாய், வெங்காயம் என்பன கலந்து தயாரிக்கப்படுவதுதான் நீர்மோர்) இந்த முறை சரியான சனம். சமாதி வேலி வரையும் இரண்டு வரிசையாக சனம் இருக்கிறது. அதை விட மடைப்பள்ளிப் பக்கமும் இரண்டு வரிசையாகவும் தேர்முட்டிப் பக்கம் ஒரு வரிசையாகவும் சனம் இருக்கிறது.

அனைவருக்கும் வாழையிலை வழங்கப்பட்டு சோறு கறி பரிமாறப்படுகிறது. சிலர் தங்களது இலைக்குப் பக்கத்தில் ஒவ்வொரு சிறிய பெட்டியும் வைத்திருக்கின்றனர். ''தம்பி பெட்டியளுக்குப் போடச் சோறு காணுமேடா?'' என்றார் குணமண்ணை. 'ஓ தாராளமாகக் காணும்'' என்றனர் தாராசிங்கமும் செல்லையா அண்ணையும்.

குருக்கள் மாமா கையில் தண்ணீரை விட்டுத் தெளித்தார் ''அரோகரா'' அனைவரும் சாப்பிடத் தொடங்கினர்.

***

- ந.பரமேஸ்வரன் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பொது அறிவு



1. நத்தையின் முட்டையின் நிறம் என்ன?
   மஞ்சள்
2. இறப்பர் பிறந்த இடம் எது?
   அமெரிக்கா
3. இந்தியாவின் தலை நகரம் எது?
   புதுடில்லி
4. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
   நோர்வே
5. சூரியன் மறையும் நாடு எது?
   இங்கிலாந்து
6. அண்மையில் விண்ணில் வெடித்துச் சிதறிய விண் கலம் எது?
   கொலம்பியா
7. 2007 இல் கிரிக்கெட்டில் உலகக் கிண்ணத்தை வென்ற நாடு எது?
   ஆஸ்திரேலியா
8. உலகில் மிகப் பெரிய சமுத்திரம் எது?
   பசுபிக்
9. உலகில் பெரிய பாலைவனம் எது?
   சகாரா
10. அதிக மக்கள் தொகை கொண்ட நாடு எது?
    சீனா



மனோகரன் தினுசன், தரம் 5 சி, யாழ்ப்பாணக் கல்லூரி.

# பண்புச் செயல்கள்

1. தகுந்தவர்களுக்குத் தானம் செய்
2. ஒழுக்க போதனைகளைப் பின்பற்று.
3. நல்லெண்ணங்களைப் பின்பற்று
4. நல்லெண்ணங்களை நினை.
5. பிறருக்குப் பணிசெய் பிறரைக் கவனித்துக் கொள்.
6. பெற்றோரையும் மூத்தோரையும் குருவையும் மதித்து நட. அவர்களுக்கு வேண்டுவன செய்.
7. உன் புண்ணியங்களில் ஒரு பகுதியைப் பிறருக்குக் கொடு.
8. பிறர் உனக்குக் கொடுக்கும் புண்ணியங்களை ஏற்றுக்கொள்.
9. நல்ல கருத்துகளைப் பிறருக்குக் கற்றுக்கொடு.
10. உன் குற்றங்களை நீக்கு.

இராசேஸ்வரன் ஜயனீசன், தரம் 4ஈ,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.



# சிந்தனைத் துளிகள்



★ நம்பிக்கைக்குரிய நண்பர்களுக்கு ஈடான செல்வம் எதுவுமில்லை

★ வறுமையிலும் நிறைவு காண்பவனே மிகப் பெரிய பணக்காரன்.

★ மற்றவர் குறைகளை மன்னிக்கத் தெரியாதவர்களைத் தெய்வமும் மன்னிக்காது கை விட்டு விடும்.

★ கால்கள் தடுமாறலாம் ஆனால் நாக்கு மட்டும் ஒரு போதும் தடுமாறக்கூடாது.

★ ஒருவர் அடிக்கடி எதனை வெறுப்பதாக கூறுகிறாரோ அதனை அவர் அதிகமாக நேசிப்பதாக அர்த்தம்.

★ கொள்கை அற்றவனிடம் இருந்து அன்பை எதிர்பார்ப்பது மூடத்தனமாகும்.

★ நல்லவன் என்று பெயரெடுக்க அதிக காலம் எடுக்கும். கெட்டவன் என்று சில நொடிகளில் பெயரெடுக்கலாம்.

வே.திருஷா, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# கோழி



பாப்பாக் கோழி வருகுதாம்
முட்டை போட வருகுதாம்
பெட்டியாலை அடைச்சனாம்
முட்டை இட்டதும் பறந்ததாம்.

ம.தமிழ்மாறன், ஆரம்பப் பிரிவு, உடுவில் மகளிர் கல்லூரி.




கையில் அள்ளிய நீரை அப்படியே கீழே ஊற்றிவிட்டு நிமிர்ந்து நோக்கினான் நந்திவர்மன். அவன் எதிரே பார்ப்பதற்குப் பயங்கரமான தோற்றமுடைய கிழவி ஒருத்தி சிரித்தவாறு நின்று கொண்டிருந்தாள். அவள் கையிலே ஒரு பொன்னிறமான மந்திரக்கோல்.

"நான் ஏன் இந்த நீரைக் குடிக்கக் கூடாது?" என்று அந்தக் கிழவியைப் பார்த்துக் கேட்டான் நந்திவர்மன்.

"அந்த நீர் மந்திரநீர். அதைக் குடித்தால் நீ மறுகணமே பாறையாகி விடுவாய்" என எச்சரிக்கும் குரலில் அந்தக் கிழவி கூறினாள்.

"அப்படியானால் நீ யார்?" எனத் தொடர்ந்து கேட்டான் நந்திவர்மன். கிழவி ஒருமுறை நந்திவர்மனை உற்று நோக்கினாள். பிறகு கடகடவென உரத்த குரலில் சிரிக்கத் தொடங்கினாள்.

"நானென்ன தவறாகக் கேட்டுவிட்டேன். எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று மீண்டும் வினாவினான் மன்னன்.



"தவறுதான் நந்திவர்மா! இந்த மாயத்தீவு மந்திரக் கிழவியைப் பற்றி நீ இதுவரை அறியாமல் இருந்தது தவறுதான்" என்று கிழவி பதில் சொன்னாள்.

அப்போதுதான் தன்னெதிரே இருப்பது மாயத்தீவு மந்திரக் கிழவிதான் என்பது நந்திவர்மனுக்குப் புரிந் தது. மந்திரக்கிழவி பற்றியும், அவளது மாயவலையில் சிக்குண்டு அழிந்த மனிதர்களைப் பற்றியும் நந்திவர்மன் கேள்விப்பட்டிருந்தான். ஈவிரக்கமற்ற ஒரு சூனியக்காரியிடம் தான் வசமாக அகப்பட்டுக் கொண்டிருப்பதை நந்திவர்மன் உணரத் தொடங்கினான்.

"சரி! மந்திரக்கிழவியே! நான் என் நாட்டுக்குச் செல்லவேண்டும். அதற்கு வழிவிடு" என்று கூறிவிட்டுக் குதிரையில் தாவினான் மன்னன். ஆனால் குதிரை மகுடிக்குக் கட்டுண்ட நாகம்போல அரசனோடு மந்திரக்கிழவிக்கு முன்னால் மண்டியிட்டது. அப்போது "வீல்" என்றொரு அலறல் காட்டையே அதிரவைத்தது.

(தொடரும்)

# காக்கையின் தந்திரம்

ஒருநாள் தன் வடையை நரியாரிடம் பறிகொடுத்த காக்கை சோகத்துடன் மரத்தில் அமர்ந்திருந்தது. அப்போது அந்த நரி மாமிச உணவை உண்டு கொண்டிருப்பதைக் கண்டது. நரியார் தன்னிடம் இருந்த வடையை தந்திரம் செய்து அபகரித்தது போல தானும் ஏதாவதொரு தந்திரம் செய்து நரியாரிடம் உள்ள மாமிச உணவை அபகரிக்க எண்ணியது. உடனே அருகிலுள்ள மரத்திற்குச் சென்று "கா கா" எனக் கரைந்து தனது சக நண்பர்களை அழைத்தது. தன் தந்திரத்தைக் கூறத் தொடங்கியது.



"என்னை ஏமாற்றிய நரி அங்கிருந்து மாமிச உணவை உன்கின்றது. அதை அபகரிக்க நான் ஒரு தந்திரம் சொல்கின்றேன். கேளுங்கள். நாங்கள் கரைந்து கரைந்து உணவை உண்பதுபோல் பாசாங்கு செய்வோம். இதனைக் கண்ட நரியார் இங்கு ஓடிவருவார். அவ்வேளை அந்த மாமிச உணவை நாங்கள் எடுத்துச் சென்று உண்போம்" இதனைக் கேட்ட சக காகங்கள் இதற்கு ஆமோதித்தன. பின் அத்தந்திரத்தை விரைவாகச் செயற்படுத்தின. இல்லாத உணவை உண்பது போல பாசாங்கு செய்தன. இதனைக் கண்ட நரி உடனே தன்னிடம் இருந்த மாமிச உணவை விட்டு விட்டு அவ்விடத்திற்குச் சென்றது. காக்கைகள் எல்லாம் பறந்து சென்று அம்மாமிசத்தைத் தூக்கிக் கொண்டு ஒரு மரத்தின் மீது வைத்து பகிர்ந்து உண்டன.

நரி மாமிச உணவை இழந்ததால் சோகமடைந்து அம்மரத்தின் கீழ் சென்று காக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தது. இதைக் கண்ட வடையை இழந்த காக்கை "என்ன நரியாரே வடை சுவையாக இருந்ததா" எனக் கேட்டுக் கேலி செய்தது. நரி வெட்கித் தலை குனிந்தது. ★★★★★★★★★★★★★★★★★★★

வா.சங்கீதா, தரம் 6 ஏ, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

# மாணவர் தூரிகை



சி.சிறிதனுயன்,
தரம் - 3,
உடுவில் மகளிர் கல்லூரி.

சீ.சிவதர்சினி,
தரம் - 9, யா/அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி.



ஜெ.திசாங்கன்,
தரம்7ஏ, யா/இணுவில் மத்திய கல்லூரி.



# நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..........................................
தரம் :-..........................................
பாடசாலை :-..........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.......................... ..........................................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1960** களில் இலங்கைத் தமிழ்ச் சிறுகதைத் துறைக்குப் பங்களிப்புச் செய்தோருள் மு.கனகராசனும் ஒருவர்.

யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த மு.கனகராசனின் சிறுகதைகள் கலைச்செல்வி, விவேகி, மல்லிகை போன்ற சஞ்சிகைகளிலும், சுதந்திரன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

சிறுகதைத் துறையில் மட்டுமென்றல்லாது நாடகம், புதுக்கவிதை போன்ற ஏனைய துறைகளிலும் அக்கால கட்டத்தில் இவர் தடம் பதித்ததோடு தமது ஆக்கங்களுக்குப் பாராட்டுக்களையும் பரிசில்களையும் ஈட்டியுள்ளார்.

அந்த வகையில் 1971 ஆம் ஆண்டில் பரிசு பெற்ற கதைகள், பரிசு பெற்ற நாடகங்கள் என்ற ஈழநாடு பத்திரிகையின் வெவ்வேறு வெளியீடுகளில் இவரது பரிசு பெற்ற ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

இவரது சுமுனுவின் காதலி (நாடகம்) 1970 இலும் முட்கள் (புதுக்கவிதைத் தொகுதி) 1975 இலும் நூலுருவில் வெளிவந்துள்ளன. 'பகவானின் பாதங்களில்' என்ற தலைப்பில் 11 சிறுகதைகளை உள்ளடக்கிய இவரது சிறுகதைத் தொகுதி 1980 இல் வெளியிடப்பட்டது.

கொழும்பில் வெளிநாட்டுத் தூதரகமொன்றில் பணியாற்றியவர்.

யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கம், யாழ்.இலக்கிய வட்டம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்துள்ளார். காலமாகி விட்டார்.

# பகவானின் பாதங்களில்

கொழும்பின் ஹிருதயப் பகுதியில் அந்தப் பல மாடிக் கட்டடம் நிற்கிறது. அது ஒரு ஃப்ளட். அதன் மேல் மாடியிலிருந்து பார்த்தால் தொலைதூரம் வரை எல்லாம் தெரியும். கட்டடத்துக்கு முன்னால் விசாலமான தார் றோட்டு. அதன் வலப்புறமாக- மேற்கில் நாற்சந்தி. சந்தியின் ஒரு மூலையில் ஓர் அரசமரம். அதன் நிழலில் புத்தர். அவர் சம்மணம் கட்டி மோனத்தில் வீற்றிருக்கிறார். அவரின் முன்னால் ஒரு சிறு மேடை. அதில் வாடிய அலரிப்பூக்கள்; எப்போதோ எரிந்த அகல் விளக்குகள். அரசைச் சுற்றி இரண்டடி உயரத்திற்குச் சிறுமதில். மதிலின் பல இடங்களிற் காரை பெயர்ந்திருக்கிறது. மேற்கு நோக்கி ஓடும் றோட்டு, கடலையொட்டி மல்லாந்து கிடக்கும் இன்னொரு றோட்டின் முதுகிற்குள் மறைகிறது.

அந்த இடத்தில் பஸ்கள் வந்து நின்று, திரும்பும் 'டேர்மினஸ்' இருக்கிறது. அதையொட்டி 'பேவ்மன்ற்'. அதில் 'காட்போர்ட்' மட்டைகள், பழைய சிமெந்து உறைகள், 'பொலித்தீன்' கிழிசல்கள், மண்ணெண்ணெய் 'ரின்'களை நீட்டிவிட்ட தகரங்கள் , பீத்தல் 'கான்வாஸ்கள்', பொத்தல் படங்குகள் இத்தியாதிகளிலான 'குடிசைகள்' வாழ்க்கை அங்கேயும் இருக்கிறது. அந்த இடத்தைப் பார்த்து உலக வங்கி கண்ணடிக்கும், மன்மதனும் கணை எறிவான். நிச்சயமாக, தங்களின் ஆசைகளை, பிக்கல் பிடுங்கல்களை யாரும் பார்த்து விடக்கூடாதே என்ற நினைவிலான இல்லறங்களின் மறைப்புகள். அங்கே உள்ள 'அது'களுக்கும் ஜனநாயகத்தின் பாதுகாவலர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் 'உரிமை' இருக்கிறது. 'கொடுத்து வைத்த' ஆத்மாக்கள். ஏனெனில் 'அது' களுக்கு ஜாதி, மதபேதமில்லை; அதற்கு நேரமுமில்லை. 'அது'களின் 'பேவ்மன்றி'ல் சுண்டல், வறுவல், வடை, முறுக்கு, 'ரேஸ்ற்', தாழித்த மரவள்ளி......... உப்புக் கரிக்கும் கமகமப்பு.......தவறணை! அந்தப் பிராந்தியமே ஒரு தனிச் சாம்ராஜ்யம்தான்.

புனிதாவின் வீடு ஃப்ளட்டின் மூன்றாம் மாடியிலிருக்கிறது. அவள் யன்னலோரத்திலிருக்கிறாள்.

அவள் அந்தத் தெருக் குடும்பத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அங்கே தின மும் இப்படித்தான் நடக்கிறது.

புனிதாவின் கண்கள் பனிக்கின்றன.

அந்தத் தெருக் குடும்பத்துக்கு ஒரு 'தலைவன்'. அவன் தன் மனைவியைக் கொச்சையான பாஷையில், கீழ்த்தரமாக வைதுகொண்டிருக்கிறான். கடைசிக் குழந்தைகளிரண்டும் இரு பக்கங்களிலும் நின்று அழுகின்றன. அவற்றின் மூக்குகளின் சளி, உப்பிய வயிறுகளில் சொட்டிக் கொண்டிருக்கின்றது. மற்ற மூன்று பிள்ளை களும் அப்பாவின் காட்டுக் கத்தலைக் கேட்டு நடுங்குகின்றன. மனைவி மூசித் தேம்புகிறாள்.

இதற்கான பரிகாரத்தை நினைத்து நினைத்தே சமூகவியல் மாணவியான புனிதாவின் மூளை சோர்ந்துவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எந்தப் புரட்சிக் கருத்துக்கள், துடிப்பான கவிதைகள்தான் ஓடி வந்து கைகொடுக்கின்றன?

''எடி! தா.......டீ......! எடியே தரமாட்டியா.....?'' அவன் மனைவியைப் பயமுறுத்துகிறான்.

அவனுக்குக் காசு வேண்டுமாம். பாவம் அந்தப் பாழ்பட்ட காசு சொர்க்கத்திலோ, நரகத்திலோ கிடைக்குமாயிருந்தால் அதைக் கொண்டுவர அவள் என்றோ போயிருப்பாள்.

புனிதாவின் மனம் புழுங்குகிறது: 'சே! என்ன உலகம். அந்த 'ஆறாவ'தின் ஒரு துளியாவது இவர்களுக்கு இருக்கக் கூடாதா.......?'

மாடி யன்னலினூடாக அந்தக் கள்ளுக் கடை தெளிவாகத் தெரிகிறது. அங்கே மொய்த்திருக்கும் பெரும்பாலானவர்கள் அந்தத் தெருக் குடும்பத்தைப் போன்றவர்களே. மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் அவர்களுக்குக் கள்ளுக்கு மட்டும் காசு எங்கிருந்து மிஞ்சுகிறது?

அதோ, பெண்களும் சிரட்டைகளில் ஏந்தி 'மடமட'வெனக் குடிக்கிறார்கள்.

தான் பார்த்த ஒரு மேற்கத்தைய சினிமாப் படம் புனிதாவின் மனதில் தோன்றுகிறது. அதிலும் பெண்கள் குடித்தார்கள். ஆனால் இப்படியல்ல, நாகரீக உடையில், கிளப்புகளில்.

அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்......?

இந்தப் பஞ்சைகள் மீது அருவருப்புத் தோன்றி 'இதுகளுக்கு ஏன்தான் இரக்கப்பட வேண்டும்' என்றெழுந்த எண்ணம் கரை கிறது. 'இல்லை, அப்படி நினைப்பது தவறு.... இவர்களின் நிம்மதியை மட்டு மல்ல வாழ்க்கையையே கூட அந்தக் 'கிளப்'புகளல்லவா உறிஞ்சுகின்றன. .....!

புனிதாவினால் அந்த ஏழைக் குடும்பத்தைக் கண்டு வாளாவிருக்கமுடியவில்லை. 'அந்த ஏழைத் தாயிடம் ஒரு பத்து ரூபாயாவது கொடுத்தால், கணவனுக்கும் தந்து, குழந்தைகளுக்கும் ஏதாவது வாங்கிக் கொடுப்பாளல்லவா........!'

கையிலெடுத்துக்கொண்ட ஒரு 'பச்சை' நோட்டுடன் புனிதா தெருவிலிறங்கி நடக்கிறாள்.

தெருவில்தான் எவ்வளவு சன நெரிசல்! ஆள்களின் மீது முட்டுப்பட்டுக் கொண்டு தான் நடக்க வேண்டியிருக்கிறது. யாரோ ஒருவன் அவளை உரசிக் கொண்டு போகிறான்; அவளைப் புரட்டித் தள்ளி விடுவதைப் போல இடித்துக் கொண்டு எங்கோ விரைந்து போகிறான்.

'அவனுக்கும் என்னென்ன கஷ்டங்களோ.......'- அவள் மனம் சொல்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க....)

# முதற்கல்லை வீசப்பலமுண்டா?

பொய்மையும் கயமையும் புதுப்புது வேடங்களில்
ஊர்வலம் போக,
பட்டமும் பதவியும் காடைத்தனத்திற்குக்
கைகூப்பிச் சேவகம் செய்கின்றன.
பணம் தரும் பகட்டுக்குள்
முன்செய்த பாவங்கள் பஸ்பமாகின்றன.

அன்று ஆடிய ஆட்டங்கள் யாவும்
இன்று தாங்கிடும் வேடங்களுள் சங்கமம்.
அயலவனை வசைபாட
அவசரப்படுகிறது பத்தினிவேடம்.
ஸ்ரீராமன் வேடமோ
ஏகபத்தினி விரதத்தில் இருப்பதுவாய்
போக்குக்காட்டி புரிகிறது பலலீலை.

மொட்டைக் கடிதங்கள்- அநாமதேய அழைப்புக்கள்
அனுப்பி ஆர்ப்பரித்து அமைதியுறும் உள்ளங்கள்.
2அடுத்தவரையே சதா அவதானித்துக் கொண்டிருக்க
இவர்களது அழுக்குகள் இவர்களுக்குப் புலப்படாது.

இவன் இப்படி இவள் இப்படி
அவன் அப்படி அவள் அப்படி
இப்படியே எல்லோரையும் இட்டுக்கட்டுவதில்
இவர்கள் வெட்டும்குழி இவர்களுக்குப் புதைகுழியே.
அட...................
பகவத்கீதையும் பைபிளும் திருக்குறளும்
படித்தபின் பயன்படுவதாயின்
புரியாணி சாப்பிட்டபின் கைதுடைக்க மட்டுமே.
எதற்கும்-
விநயமாய் ஒரு விண்ணப்பம்.
தவறு செய்யாதவன் எவனோ அவன்
முதற் கல்லை வீசப்பலமுண்டா?

★ ★ ★

\- கொற்றை. பி. கிருஷ்ணானந்தன்.

# உள்ளத்திலிருந்து பிறக்காத, உதட்டளவிலான சம்பிரதாய வார்த்தைகளும் தேவையா?

உலகத்துப் பொருள்களும் உலகத்து அமைப்பும் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று எதிர்மறையான - இரண்டு பட்டதாக இருக்கின்றன. இவையிரண்டுமே இயற்கைச் சமநிலைகளுக்கெல்லாம் தேவையாகின்றன. அதனால் தேவை, தேவையற்றது எனவொன்றையும் புறந்தள்ள இயலாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து ஒன்று தேவையானதாகவும் மற்றையது தேவையற்றது போலவும் அந்தந்த நேரத்து உணர்வு காட்டும். ஆக, சரி, பிழை இரண்டையுந் தீர்மானிப்பதற்குச் சந்தர்ப்பம் சூழ்நிலைகளும் அந்த நேரத்து உணர்வுகளுமே உதவுகின்றன. அல்லாமலும் உலகப்பொது நியதிகளைக் கருத்திற் கொண்டும் சரி பிழை சம்பிரதாய தேவை, தேவையின்மை என்பன வரையறுக்கப்படுகின்றன.

நீதி, கலாசாரம் (பண்பாடு) இடத்துக்கிடம் வெவ்வேறாயிருக்க, வள்ளுவன் தந்த வான்மறை உலகப் பொதுநியதியாக - நீதியாக விளங்குகின்றது. இதுவே உலகப் பார்வையெனவும் அமையும். பொது நியதியை உலகம் அங்கீகரிப்பதால் அதிலிருந்து தப்பிக்க முயல்வது சமூகக் கட்டமைப்பைச் சிதைத்துவிடும். ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்''. உலகத்தோடு சேர்ந்தியங்கும் இத்தளத்தில் இருந்தே சம்பிரதாயங்களும் தோற்றம் பெறுகின்றன.

உலகந் தழீஇய ஒட்பம் உடையனாய் வாழத் தவறும் ஒருவரைச் சமூகம் விலக்கி வைக்கப் பின்னிற்பதில்லை. இவ்வாறு விதி வகுக்கும் உலகம் பொதுப்பார்வை, சிறப்புப்பார்வை, உலகத்தோடொன்றல், ஒழுகல் என விதி விலக்குகளையும் உட்புகுத்தி ஒன்றாகி இரண்டாகி பலவாகி வேறுமாகி நிற்கின்றது. இதனாலேயே,

***''இருவே றுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு''*** என்று வள்ளுவங் காட்டும் நல்லவை, தீயவை எனப் பகுக்கும் போது, எப்பொழுதும் பெரும்பான்மையே பலராலுங் கருத்துட் கொள்ளப்படும். ஏனெனில் எதுவும் முற்று முழுவதாகக் கெட்டதாகவோ, நல்லதாகவோ இருப்பதில்லை. ஆதலால் நல்லது கெட்டதைத் தீர்மானிக்கத் தெள்ளியார்க்கே (தெளிவான அறிவுடையார்க்கே) இயலும் என்பது வலியுறுத்தப்பட்டது.

மேலும் செல்வத்தை ஈட்டவும் காக்கவும் பயன்பெறவும் இவ்வறிவுடையாராலேயே இயலும் என்றானால், அறிவிலார் செல்வராகவும் அறிவுடையார் வறியராகவும் இருக்க நேர்வதேன்? ஊழ்தான் அன்றோ! என்பர் ஒருசாரார். ஏதோ ஒன்றில் ஊறித்திளைத்தவன் அதற்குள்ளே மூழ்கிவிடுவான். செல்வன் செல்வந் தேடுவதிலும் கல்வியுடையான் அதனுள் மூழ்குதலும் அவரவர் வேட்கைகளாகின்றன. ஆதலால் திரு வேறு; தெள்ளியராதல் வேறு என்றாகின்றது. ஆதலின் ''உலகமென்பது உயர்ந்தோர் மாட்டேயாம்''. உலகெனப்படும் இவ்வுயர்ந்தோரின் பழிப்புக்கு அஞ்சி, அவர்கள் பழிப்புக்காளாகாமல் வாழ வேண்டும்.

இதற்கெல்லாம் சம்பிரதாயங்கள் கைகொடுக்கின்றன. சம்பிரதாயங்களும் பண்பாடு என்றாகின்றன.

**ஒப்பாசாரம் உயர்பண்பை உண்டாக்கும்**

வீட்டுக்கு வரும் அன்பரொருவரை சம்பிரதாய பூர்வமாக உபசார வார்த்தையுடன் வரவேற்கின்றோம். வந்தவரும் இருந்து பேசிவிட்டுப் புறப்பட ஆயத்தமாகிறார். வீட்டின் தலைவியும் ஒப்பாசாரமாக தேநீர் அருந்திச் செல்லுமாறு கேட்கின்றார். அது சம்பிரதாயமான வார்த்தை என உணர்ந்து அவ்வன்பர் வேண்டியதில்லை என்று கிளம்புகின்றார். வீட்டின் தலைவியும் வற்புறுத்தத் தவறுகிறாள் ஏன்? அவளுக்கு மனமிருந்தால் முதலிலேயே கொடுத்திருப்பாள். கேட்டால் பொதுவாக எவரும் வேண்டாமென்று மறுத்தல் வழமையே. இதைத் தெரிந்துணர்ந்த வீட்டுத்தலைவியும் வெறும் ஒப்பாசாரமாகத்தான் கேட்டு வைத்தாள்.

***''உண்ணீர் உண்ணீர் என்றுபசரியார் தம் மனையில் உண்ணாமை கோடி பெறும்''***

என்பதற்கிணங்க அன்பர் தேநீர் அருந்தாமலேயே புறப்படுகின்றார். வீட்டுத்தலைவியின் போலித் தன்மைகளை நன்குணர்ந்த, அப் பெண்ணின் கணவர் ஒப்பாசாரமாகவாகுதல் கேட்டாளே - முன்பெல்லாம் இப்படிக்கூட இவள் கேட்பதில்லை. அந்தவகையில் தற்போது இவளது வழக்கத்தில் சிறிது முன்னேற்றம் தெரிகிறது என்றெண்ணி ***''இந்தப் பழக்கம் உன்னை என்றோ ஒருநாள் மனப்பூர்வமாகச் செயற்படத்தூண்டும்''*** எனக்கூறி தமது மனைவியின் தவறை எடுத்துணர்த்தி வைத்தார்.

மிகச் சிறிய உதவி செய்தவரையும் பார்த்து அதற்காக நன்றி சொல்லுதல் ஒரு சம்பிரதாயம். நன்றி சொல்லப் பழகிவிட்டால் அதன் இயல்பால் 'நா' இயல்பாகவே நன்றி சொல்லிவிடும். அது உதவி செய்தவனின் மனதைக் குளிர்விக்கும். பேருதவி செய்தாரைப் போற்றும் நெறியுள் அவனை இட்டுச் செல்லும். நன்றி பேணும் பண்பை வளர்க்கும். நல்லது செய்யத் தூண்டும்.

***''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார்''***

உதவி சிறிதாயினும் தகுந்தவனுக்கு ஆற்றினால் அது மிக்க பயனாகும்.

ஒரு நாள் மாலை எதிர்பாராமல் நண்பரொருவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கிறேன். அவ்வீதியின் பக்கத்துத் தெருவில் வசிக்கும், எனது அந்த நண்பரது மூத்த சகோதரனின் மகன் எம்மை அடையாளம் கண்டு அவ்விடம் வருகின்றான். கண்டதும் தனது சிறிய தந்தையாரான எனது அந்த நண்பரிடம் அவன் சொல்கின்றான் ***''என் மகன் தொடர்ச்சியாகச் சோர்வுற்றுக் காணப்பட்டதால் வைத்தியசாலையில் என் திருப்திக்காகக் கொண்டு சென்று காட்டினேன்''*** அவனது சித்தப்பாவான எனது நண்பரும் மிகப் பரிவாக அதனைக்கேட்டு அவனுக்கு ஆறுதல் வார்த்தை கூறுகின்றார். உண்மையில் எனது நண்பரின் சகோதரரின் மகனும் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகவே தனது மகன் குறித்த விவரத்தைச் சொல்லிப் போய்விடுகின்றான். அது சாதாரண விடயம் ''வருத்தம் என்று சொல்லும்போது ஆதரவாகப் பேச வேண்டும். அல்லாமலும், அவனது திருப்திக்காக சம்பிரதாயமாக ஒரு நாளைக்கு அவன் வீட்டுக்குப் போய்வரவேண்டும்'' என்கின்றார். மேலும் ''அவன் படித்தவன் சின்ன விடயங்களைப் பெரிது படுத்தமாட்டான். என்னைக் கண்டதும், ஏதோ கதைக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னான். நான் சம்பிரதாயமாகவாகுதல் அவனது வீட்டுக்குப் போகவேண்டியது அவசியம். அவன் குழந்தையுடன் பேசவேண்டும், விசாரிக்க வேண்டும். அதனால் உள்ளம் மகிழும். சித்தப்பா என்மீது அன்பு காட்டுகிறார் என்ற உணர்வு அவனுக்கு வரும். இந்தச் சம்பிரதாயம் தொடர்பை வளர்க்கும் - அன்பைப் பெருக்கும்'' என்றார். நானும் என் பங்குக்கு குமரகுருபரரின்

***''நாவின் நுனியில் நயமிருக்கின் பூமாதும் நாவினிய நல்லோரும் நண்ணுவர் -நாவிநுனி ஆங்க டினமாகில் அத்திருவுஞ் சேரார்முன் ஆங்கே வருமரணம் ஆம்''***

என்ற பாடலை நினைப்பூட்டினேன், மகிழ்ந்தார் நண்பர். இன்சொல்லே உடையராதல் வேண்டுமென்ற இவ்வுயர் நெறி நம்முன்னோரின் பாடல்கள் மூலமும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.

மேலும், வீட்டுக்கு வந்தவர் எதிரியாக இருந்தாலும் அவரை வரவேற்றலே பண்பு எனக் கூறக் கேட்டிருக்கின்றோம். வந்தவர் எம்மிடையேயான பகைமையை மறந்துவர, நாம் பகைமை பாராட்டுவது பண்பாகுமா? கூடாது. அப்படியிருக்க வீட்டுக்கு வந்த உற்றார், உறவினர், நண்பர்களை வரவேற்று உபசரிக்கத் தவறுதல் நற்பண்பாகுமா?



அதேவேளை, உள்ளம் பொருந்தா உறவுகளினால் ஏதுபயன். அவை தவிர்க்கப்பட வேண்டியவையே. ஆயினும் பொருந்தாத உறவுகளேயாயினும், உள்ளம் பொருந்தாத சம்பிரதாய வார்த்தைகளையாகுதல் வெளிப்படுத்த வேண்டாமோ! அந்தச் சம்பிரதாயங்கள் நாளடைவில் நல்லன பொருந்தும் வழிக்கு வழிசமைக்க் வாய்ப்புண்டல்லவா? எனவே அவற்றை உள்ளம் பொருந்தாத சம்பிரதாயங்கள் என விலக்க வேண்டியதில்லை. அச் சம்பிரதாயங்கள் கலாசார விழுமியங்களுக்கு உத்வேகம் தரும் வாயில்களாகவும் அமைகின்றனவே!

***

காப்பியதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதல் முறையாக இரவில் கார்ப்பந்தயம் ஸ்பெயின் வீரர் அலோன்சா வெற்றி

முதல் முறையாக இரவில் நடந்த பார்முலா 1 கார்ப் பந்தயமான சிங்கப்பூர் கிராண்பிரிக்சில் ஸ்பெயின் வீரர் அலோன்ஸா வெற்றி பெற்றார். கார்ப் பந்தயங்களில் மிகவும் பிரபலமானது பார்முலா 1 கார் பந்தயம். இந்த ஆண்டுக்கான பார்முலா 1 பந்தயம் உலகம் முழுவதும் 18 சுற்றுகளாக நடை பெற்று வருகிறது. இதன் முடிவில் அதிக புள்ளிகளைப் பெறும் வீரர் உலக சம்பியன் பட்டத்தைப் பெறுவார்.

இந்தப் பருவ காலத்துக்கான போட்டிகள் இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்ட நிலையில் 15 ஆவது கிராண்ட்பிரிக்ஸ் பந்தயம் சிங்கப்பூரில் நடந்தது. இந்தப் போட்டிக்கு மகத்தான பெருமை உண்டு. அதாவது இங்கு பார்முலா 1 பந்தயம் நடப்பது இதுதான் முதல் முறையாகும். அதுவும் ஓட்டம் இரவில் அரங்கேறியது. 58 ஆண்டு கால பார்முலா 1 கார்ப்பந்தய வரலாற்றில் இரவில் நடத்தப்பட்ட முதற்போட்டி என்ற சிறப்பை சிங்கப்பூர் பெற்றது.

சிங்கப்பூர் கிராண்ட்பிரிக்ஸ் பந்தயத்தின் மொத்த தூரம் 309.87 கிலோ மீற்றர் ஆகும். இது 61 சுற்றுக்களைக் கொண்டது. ஒரு சுற்று என்பது 5.067 கிலோமீற்றர் ஆகும். அங்குள்ள மெரினா பே பகுதியில் பொது மக்கள் உபயோகப்படுத்திய சாலையே ஓடுதளமாக மாற்றப்பட்டது. ஓடு தளத்தின் இரு புறத்திலும் அதிக வெளிச்சம் தரக்கூடிய 1500 விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. இதற்காக 31 லட்சத்து 80 ஆயிரம் வோட்ஸ் மின்சாரம் பயன்படுத்தப்பட்டது.

சிங்கப்பூர் நேரப்படி இரவு 8 மணிக்குப் போட்டி தொடங்கியது. பங்கேற்ற 20 வீரர்களும் காரை ஜெட் வேகத்தில் இயக்கினார்கள். வளைவுகளில் (மொத்தம் 24 வளைவு) மிகவும் எச்சரிக்கையுடன் திருப்பினார்கள். சில கார்கள் விபத்தில் சிக்கின. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் போட்டியில் 15 ஆவது ஒழுங்கில் இருந்து புறப்பட்ட றெனல்ட் அணி வீரரும் ஸ்பெயினைச் சேர்ந்தவருமான பெர்னாண்டோ அலோன்சா வெற்றி பெற்றார்.

அவர் பந்தய தூரத்தை 1 மணி 57 நிமிடம் 16.304 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இரண்டு முறை உலக சாம்பியனான அலோன்சா இந்தப் பருவகாலத்தில் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். அவருக்கு 10 புள்ளிகள் கிடைத்தன. அலென்சாவை விட 2.957 வினாடி கள் பின் தங்கிய நிகோரோஸ்பர்க் (ஜேர்மனி) 2 ஆவதாகவும் மெக்லரன் அணி வீரர் லுவிஸ் ஹமில்டன் (இங்கிலாந்து) 3 ஆவதாகவும் வந்தனர். இதுவரை நடந்த 15 சுற்றுப் போட்டிகள் முடிவில் ஹமில்டன் 84 புள்ளிகளுடன் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறார்.

அடுத்த போட்டி ஜப்பானில் வரும் 12 ஆம் திகதி நடைபெறுகிறது.

## விளையாட்டு அரங்குகளில்

# டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலைவராக கில்கிறிஸ்ட் நியமனம்



இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில் மோசமாக செயற்பட்ட டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலைவராக வி.வி.எஸ்.லக்ஷ்மனுக்கு பதில் அடம் கில்கிறிஸ்ட் நியமிக்கப்பட்டுள்ளார். முதலாவது இந்திய பிரிமியர் லீக் போட்டியில் பங்கேற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணியில் நட்சத்திர வீரர்கள் இடம்பிடித்திருந்தாலும் அந்த அணி தனது 14 ஆட்டங்களில் இரண்டில் மட்டுமே வெற்றிபெற்றது. இதன் மூலம் அந்த அணி தொடரில் கடைசி இடத்தையே பிடித்தது. இந்நிலையில் டெக்கான் சார்ஜர்ஸின் தலைமையை மாற்ற அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதன்படி அணியின் தலைவராக இருந்த இந்திய அணியின் விசேட டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஷ்மன் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். பதிலாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் அடம் கில்கிறிஸ்டுக்கு தலைமை பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல் டெக்கான் சார்ஜஸ் அணியின் தலைமை நிர்வாகி டிம் சைட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கில்கிறிஸ்டுக்குச் சர்வதேச அளவிலும் அணியிலும் நல்ல மதிப்பு உள்ளது. அணி வீரர்களின் திறமையை அவரால் ஒருங்கிணைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. டெக்கான் அணியின் 4 வீரர்கள் இலங்கை பயணம் மேற் கொண்ட இந்திய அணியில் இடம்பெற்றிருந்தனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஐ.பி.எல். தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக அதிக ஓட்டங்களைப் பெற்ற அடம்கில்கிறிஸ்ட் லக்ஷ்மனுக்குக் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடைசி 8 போட்டிகளிலும் அணியை வழி நடத்தியமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடரில் அவர் மொத்தமாக 436 ஓட்டங்களைப் பெற்றார். இதன் ஓட்ட சராசரி 33.53 ஆகும்.

எனினும் டெக்கான் சார்ஜஸ் அணியில் உலகின் முன்னணி வீரர்களான ஷஹீட் அப்ரிடி, அன்ரூ சைமன்ட்ஸ், ஸ்கொட் ஸ்டைரிஸ், ஹெர்ஷல் கிப்ஸ், சமிந்த வாஸ் ஆகியோர் விளையாடிமை விசேட அம்சமாகும். இது தவிர டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் பயிற்சியாளராக செயற்பட்ட ரொபின் சிங்கும் அந்த பதவிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். பதிலாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டெரன் லீமன் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# செஸ் தர வரிசையில் ஆனந்த் வீழ்ச்சி!



ஜனவரி 1997 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக செஸ் உலக தரவரிசையில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் முதல் 3 இடங்களுக்கும் கீழ் இறங்கியுள்ளார். அதாவது ஆனந்த் 5 ஆவது இடத்தில் உள்ளார்.

பல்கேரியாவின் டோபலோவ், ரஷ்யாவின் அலெக்சாண்டர் மொரோசேவிச், உக்ரைனின் இவான்சுக், நோர்வேயின் கார்ல்சன் ஆகியோர் முறையே முதல் 4 இடங்களில் உள்ளனர்.

2791 புள்ளிகள் பெற்ற டோபலோவ் முதலிடத்தை மீண்டும் பிடித்தார். பில்போபில் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் செஸ் தொடரில் 15 புள்ளிகளை இழந்த ஆனந்த் 2783 புள்ளிகளைப் பெற்றார்.

உலக சம்பியன் கிராம்னிக்கும் 16 புள்ளிகளை இழந்து 6 ஆவது இடத்திற்குச் சரிந்தார்.

மற்ற இந்திய செஸ் வீரர்களான சசிகரன் உலக தர வரிசையில் 35 ஆவது இடத்திற்கும் ஹரிகிருஷ்ணா 62 ஆவது இடத்திற்கும் வீழ்ச்சியடைந்தனர்.

# ஐ.சி.சி. ஒருநாள் விதிகளில் இம் மாதம் முதல் மாற்றம்



ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் இரண்டு அல்லது மூன்றாவது பவர் பிளேயைத் துடுப்பாட்ட அணி தேர்வு செய்துகொள்ளலாம் என்ற புதிய விதி இந்தமாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது. கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஐ.சி.சி நிறைவேற்று குழுவின்போது அனுமதிக்கப்பட்ட புதிய விதிகள் இம்மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. இதன்படி இம்மாதம் நடைபெறவுள்ள நியூஸ்லாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரிலிருந்து நடைமுறைக்கு வருகின்றன.

இதில் ஒருநாள் போட்டிகளில் நடைமுறையில் உள்ள 20 ஓவர் பவர் பிளே முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மூன்று பவர் பிளேயையும் களத்தடுப்பில் ஈடுபடும் அணியே எடுத்து வந்தது.

எனினும் தற்போதைய விதிமாற்றத்தின் படி துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அணி 2 அல்லது 3 ஆவது பவர் பிளேயை தீர்மானிக்கலாம் என்ற விதி நடைமுறைக்கு வருகிறது. பவர் பிளே விதியில் செய்யப்பட்டுள்ள மற்றொரு முக்கியமான திருத்தம், 2 மற்றும் 3 ஆவது பவர் பிளேயில் 30 அடி வட்டத்திற்கு வெளியே 3 களத்தடுப்பாளர்களை நிறுத்தலாம் என்பதாகும்.

இதுவரை 2 மற்றும் 3 ஆவது பவர் பிளேகளில் 30 அடி வட்டத்திற்கு வெளியே இரண்டு களத்தடுப்பாளர்களே அனுமதிக்கப்பட்டனர். அதேபோன்று ஆட்டத்திற்கு இடையே வீரர்கள் சௌகரிய ஓய்வு எடுத்துக் கொள்வதைத் தடுக்க, காயம், உடல் நலம் இன்மை மேலும் ஒப்புக்கொள்ளக்கூடிய காரணம் ஆகிய சந்தர்ப்பங்களில் மட்டுமே பதில் களத்தடுப்பாளர் அனுமதிக்கப்படுவார் என்ற விதியும் இம்மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது.

இது தவிர 35 ஓவர்களில் புதிய பந்து மாற்றம் மற்றும் ஒருநாள் இன்னிங்ஸ்களுக்கு இடையிலான காலத்தைக் குறைத்தல் போன்ற விதிகளும் இம்மாதம் முதல் அமுலுக்கு வருகின்றன. (50)

# பாகிஸ்தான் போட்டிகள் டுபாயில்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி விளையாடும் சர்வதேச போட்டிகளை டுபாய் விளையாட்டு நகரத்தில் நடத்த ரூபா 40 கோடிக்கு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாகிஸ்தானில் நடக்கவிருந்த சாம்பியன்ஸ் கிண்ணப்போட்டி அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. அங்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்க்கும் வகையில், போட்டிகளைப் பொதுவான இடத்தில் நடத்த பாகிஸ்தான் சபை திட்டமிட்டது. டுபாய் விளையாட்டு நகரம் இந்தப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

இதற்காக 3 ஆண்டுகளுக்கு ரூபா 40 கோடியைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு வழங்க டுபாய் விளையாட்டு நகர நிர்வாகம் ஒப்புக் கொண்டுள்ளது. பாகிஸ்தான் அணி விளையாடும் சர்வ தேச ஒருநாள் மற்றும் இருபது 20 போட்டிகள் இங்கு கட்டப்பட்ட உள்ள கிரிக்கெட் அரங்கில் நடத்தப்படும்.

# எத்தியோப்பிய வீரர் புதிய சாதனை




எத்தியோப்பிய மரதன் வீரர் கெப்சே லாசி, மரதன் போட்டியில் புதிய சாதனை படைத்துள்ளார். மரதன் போட்டியில் உலக சாதனைக்குச் சொந்தக் காரரான எத்தியோப்பியாவின் கெப்சேலாசி, பேர்லினில் நடை பெற்ற மரதன் போட்டியில் தனது சொந்தச் சாதனையை முறியடித்து முதல் இடத்தைப் பிடித்தார்.

அவர் 2 மணி நேரம், 3 நிமிடங்கள் மற்றும் 59 நொடிகளில் முதல் இடத்தைப் பிடித்தார். சுற்றுச்சூழல் காரணங்களுக்காக இவர், பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க மறுத்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்

## சக்கரக்கட்டி



பிரபல இயக்குநரும், நடிகருமான கே.பாக்யராஜின் மகன் சாந்தனு மற்றும் இஷிதா, வேதிகா ஆகியோரின் நடிப்பில், கலைப்புலி எஸ்.தானுவின் தயாரிப்பில் அவருடைய மகன் கலாபிரபு இயக்கத்தில், வெளிவந் திருக்கும் படம் 'சக்கரக் கட்டி'



தமிழ் சினிமா வில் பார்த்து பார்த்து அலுத்துப் போன முக்கோணக் காதல் கதையொன்று கொஞ்சம் நகைச்சுவை கலந்து சுவாரஸ்யமாக சக்கரக் கட்டி படத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரே கல்லூரியில் படிக்கும் சாந்தனுவுக்கும் இஷிதாவுக்கும் காதல் நெருப்புப் பற்றிக் கொள்கிறது. இந்தவேளையில் அதே கல்லூரியில் படிக்க வருகின்ற சாந்தனுவின் அத்தை மகளான வேதிகாவும் சாந்தனுவை ஒரு தலையாகக் காதலிக்கிறார். இஷிதாவிடம் கொண்டுள்ள காதலையும், வேதிகாவிடம் காதல் கொள்ள வில்லை என்பதையும் நிரூபிக்க சாந்தனு செய்யும் முயற்சிகளெல்லாம் காலை வாரிவிடப் பிரச்சினை வலுக்கின்றது.

இறுதியில் வேதிகாவும், இஷிதாவும் சாந்தனுவைப் புரிந்துகொண்டு இருவருமே ஒருவர் மற்றொருவருக்கு சாந்தனுவை விட்டுக் கொடுக்கத் தீர்மானிக்கின்றனர். இதன் விளைவு என்ன என்பதனையே சக்கரக்கட்டி சொல்கிறது.

மற்றைய அறிமுக நடிகர்களைபோல அடிதடி, பொறிபறக்கும் வசனங்கள், வாய்ச் சவாடல் என்றில்லாமல் மென்மையான காதல் கதையில், அழுத்தமான நடிப்பைக் காட்டியிருக்கிறார் சாந்தனு.

அவரைப் போலவே வழமையான முக்கோணக் காதல் கதையை வித்தியாசமாகப் படமாக்கி தன்மீதான எதிர்பார்ப்பை அறிமுகப் படத்திலேயே ஏற்படுத்தியிருக்கிறார் இயக்குநர் கலாபிரபு.

ஏ.ஆர்.ரஹ்மானின் இசையில் வந்துள்ள பாடல்கள் படத்தின் பெயரைப் போலவே சக்கரக்கட்டியாய் இனிக்கின்றன.

மொத்தத்தில் இளைஞர்களின் இளமைத் திருவிழாவாக அமைந் துள்ளது 'சக்கரக்கட்டி'★

# இளையராஜாவின் பாடலில் சிம்பு



சோகப்பாடல்களை மட்டுமே எனக்கு பாடத் தருகிறார்கள் என்ற வருத்தம் இளையராஜா வுக்கு உண்டு.

வெளிப்படையாக இதனைத் தனது மகன்களிடம் கூறியிருக்கிறார் இளையராஜா. அதன் பிறகே பட்டியல் படத்தில் வரும் "நம்ம காட்டுல" என்ற குத்துப் பாடலைப் பாட இளையராஜாவுக்கு வாய்ப்பளித்தார் யுவன் ஷங்கர் ராஜா.

இப்போது சிலம்பாட்டம் படத்தில் சிம்புக்காகவும் ஒரு காதல் தன்மையான குத்தாட்டப் பாடலைப் பாடியிருக்கிறார் இளையராஜா. அவருடன் இணைந்து பாடியிருப்பது ஸ்ரேயா கோஷல்.

இளையராஜா எப்போதும் இளைமை ராஜாதான்.★★★




# அஜித்தின் அடுத்த படம்



தற்போது அஜித் நடித்து வரும் 'ஏகன்' படத்தைத் தொடர்ந்து சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கும் புதிய படத்தில் அஜித் நடிப்பது உறுதியாகியுள்ளது. 'காக்க காக்க' படத்தை இயக்கிய கௌதம் மேனன் இப்படத்தை இயக்குகின்றார்.

படத்தின் கதையை அஜித் மற்றும் தயாரிப்பாளரிடம் கூறியிருக்கிறார் கௌதம் மேனன். படத்தின் கதை இருவருக்கும் பூரணமாக பிடித்து விட்டது. இதனால் விரைவில் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது.

அஜித்தின் ஜோடியாக சாமீர ரெட்டி நடிக்கிறார். ஹரிஸ் ஜெயராஜ் இசையமைக்கின்றார். படத்துக்கு ஒளிப்பதிவு செய்பவர் நீரவ்ஷா. இவர் கௌதம் மேனனின் படத்திற்கு ஒளிப்பதிவு செய்வது இதுவே முதல்முறை. படத்துக்கு 'சுராங்கனி' என்ற பெயர் பரிசீலனையில் உள்ளது. இந்தப் படம் அஜித்துக்கு ஒரு திருப்புமுனையாக அமையுமென்று இயக்குநர் நம்பிக்கை தெரிவித் திருக்கின்றார்.★★★

# த்ரிஷாவின் புது முடிவு



தமிழில் முன்னணி நாயகியாக உயர்ந்து இப்போது ஹிந்திப் படவுலகிலும் தனியிடத்தைப் பிடித்துள்ள அசினின் வழியில் ஹிந்தியில் கோலோச்ச முடிவு செய்திருக்கிறார் 'மர்மயோகி' நாயகிகளில் ஒருவரான த்ரிஷா. கமலின் 'மர்மயோகி' ஹிந்தியிலும் உருவாகுவது தெரிந்த சங்கதிதான்.

த்ரிஷாவின் எண்ணத்திற்கு ஏற்ற மாதிரி ஹிந்திப்பட் உலகமும் அவருக்கு இப்பொழுதே வரவேற்புக் கொடுக்க ஆரம்பித்து விட்டது. மர்மயோகி ஆரம்பமாவதற்குள்ளாகவே ஹிந்திப்படவுலகில் மிக அதிக சம்பளம் வாங்கும் அக்ஷசய்குமார், த்ரிஷாவுக்குச் சிறப்பு அழைப்பு விட்டிருப்பதுடன், தன் படம் ஒன்றிற்கு நாயகியாக நடிக்கும் படியும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

பாவம் தமிழ் ரசிகர்கள்! த்ரிஷாவின் தரிசனமின்றித் தவிக்கப் போகின்றார்கள்.★★★

# மனிதம் காக்கும் லோரன்ஸ்



நடன இயக்குநரும், நடிகருமான ராகவா லோரன்ஸ் ஈர முள்ள இதயம் படைத்தவர். ஊனமுற்றோர் மற்றும் அனாதைகள் நல்வாழ்வுக்காகச் சென்னை அசோக் நகரிலுள்ள தன் வீட்டை தானமாகக் கொடுத்து, பாதுகாப்பு இல்லம் ஒன்றை நடத்தி வருகின்றார் லோரன்ஸ்

அவரது சேவைகளைப் பற்றி கேள்விப்பட்ட ரஜினி, அந்த இல்லத்தில் இருப்பவர்களின் சாப்பாட்டுச் செலவிற்காக மாதம் 15 ஆயிரம் ரூபாய் வழங்கி வருகின்றார்.

இந் நிலையில், ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யாவும் லோரன்ஸின் அனாதை இல்லத்துக்கு மாதந்தோறும் 15 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் படப்பிடிப்பு, பிரமாண்டமான காட்சியமைப்புகள் எனத் தமிழ் சினிமாவில் வீணே கரையும் பணத்தை இப்படி நல்ல முறையில் பயன்படுத்த திரையுலகத்தார் முன்வருவார்களா?.★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானின் பாதங்களில்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

'ஆ! என் கையிலிருந்த பத்து ரூபா எங்கே? எங்கே போயிற்று? எப்படிப் போயிற்று.........'

அவனைக் காணவில்லை.

'அட மனிதர்களே'.

அவளை உரசிக் கொண்டு போன அவன், எங்கிருந்தோ வந்து எப்படியோ மறைந்து விட்டான், கணத்தில் ஒரு சாதனையோடு.

புனிதா விரக்தியோடு மாடிக்குத் திரும்புகிறாள்.

குழந்தையொன்று வீறிட்டலறுகிறது. புனிதா திரும்பிப் பார்க்கிறாள். அந்தக் குழந்தைகளில் ஒன்றுதான். அதன் கையிலிருந்த காய்ந்துபோன ரொட்டித் துண்டைக் காகம் ஒன்று எத்தித் திருடிக் கொண்டோடுகிறது.

தாய் ஓடோடி வருகிறாள். அந்தக் குழந்தையின் முதுகில் இரண்டறைகள் வைக்கிறாள். குழந்தை துடிதுடித்துக் கொண்டோடுகிறது, அருகிலிருக்கும் அரச மரத்தைநோக்கி.

அதோ புத்த பகவான். நிரந்தரத் தவ நிலையிலிருக்கிறார் அவர். ஓடி வந்த குழந்தை பகவானின் கால் முட்டியைப் பற்றியபடி மிரண்டுபோய்த் தாயையும் தந்தையையும் மாறிமாறிப் பார்க்கிறது.

அந்தச் சின்னப் பெட்டையை அடித்து விட்டாளே என்ற 'இரத்த பாசம்' அவனுக்கு மேலும் ஆத்திரத்தைக் கிளறுகிறது. அந்த ஆக்ரோஷத்தையெல்லாம் தன் கருங்காலிக் கரத்திலே தேக்கி மனைவியின் கன்னத்தில் அறைகிறான்.

''அம்.......மா.......'' சீவனற்றிருந்த அவ்வுருவம் தடாலெனப் பூமாதேவியைத் தழுவிக்கொள்கிறது.

''சீ! எழுந்திரடி.....'' என்றதைத் தொடர்ந்து சில தூஷண வார்த்தைகள். அந்த ஆவேசக் குரலுக்கு உருவம் தருவதைப் போல ஓங்கி உதைக்கிறான் அவன் அவளை. அந்த உதை தாய்மையின் கோயில் எனப்படும் அந்த எளியவளின் அடிவயிற்றில் இறங்குகிறது.

''ஐயோ!'' அகலப் பிளந்த அவளது உருக் குலைந்த வாயிலிருந்து ஏதோ 'கொழக்' எனச் சிந்துகிறது.

இரத்தக் கட்டி!

''அம்மா.....'' அலறிக்கொண்டு ஓடி வந்த குழந்தைகள் 'அப்பனின்' விறைத்த நிலையைக்கண்டு ஒதுங்கி நின்று விடுகின்றன.

இரத்தத் துடிப்பிற்கும், இரத்த உறவிற்கும் கூட வேலி போட முடியுமா? அவன் வேலியும், வெறியுமாய் நிற்கிறான்.

கணங்கள் விரைந்து மடிகின்றன. அவன் என்ன நினைத்துக் கொண்டானோ தெரியவில்லை, அவளைத் தூக்கி ஒரு ஓரத்தில் கிடத்துகிறான். விரைந்து போகிறான்.

இத்தனை நாளும் தன்னோடு மல்லுக்கு நின்று நின்றே, இணைந்து வாழ்ந்தவளுக்கு ஏதோ வைத்தியம் செய்யத்தான் போகிறான்.

பாவம்! அவள் எல்லாவற்றையுமே மறந்து ''அது'' என்றாகி இரண்டு நிமிடங்களாகிவிட்டதை அவன் அறிந்திருக்கவில்லை.

புத்தரின் சிலையருகே நின்றிருந்த சிறுமி தன் தாயிடம் ஓடிவர நினைத்த போது......

அவள் அப்படியே நிற்கிறாள். அவளெதிரே-

ஒரு கனவான் தன் 'பேபி'யுடன் வந்து கொண்டிருக்கிறார். எழில் கொஞ்சும் அந்தச் சிறுமியைப் பார்த்தபடியே அந்த ஏழைக் குழந்தை நிற்கிறது. அந்தக் குழந்தையும் இவளையே குறுகுறுத்த விழிகளால் பார்த்துக் கொண்டே வருகிறது.

குழந்தையும் குழந்தையும்!

குழந்தைக்கும் குழந்தைக்கும் ஏற்படும் உறவு, பந்தம், பாசம் எல்லாம் ஆழ்கடலில் ஜனித்து, அந்தக் கடற் படுக்கையிலேயே - கூழாங்கற்களுக்கிடையில்- இருந்துவிடும் பவளமணிதானோ!

கனவான் போதி விருட்சத்தை அண்மித்துவிட்டார். அவர் இப்போது தன் காற்சட்டைப் பைகளைத் துளாவுகிறார்.

அவரின் செல்வம் இப்போது பகவானின் பிறிதொரு கால்முட்டியருகில் நிற்கிறது.

நிஷ்டையிலிருக்கும் பகவான் அவ்விரு மழலைகளையும் பார்க்கிறாரா? அவ்விரு மதலைகளையும் இரட்சிக்கின்றாரா? அவ்விரு ஜீவ மலர்களையுமே அரவணைத்துக் கொள்கின்றாரா?

விந்தையான தரிசனம்!

பகவானின் இரு புறங்களிலும் அவருக்கே அர்ப்பணிக்கப்பட்டதைப் போல பனியும் படியாத இரு பாரிஜாதங்கள்.

அந்த அரச மரத்தடியே பெரியதோர் பூத்தட்டம் போன்ற பிரமை புனிதாவுக்கு.

இமைகளை மூடிக்கொள்கிறாள் புனிதா. உலகத்தையே உறுத்திக் கொண்டிருந்த ஒரு இராட்சத மலை திடீரெனத் தகர்ந்து மட்டமாகிவிடுகிறது.

கண நேரந்தான்!

எங்குமே புஷ்பக் காடாய் அலரிப் பூக் கூட்டம்!

கண நேரந்தான்!

மாசு படாத இரு மலர்கள் திடீரெனத் தாவித் துடித்து ஏறிப் பகவானின் இரு நேத்திரங்களிலும் அமர்ந்து கொள்கின்றன.

கண நேரந்தான்!

வசந்த கோலம்! வசந்த கோலம்!

புனிதா இமைகளைத் திறக்கிறாள். சட்டென விழிகள் திறந்தபோது 'எங்கோ' இருந்தவள் மண்ணில் 'விழ' சுரீரெனச் சுட்டுவிடுகிறது வெயில். ஒரு முறை இமைகளை மூடித்திறக்கிறாள். 'வெயில் என்பது இயற்கை' என்ற உணர்வும் வந்துவிடுகிறது.

அந்தக் கனவான் தன் பைக்குள்ளிருந்து ஒரு நாணயத்தை வெளியிலெடுக்கிறார். நீட்டுகிறார்-

இலைமறை காய்மறையென இடுப்பில் சுற்றிய கந்தையோடு மேலெல்லாம் பிறந்த கோலமாய் நின்றிருந்த அந்த ஏழைச் சிறுமி நாணயத்தைப் பெற கைகளிரண்டையும் நீட்டுகிறாள் துடிப்போடு. அந்த வேளையில் அந்த முகம் ....... ஹா, நீங்கள் ரோஜா சிரிப்பதைப் பார்த்ததுண்டா.........!

கனவானின் விரல்களின் இடுக்கிலிருந்த அந்த நாணயம் மிக நளினமாக அந்தப் பெட்டிக்குள் விழுகிறது.

அவர் அந்தக் காசை ஏழைச் சிறுமிக்குக் கொடுக்கவில்லை. வறியவர்களுக்காகத் தன்னையே தியாகஞ் செய்துகொண்ட புத்த பகவானின் முன்னால் பதிக்கப்பட்டிருந்த காணிக்கைப் பெட்டகத்திற்குள்தான் 'கிளிங்' என்ற ஓங்காரச் சிரிப்போடு அது விழுகிறது.

பகவானின் பெட்டிக்குள் என்றுமே நிறைவது 'நாணயம்'தான்.

ஏமாற்றமடைந்த ஏழைச்சிறுமி உண்டியல் பெட்டியைக் காண்கிறாள். பிறகு நிர்மலமாயிருக்கும் பகவானின் வதனத்தைப் பார்க்கிறாள். தொடர்ந்து அந்தக் கனவானையும் ஏறிட்டு நோக்குகிறாள்.

அந்தப் பார்வையின் அர்த்தங்கள்.....?

அர்த்தங்கள் அவளுக்குத் தெரியாது. எல்லாவற்றையுமே அந்தந்தப்படிதான் அவள் பார்க்கிறாள். அவளின் பார்வைக்கு என்னதான் அர்த்தம்? அர்த்தமான அர்த்தம்தான்! அவள் இமைகளைச் சிமிட்டி மூடித் திறக்கும்போது சூன்யம் தட்டுப்படுகிறது. அது என்ன என்றும் அவளுக்குத் தெரியாது. அதுவும் அவளுக்குச் சாதாரணமான இருட்டுதான்.

கனவான் பகவானை வணங்குகிறார். அவரின் மழலைச் செல்வமும் அழகாகக் கை கூப்புகிறது. ஏழைச் சிறுமிக்கு என்ன தோன்றிற்றோ, அவளும் கரங்குவித்து நமஸ்கரிக்கிறாள்.

புனிதாவின் இதயம் விம்மி இமைகளினூடாக வெடிக்கிறது. கண்ணீர் வழிந்தோடுகிறது.

கண்ணீருக்கே ஆற்றொணாத் துயரம் என்பதால் அது இதழ்களைச் சரணடைகிறது.

'கண்ணீர் ஏன் இப்படி உப்பாய்க் கரிக்கிறது?'

உப்புக்குச் சுவை சேர்க்கும் குணம் எப்படி இருக்கின்றதோ அப்படியே பரிசுத்தமாக்கும் தன்மையும் இருப்பதனால்தானோ......?

கண்ணீர் இதயத்தையே பரிசுத்தமாக்குமா?

ஆனால்........

மிகப் பலர் கண்ணீர் விடுவதே இல்லையே!

புனிதா கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். இமைகள் தாமாகவே மூடிக்கொள்கின்றன.

மாடியிலிருந்தபடியே பகவானை உற்று நோக்குகிறாள்.

அவரின் மோனம் இன்னமும் கலையவில்லை.

அவரது மேடையின் அடிவாரத்தில் எத்தனையோ மலர்கள்!

பகவானுக்கு எந்த மலர் பிடிக்கும்?

எந்த மலர்தான் அவருக்குப் பிடிக்காது?

எல்லா மலர்களுமே பிடிக்குமா?

..............................!?

பூஜைக்கு வந்த பூக்கள்தானே எல்லாம்? காணிக்கையாவது காசு மட்டுமா? பூக்களும் தானே!

புனிதா இமை குவித்துக் கொள்கிறாள். அவள் யோகியாகிவிட முடியாதுதான். மனிதன் தெய்வமாகலாமா?

'உலகம் கோயிலாக வேண்டும்' என்ற உபதேசம் எங்கும், எங்கெங்கும் எதிரொலிக்கிறது - மோனத்தில்.

அரச மரத்தின் இலைகள் கலகலக்கின்றன.

அவை சிரிக்கின்றன.

அரச மரத்தின் இலைகள் அர்த்தபுஷ்டியோடுதான் சிரிக்கின்றன!

*(நன்றி: பகவானின்பாதங்களில் - சிறுகதைத்தொகுதி)*

***

## சொற்சிலம்பம் - போட்டி இல: 30

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | |
| | ■ | 12 | ■ | 13 | | | ■ |
| ■ | 14 | | 15 | | ■ | 16 | 17 |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |
| 22 | | ■ | 23 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

**இடமிருந்து வலம்**

1. நிறுவுநர்.
5. தோய்.
7. சரித்திரம்.
8. விளக்க.
9. மேல்நாட்டுக் குடிவகை.
10. கிழமைதோறும்.
13. ஒரு நட்சத்திரம்.
14. வலு மிக்கவன் .
16. அரசன்/தலைவன்/வாழு மிடம்
18. அழித்தல் அல்ல.
19. வழங்கும்/கொடுக்கும்.
20. இடித்தல்/முட்டுதல்.
21. முழுக்குக்குப் பயன்படும் சாவு வீட்டிலும் இதற்கு இடம் உண்டு.
22. பேச்சு வழக்கில் - சாப்பிடு/ உண்.
23. தலை நகர்.

**மேலிருந்து கீழ்**

1. இசையுடன் சம்பந்தப்பட்டது இராகபேதம் என்றும் கூறலாம்.
2. மனைவி.
3. முக்கனியில் ஒன்று.
4. வாசனைத் திரவியம்.
5. பருப்பு வகைகளுள் ஒன்று.
6. நவமணிகளுள் ஒன்று.
8. திருமண/கல்யாண.
11. சீதை மணாளன்.
12. தள்ளிப்போதல்/நீங்கல்.
14. தொழுபவன்
15. மனிதனுக்கு இல்லாதது அவன் மூதாதையருக்கு இருப்பது.
17. பூட்டான் தலைநகர்.
18. இணக்கம் தெரிவி.
19. வுகுப்பு.
21. சிரி என்பதற்கு எதிர்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 30**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (1510.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.30இல் வெற்றிபெற்றோர் விவரம் 19.10.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 28 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) சகவாசம் (5) வகு (7) மருந்து (8) பரண் (9) திப்பிலி (11) துதி (13) புத்தகம் (14) வரைபு (16) தம் (17) தவம் (19) வாழி (20) முல்லை (21) சடாயு (22) வேள்வி (23) புனிதம்

**மேலிருந்து கீழ்**
(1) சமத்துவம் (2) கரு (3) வாந்தி (4) சதுப்பு (5) வர (6) குண்டும் குழியும் (8) பலிதம் (10) பித்தம் (12) திரை(15) புதல்வி (18) வலை (19) வாடாத (20) முள் (21) சனி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 28 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவ ரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**செ.பத்மநாதன் ,**
*கலைமணி வீதி,*
*கட்டைப்பிராய்,*
*யாழ்ப்பாணம்.*

**2 ஆம் பரிசு**
**திருமதி பி.யோகேஸ்வரி,**
*ஈஸ்வரி இல்லம், நுகவில்,*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*

**3 ஆம் பரிசு**
**கதிரமலை சசிகலா,**
*குளங்கரை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

**(1) திருமதி [illegible],**
இல:72, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**(2) யோகராசா சஜீவன்,**
கெருடாவில் கிழக்கு,
சீலாப்புலம், தொண்டைமானாறு.

**(3) பா.நிசாந்தன்,**
[illegible] வீதி,
மானிப்பாய்.


**(4) செல்வி ஆரணி சதீஸ்வரன்,**
நாவலடி, புலோலி மத்தி,
பருத்தித்துறை.

**(5) ருக்மணிதேவி ஆறுமுகம்,**
சிவன் வீதி,
ஆவரங்கால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் பதக்கம் வென்ற சாதனை நாயகர்கள்

யாழ்.மாவட்டத்தில் முடக்கப்பட்ட வாழ்வியற் சூழலையும் தாண்டி, பாடசாலைகளுக்கிடையிலான 2008 ஆம் ஆண்டு தேசிய தடகள விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்று யாழ். மண்ணுக்கும், விளையாட்டுத் துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்கள்.



**ச.தனுசா**
அளவெட்டி அருணோதயாக் கல்லூரி - முதலாம் இடம் (தங்கம்)
கோலூன்றிப் பாய்தல் - 17 வயதுப் பிரிவு



**ரி.தர்சன்**
சென்.ஜோன்ஸ் கல்லூரி
இரண்டாம் இடம் (வெள்ளி)
110 மீ.தடைதாண்டல் - 21 வயதுப் பிரிவு



**எம்.பார்த்திபன்**
தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி
இரண்டாம் இடம் (வெள்ளி)
தட்டெறிதல் - 21 வயதுப் பிரிவு



**கே.கோபிநாத்**
உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி
இரண்டாம் இடம் (வெள்ளி)
நீளம் பாய்தல் - 21 வயதுப் பிரிவு



**கே.கணதீபன்**
அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
மூன்றாம் இடம் (வெண்கலம்)
கோலூன்றிப் பாய்தல் - 21 வயதுப் பிரிவு



**கே.சிறிதர்சன்**
தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்
மூன்றாம் இடம் (வெண்கலம்)
கோலூன்றிப் பாய்தல் - 17 வயதுப் பிரிவு



**எஸ்.வாகீசன்**
யாழ்.இந்துக்கல்லூரி
மூன்றாம் இடம் (வெண்கலம்)
குண்டெறிதல் - 21 வயதுப் பிரிவு





கொமர்ஷல் வங்கியின்
## இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டம்

உங்களுக்கு ஏற்றவாறு இரு வைப்பு முறைகள்

- மாதாந்தம் (ஆகக்குறைந்தது ரூபா 100/= ஆகக்கூடியது ரூபா 2500/=) - 2 வயதிலிருந்து 5 வயது வரை
- முழுத்தொகை (ஆகக்குறைந்தது ரூபா 1000/= ஆகக்கூடியது ரூபா 117,000/=)

உங்கள் பிள்ளைக்கு 18 வயதில் ரூபா 10 இலட்சம் வரை

உங்கள் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் நகல் பிரதியுடன்,
இன்றே அருகிலுள்ள கொமர்ஷல் வங்கிக் [illegible] ஒன்றை ஆரம்பியுங்கள்.

*நிபந்தனைகளுக்கு அமைவாக

கொமர்ஷல் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 – 12 – 1939



மறைவு 15 – 10 – 1999

### அமரர் ஆறுமுகம் கமலநாதன்

(B.A.,Dip .in EDU., S.L.P.S. GRADE-I)
(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்- வலிகாம வலயம்)
திதி: பூர்வபக்க ஷஷ்டி (05.10.2008)

கண்ணீரில் கரைந்தது ஆண்டுகள் ஒன்பது
கண்முன்னே நீங்களில்லை எம்மோடு உறவாட
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எந்நேரமும்
உங்கள் நினைவுகளே எம்மை இங்கு ஆளுகின்றன
என்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
காளி அம்பாளை வேண்டுகின்றோம்.

திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன்,
ஐயனார் கோயிலடி,
கோக்குவில் மேற்கு.

உங்கள் பிரிவில் துயருறும்:
குடும்பத்தினர்.

(78968)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்து மகளிர் பாடசாலைக்கு அருகில் அமைதியான சூழலில் 5படுக்கை அறைகள் உள்ள வீட்டுடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0719236350, 077 1117038

(சி/554865)

## யோகம் தரும் இயற்கை வைத்தியம்

வாதம் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் மற்றும் பழைய நோக்களுக்கும் மூலிகை எண்ணெய் மூலமும் குணப்படுத்தி வருகிறோம்.

அனைவரின் வசதி கருதி பயித்தோலை, அச்சுவேலியிலும் கிளை உண்டு.
சாரையடி கிராமக்கோடு, பருத்தித்துறை.
T.P: 0212264694

(78988)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை தரம்- 5
மாணவி **தேனுகா சாந்தகுமார்**
அவர்களின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கைதடி நுணாவில் அ.த.க.பா.

(78982)

## 25 வருட ஆசிரியர் சேவையில்...



### திருமதி அருணாதேவி விஜயகுமார்

(உப அதிபர், S.L.T.S.-I)

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் ஆசிரியையாக இணைந்து உப அதிபராக மிளிர்ந்து 25 வருடங்கள் சேவையாற்றிய திருமதி அருணாதேவி விஜயகுமார் அவர்களை ஆசிரியர் தின நன்னாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

(78960)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 27 . 03 . 1932



உதிர்வு 05 . 09 . 2008

### அமரர் கந்தப்பிள்ளை சுப்பிரமணியம்

(சிதம்பரப்பிள்ளை- பலாலி)

05.09.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

செல்லப்பிள்ளையார் வீதி,
சிறுப்பிட்டி.

(78966)

## விளையாட்டுப் போட்டி

மந்திகை,ஒக்.5

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க கலைவாணி சனசமூக நிலைய வத்தனை மழலைகள் கல்விப் பூங்காவின் விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஞான வைரவர் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வத்தனை மழலைகள் கல்விப்பூங்கா பெற்றோர் சங்கத் தலைவர் என்.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டுப் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(202-218)

## Vacancy

Schweizerische Eidgenossenschaft
Confederation Suisse
Confederation Svizzera
Confederation Svizra

SDC-Swiss Agency for Development and Cooperation is a government organization of the Swiss Ministry of Foreign Affairs. We are looking for a suitable candidate for the following position in Field office Jaffna.

**RECEPTIONIST**

The ideal candidate should have completed G.C.E A/L with 3 passes withminimum three years experience in similar position in an INGO/ NGO

Main duties and responsibilites:

- Providing welcome service
- Telephone switchboard operating
- Keeping and updating of various office records
- Handling pettycash

Other requirements

- High level of fluency in both English and Tamil
- Strong organisational skills, ability to interact effectively with international and national personnel
- Excellent computer skills, including expertise in MS Word, Excell and Out look
- Excellent people interaction skills and a demonstrated ability to support a team effectively
- Ability to work independantly and as part of a team

Appointment will be one year contract, renewable
Attractive and negotiable salary with medical benifits awaits the right candidate.

Please send your application with the cover letter and expected salary within 10 days to:
Swiss Agency for Development and Cooperation
521/11 Point Pedro Road,
Nallur,Jaffna.
Only short listed persons will be contacted

(78959)

# United Nations Development Programme

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with people to find their own solutions to global and national development challenges. As local capacity is developed, nations draw on UNDP and our wide network of partners

UN DP

## VACANCY

UNDP Sri Lanka has a large portfolio of programmes in Sri Lanka. A significant portion of this portfolio consists of projects which are implemented directly by UNDP in the North and East of the country. The United Nations Development Programme Office in Jaffna is looking for energetic, proactive candidate to fill a Mine Action Officer position in Jaffna. The Mine Action officer will be responsible to the Government Agent (GA) of the Jaffna district and report directly to the UNDP Senior Programme Manager in Colombo.

## MINE ACTION OFFICER (Duty Station –Jaffna)

Following an initial period of orientation, the duties and responsibilities of the Mine Action Officer are as follows:

- Lead the implementation of NSCMA policies and directives at the district level.
- Provide technical advice and mine action implementation support to the GA of the Jaffna district.
- Act as the focal point for all aspects of mine action within the Jaffna district.
- Prioritize, coordinate and monitor all activities relating to mine and UXO surveys; marking, tasking, clearance, quality assurance/ control, completion certification and MRE quality assurance activities.
- Supervise Information Management System for Mine Action (IMSMA) data entry and the preparation of reports to the Sri Lanka government, UNDP and other stakeholders.
- Lead strategic planning by the Jaffna DMAO.
- Support on-going General Mine Action Assessments (GMAA) and other assessments carried out by the Jaffna DMAO
- Liaise with the SLA, demining operators and the government agencies, UN agencies and NGOs involved in mine action and resettlement.
- Supervise the Jaffna DMAO staff, including the Administrative & Finance Assistant, the Operations Officer and the QA Team Leader.
- Any other duties agreed upon with the Sri Lanka government, the UNDP Project Office and the UNDP Mine Action Technical Advisor.

For full terms of reference please go to the UNDP Sri Lanka website (check "vacancies") http://www.undp.lk

The successful candidate should possess the following qualifications:


- A Master's degree from a recognized university. An equivalent combination of education and relevant work experience will be considered in the absence of a Master's degree.
- A minimum 03 years experience in programme/project management, including work-plan preparation, activity implementation, performance monitoring and reporting.
- At least two years Mine Action experience. Equivalent technical expertise may be considered in the absence of Mine Action experience.
- Excellent verbal and written knowledge of English with the abiffty to communicate effectively in Tamil/Sinhala
- Working knowledge of email and internet use, word-processing and spreadsheet/database management.

This position offers an attractive remuneration package. Subject to medical clearance, the appointment will initially be for a period of one year, with potential for renewal. Qualified female candidates are encouraged to apply. Qualified candidates are invited to send an updated CV containing detailed educational and professional qualifications and work experience with the names of two non related referees and a contact telephone number during working hours, by Wednesday 15th October 2008. The envelope should be marked clearly with the position vacancy applied for on the top left-hand corner. Applications should be forwarded to the Head of Office, United Nations Development Programme, 121, Temple Road, Jaffna or can be emailed to vacancy.lk@undp.org with the subject indicating the post applied for.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ

## இடுப்பு வலிக்கு சிறந்த நிவாரணி!




அயொடெக்ஸ் இடுப்பு வலி மற்றும் உடல் வலிகளுக்கு உடனடி நிவாரணி.

இப்போது சகல பார்மசிகள் மற்றும் மளிகைக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இடுப்பு வலிக்கான சிறந்த நிவாரணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே கோட்டில் சஞ்சரிக்கும் பாகிஸ்தானும் இலங்கையும்

இலங்கைக்கு ஆயுத உதவிகளை பாகிஸ்தான் வழங்கி வருவதால் அந்த நாட்டுடனான இலங்கையின் நெருக்கம் மேலும் இறுக்கம் அடைந்துள்ளது.

ஆனால், இந்த இரு நாடுகளிலுமே குண்டுகள் வெடிக்கின்றன. யுத்தம் நடக்கிறது.

இலங்கை அரசுக்கு விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் சிம்ம சொப்பனமாகக் கருதப்படுகிறார். அதேபோன்று பாகிஸ்

## அமெரிக்காவைத் தாஜா பண்ணுகிறது ஒன்று இந்தியாவை வால் பிடிக்கிறது அடுத்தது

தானுக்கு அல்குவைதா தலைவர் பின்லேடனும் தலிபான் தலைவர்களும். இவர்களை ஒழித்துக்கட்டுவதற்காக இந்த இரு நாடுகளும் எந்த ஒரு பிசாசுடனும் கூட்டுச்சேரத் தயாராக இருக்கின்றன. எந்த ஒரு பொய் வாக்குறுதியை அளிக்கவும் தயங்கப்போவதில்லை.

அல்குவைதா தலைவர் ஓசாமா பின்லேடன் பிடிபட்டால் அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்போவதாக பாகிஸ்தான்



ஜனாதிபதி அஷிப் அல் சர்தாரி தற்போது அறிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் உள்ள அமெரிக்க வர்த்தக மையம் அல்குவைதாபோராளிகளினால் தகர்க்கப்பட்ட பின்னர், அதன் சூத்திரதாரியான பின்லேடனைக் கைதுசெய்வதற்காக புஷ் நிர்வாகம் ஆப்கானிஸ்தானுக்குள் தனது படைகளை அனுப்பி அங்கு அப்பொழுது அதிகாரத்தில் இருந்த தலிபான் ஆட்சியைக் கவிழ்த்தது. ஆனால், ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் ஆப்கானிஸ்தானில் இன்னும் முடிவடையவில்லை. அமெரிக்கப் படைகள் தற்பொழுது பாகிஸ்தான் பிராந்தியத்துக்குள்ளும் ஊடுருவி அல்குவைதா மற்றும் தலிபான் போராளிகளின் இருப்பிடங்கள் என்று சந்தேகிக்கும் மலைப்பகுதியில் குண்டுத் தாக்குதல்களை நடத்துகின்றன. ஆளில்லா விமானங்களின் உதவியுடன் பாகிஸ்தானுக்குள் ஏவுகணைத் தாக்குதல்களையும் அமெரிக்கா நடத்தி வருகிறது.

ஆனால், பின்லேடன் இன்னும் உயிருடன் தான் இருக்கிறார். பிடிபடவில்லை. பின்லேடன் இருப்பதால் இன்று ஆப்கானிஸ்தானுக்குள் மட்டும் அல்ல பாகிஸ் தானுக்குள்ளும் குண்டுகள் வெடிக்கின்றன. இந்தியாவின் வடமாநிலங்கள் கூட தினமும்

### பின்லேடன், தலிபான்கள் விடுதலைப்புலிகள் — சிம்ம சொப்பனங்கள்

குண்டுகளால் அதிர்ந்துகொண்டிருக்கின்றன.

தலிபான் போராளிகளின் குண்டுத்தாக்குதல்கள் காரணமாக பாகிஸ்தானில் ஒரு நிலையான அரசை ஸ்தாபிப்பதில் புதிய ஜனாதிபதி அஷிப் அல் சர்தாரி சவால்களை எதிர்நோக்கி வருகிறார். அமெரிக்காவினால் கைவிடப்பட்ட நிலையில்; சர்வதேச அரங்கில் ஒரு தோற்றுப்போன தேசமாக பாகிஸ்தான் மாறிக்கொண்டிருக்கிறது.

அமெரிக்க - இந்திய அணுசக்தி ஒப்பந்தம் கைச்சாத்தான நிலையில், பாகிஸ்தான் அமெரிக்காவினால் கைவிடப்படும் நிலைமை உருவாகி வருகிறது. இந்த நிலையில் அமெரிக்காவை வளைத்துப் பிடிக்கும் நோக்கத்துடன் வெளியிடப்பட்டது தான் பின்லேடன் பற்றிய ஜனாதிபதி சர்தாரியின் பிந்திய அறிவிப்பு.

இந்தியாவுடனான அமெரிக்காவின் இராணுவம் சேரா நோக்கங்களுக்கான அணு உடன்படிக்கை அந்நாட்டு செனட்சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதே போன்ற ஓர் உடன்படிக்கையை பாகிஸ்தானுடனும் அமெரிக்க செய்துகொள்ள இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது என பாகிஸ்தானியப் பிரதமர் யூசுஃப் ரசா கிலானி கூறியுள்ளது நோக்கற்பாலது.

தெற்காசியாவில் இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன. இரண்டும் அண்டை நாடுகள்.எனவே இந்த விடயத்தில் அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக செயற்பட்டு விடக்கூடாது என்றும் அவர் கேட்டுள்ளார்.

பாகிஸ்தானும் இந்தியாவும் இதுவரை அணு பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. எனினும் எரிபொருள், தொழில்நுட்பம், உலை சம்பந்தப்பட்ட தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை இந்தியாவுக்கு வழங்கும் அமெரிக்க நிறுவனங்கள் மீதான நீண்டகால தடைகளை புதிய உடன்படிக்கை நீக்கிவிடும் என்று அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அணு இரகசியங்கள் பாகிஸ்தானிலிருந்து, குறிப்பிட்ட நாடுகளுக்கு விற்பனையாகியுள்ளன. இது விடயத்தில் அது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு நாடாகச் செயற்படத் தவறியுள்ளது என்று அமெரிக்கா குறிப்பிட்டிருப்பதும் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

தலிபான்களுக்கு எதிரான பாகிஸ்தானின் போராட்டத்தில் அமெரிக்காவின் உதவி இன்றி பாகிஸ்தானால் உயிர்வாழ முடியாது. இதே போன்ற ஒரு நிலைமையே இலங்கையிலும் இருந்து வருகிறது.



இந்தியாவின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டு, இலங்கை அரசினால் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெல்லமுடியாது.

'புலிகளுக்கு எதிரான போரில் அதன் தலைவர் பிரபாகரன் கைதானால் அவரை இந்தியாவிடம் ஒப்படைக்கப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதும் இந்தியாவை தாஜா பண்ணத்தான்.

அமெரிக்காவைப் பகைத்துக்கொண்டு பாகிஸ்தானால் எப்படி உயிர்வாழ முடியாதோ அதேபோன்று இந்தியாவைப் பகைத்துக் கொண்டு புலிகளுக்கு எதிரான போரில் ஒரு போதும் இலங்கையினால் வெல்ல முடியாது. 1987இல் இலங்கையில் இந்தியா நடத்தியது போன்ற ஒரு தலையீட்டை நினைத்தால் இன்றும் இந்தியாவினால் நடத்தமுடியும்.

**சஞ்சரன்**

பின்லேடன் கைதானால் அவரை அமெரிக்காவிடம் ஒப்படைப்போம் என்று பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு ஆசை வார்த்தை காட்டுவது போன்றதே, பிரபாகரன் கைதானால் அவரை இந்தியாவிடம் கையளிப்போம் என்பதும்.

பாகிஸ்தான் அரசும் இலங்கை அரசும் கற் பனை உலகில் வாழுகின்றன என்பதே யதார்த்தம். ✱

# விமானத் தாக்குதல்களால் அழிவது புலிகளின் நிறுவனங்களும் கட்டடங்களும் மட்டுமா....?

வன்னிக் களமுனையில் இப்போது அரசபடைகள் ஈட்டிவரும் குறிப்பிடத் தக்க வெற்றிகளுக்கு மூலகாரணமாக இருப்பது அவர்களின் விமானப்படை தான்.

வன்னியில் அரச விமானப்படை கண்மூடித்தனமாக நடத்தும் குண்டுவீசசுக்களால் பெரும்பாலும் கொல்லப்படுவதும் பாதிக்கப்படுவதும் அப்பாவிப் பொதுமக்களும் அவாகளது சொத்துக்களும்தான் என்பது சொல்லிப் புரியவைக்க வேண்டிய விடயம் அல்ல.

கடந்த சுமார் எட்டு மாதங்களில் அரச வான் தாக்குதல்களால் காவுகொள்ளப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை இருநூற்றைம்பதுக்கும் அதிகம். அழிக்கப்பட்ட வீடுகளின் தொகையும் கணக்கற்றது.

எந்த இடத்தில் குண்டு விழுந்தாலும் அதையெல்லாம் புலிகளின் 'முக்கிய தளங்கள்' என்று பிரகடனம் செய்து திருப்திப்பட்டுக் கொள்வது அரச விமானப்படையின் வழக்கமாகிவிட்டது.

இருந்தாலும், இத்தகைய தாக்குதல்களின்போது சிலவேளைகளில் உண்மையாகவே புலிகளின் இலக்குகள் விமானப் படையின் குண்டுகளில் சிக்கித்தானிருக்கின்றன என்பதும் மறுப்பதற்கில்லை.

## 8 மாதங்களில் 250 இற்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சாகடித்தன; அழிக்கப்பட்ட வீடுகள், கோயில்களோ அனேகம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய அரசியல்துறை விற்பன்னராகக் கருதப்பட்ட சு.ப.தமிழ்ச்செல்வனை அந்த அமைப்பு இழந்ததும் அரச விமானப்படையினால்தான்.

இருந்தாலும், இரண்டு வருடங்களுக்கு மேலாக ஓய்வு ஒழிச்சலின்றி வன்னிமீது குண்டுமழைபொழியும் கிபிர் போன்ற விமானங்கள் மீது புலிகள் ஒருதடவைகூட தாக்குதல் நடத்தவில்லை.

கடந்தவருடம் தமிழ்ச்செல்வன் விமானத் ததாக்குதலில் கொல்லப்பட்டு ஒருவருடம் நெருங்கிக் கொண்டிருக்கின்ற இந்தவேளையில், அவரது பிரதான அரசியல் தலைமையகமாக விளங்கிய அரசியல்துறை நடுவப் பணியகம், புலிகளின் சமாதானச் செயலகம், தமிழீழ காவல்துறை நடுவப் பணியகம் என்பன அடுத்தடுத்து விமானப் படையின் தாக்குதலில் சிக்கியிருக்கின்றன.

நோர்வே அனுசரணையுடன் சமாதானப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் தமிழ்ச்செல்வன் போன்ற முக்கியஸ்தர்களுக்கும் நோர்வே உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கும் இடையே முக்கிய சந்திப்புகள் இந்த அரசியல் தலைமையகத்திலும் சமாதான செயலகத்திலும்தான் நடைபெற்றன.

2006 ஒகஸ்ட் 11ஆம் திகதி இருதரப்புகளுக்கும் இடையில் வடக்கில் யுத்தம் தொடங்கியதிலிருந்து வன்னியில் புலிகளின் பிரதான அலுவலகம் ஒன்று வான் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றமை இதுவே முதல்தடவை என்று கூறலாம்.

கடந்த சுமார் இரண்டு வருடங்களாக ஒருநாள் கூடத் தவறாமல் வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் விமானபபடையினர் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றபோதிலும் அனைவருக்கும் தெரியக் கூடியதாக - தெளிவாக இனங்காணத்தக்க வகையில் கிளிநொச்சி நகரின் மத்தியில் அமைந்திருந்த புலிகளின் - இந்த முக்கியத்துவம் மிக்க நிர்வாகச் செயலகங் கள் மீதோ, வானிலிருந்து தெட்டத் தெளிவாக அவதானிக்கப்படக் கூடிய புலிகளின் விமான ஓடுபாதைகள் மீதோ அரச விமானங்கள் இதுவரை தாக்குதல் நடத்தியிருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட இடங்கள் மீது பறந்தது கூடக் கிடையாது.

அது ஏன்?

கண்டபடி பொதுமக்களின் தலைகள் மீது குண்டுகளைக் கொட்டித் தீர்க்கும் விமானங்கள் புலிகளின் முக்கிய மையங்களை இலக்குவைக்க இதுநாள் வரை பின்னடித்து வந்ததன் சூக்குமம்தான் என்ன?

களநிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்த ஆய்வாளர்களுக்கும் பொது மக்களுக்கும் புரியாத புதிராக இருந்தது இதுதான்!

கிளிநொச்சி நகரப் பகுதியைச் சுற்றியே ஐ.நா செயலகங்கள் உட்பட சர்வதேச தொண்டு நிறுவனங்களின் காரியாலயங்கள் இருந்ததால் அவற்றின் மீதும் குண்டுகள் வீழ்ந்து விடுமோ என்ற பயத்தில் தான் அரசு அந்தப் பகுதியை விட்டு வைத் தது என்றும், இப்போது அந்த தொண்டு அமைப்புகள் கிளிநொச்சியை விட்டு வெளியேறியதும்- வெளியேற்றப்பட்டதும் - விமானங்கள் புலிகளின் சமாதானச் செயலகம் அரசியல் தலைமையகம், காவல்துறை தலைமையகம் என்பவற்றின் மீது இலக்குப் பிசகாமல் தாக்குதல் நடத்தியிருக்கின்றன என்றும் ஒருசாரார் விவாதிக்கின்றனர்.



அது உண்மையாக இருந்தால், விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதைகள் மீது இதுவரை ஒருதடவை கூட தாக்குதல் நடத்தப்படாததன் மர்மம் என்ன? அந்த ஓடுபாதைகளுக்கு அருகில் மனிதாபிமான அமைப்புகளின் அலுவலகங்கள் ஏதேனும் இருந்திருக்க வாய்ப்பே இல்லையே! அரச படைகளுக்கு இப்போது சிம்ம சொப்பனமாக திகழ்

**அதிசயன்**

வதே புலிகளின் விமானங்கள் தானே. எனவே, புலிகளின் ஓடுபாதைகளைக் குண்டு வீசிச் சிதைப்பதன் மூலம், அவர்களின் விமான திறனை முடக்கிவிடலாம் அல்லவா! அப்படி இருந்தும் எதற்காக புலிகளின் விமான ஓடுபாதைகள் மீது அரச விமானங்கள் கைவைக்கவில்லை? இந்தக் குழப்பமான கேள்விக்கு தற்போதைய கிளிநொச்சி அரசியல் தலைமையகம், காவல்துறை நடுவப் பணியகம் என்பவற்றின் மீதான தாக்குதலின்போது பதில் கிடைத்திருக்கின்றது. அது என்னவென்றால் புலிகளின் விமான எதிர்ப்புத்திறன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் படைக் கட்டமைப்பில் 'ராதா வான்காப்பு அணி' என்றொரு படைப்பிரிவும் இருக்கிறது. ஆனால், இதுவரை காலமும் வன்னியில் பரவலாக குண்டுவீசுகளை நடத்திக்கொண்டிருக்கும் அரச குண்டுவீச்சு விமானங்கள் மீது புலிகளின் விமான எதிர்ப்பு அணி ஒருதடவை கூடத் தாக்குதல் நடத்தவில்லை.

அதனால், புலிகளிடம் அரச விமானங்களை எதிர்த்து நிற்கக்கூடிய வலு - தாக்கு திறன் - இல்லை என்று அர்த்தப் படுத்த முடியாது.

ஏனென்றால், புலிகள் ராதா வான் காப்புப் பிரிவு என்ற பெயரில் படை யணி ஒன்றை உருவாக்கி 15வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அந்த அணி இதுவரைகால போர்களில் பல விமானங்களை சுட்டுவீழ்த்தியும் இருக்கின்றது.

தமது ஒவ்வொரு படையணிகளையும் நவீன பேரரியலுக்கு ஏற்றவகையில் மாற்றியமைக்கும் புலிகள், விமான எதிர்ப்பு அணியை மட்டும் அவ்வாறு நவீனப்படுத்தாமல் விட்டிருப்பார்கள் என்று கருதமுடியாது.

அதேவேளை, 'கிபிர்' போன்ற நவீன யுத்த விமானங்களை - ஒலியை விட வேகமாகச் செல்லக்கூடிய வான்கலங்களை - அவற்றுக்குப் பொருத்தமான அதிநவீன ஏவுகணைகள் மூலமாகவே தாக்கமுடியும். அத்தகைய ஏவுகணைகளின் பெறுமதி சாதாரணமானதாக இருக்காது. எனவே, அவற்றை ஆயிரக்கணக்கில் அல்லது பலநூற்றுக் கணக்கில் வாங்கி, வன்னியின் மூலை முடுக்கெங்கும் பொருத்தி வைப்பதென்பது புலிகளைப் பொறுத்த வரையில் சாத்தியமற்ற ஒன்றுதான். ஆனால், சிறு எண்ணிக்கையிலாவது அவற்றைத் தருவித்து தமது விமானத் தளங்கள், தலைவர் பிரபாகரனின் இருப்பிடங்கள், முக்கிய ஆயுதமையங்கள், பணிமனைகள் என்பவற்றின் பாதுகாப்புக்காக அங்கெல்லாம் அவற்றைப் பொருத்தி வைத்திருக்கக்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் துயர்களைச் சுமந்து கொண்டு அவர்களுடன் பயணிக்கின்றது கரித்தாஸ் - கியூடெக்

வன்னியில் மோதலில் சிக்கி இடம்பெயர்ந்து அல்லலுற்று அவதிப்படும் மக்களுக்கு ஆதரவளித்து - உதவி வழங்கி அவர்களின் துன்ப துயரங்களில் இணைந்து பயணிக்கின்றது கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம். வன்னியில் அதன் மனிதாபிமானப் பணிகள் அனைத்தும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

கியூடெக் [மனித முன்னேற்ற நடுநிலையம்] நிறுவனத்தின் பணிகள் தொடர்பாக உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அதன் இயக்குநர் அருட்திரு.சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.



கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் மனிதாபிமானப் பணிகள் யாழ்.குடாநாட்டில் தீவகம் உட்பட அனைத்து இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. வறுமையின் பிடியில் சிக்கியுள்ளோர், வலுவிழந்தோர், ஆதரவற்றோர், விதவைகள் எனப் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களுக்கும் கியூடெக் நிறுவனம் தனது மனிதாபிமானச் செயற்றிட்டங்கள் ஊடாக உதவிகளை வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மிக நீண்டகாலமாகக் கியூடெக் நிறுவனத்தின் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணியில் கியூடெக் நிறுவனம் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியிருக்கின்றது.

கியூடெக்கின் பணிகள் தொடர்பாக இயக்குநர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் வழங்கிய செவ்வியில் தெரிவித்த விவரங்கள் வருமாறு:

### உலகளாவிய ரீதியிலான பாரிய தொண்டு நிறுவனம் கரித்தாஸ்

யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் சமூக சேவை நிறுவனம் தான் கரித்தாஸ் - கியூடெக். உலகில் 193 நாடுகளில் உள்ள கரித்தாஸ் நிறுவனங்கள் ஒன்றிணைந்து 'கரித்தாஸ் இன்ரநஷனலிஸ்' (Caritas Internationalis) என்ற தலைமையகம் ஊடாக எமக்கு உதவுகின்றன.

### மேற்கொண்டு முடித்த - மேற்கொண்டு வரும் சமூக மட்டப் உதவிப் பணிகள்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கியூடெக் நிறுவனம் பல்வேறு உதவித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதில் மிக முக்கியமானது நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பது. இதற்கமைய புனித நகர், கற்கோவளம் பகுதிகளில் அமைக்கப்பட்ட 70 நிரந்தர வீடுகளையும் 38 மலசல கூடங்களையும் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறுகின்றது. யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்த வைபத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இந்த வைபவத்தில் விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்கள்.

தற்போது கையளிக் கப்படும் வீடுகளில் ஒவ்வொரு வீடும் 8 லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதி கொண்டவை. வீடுகளுக்கான மின் இணைப்பு, வர்ணம் பூசுதல் ஆகிய வேலைகளையும் கியூடெக் நிறுவனமே செய்து கொடுத்துள்ளது. அத்துடன் அமைக்கப்பட்டுள்ள 38 மலசலகூடங்கள் ஒவ்வொன்றும் 70 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்டவை.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கியூடெக் நிறுவனம் இதுவரை சுமார் 600 வீடுகளை அமைத்து வழங்கியுள்ளது. இவற்றில் முல்லைத்தீவில் 214 வீடுகள் ஏற்கனவே பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டு விட்டன. வெற்றிலைக் கேணியில் 117 வீடுகள் கடந்த 2006ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டன. வடமராட்சியில் 169 வீடுகள் இவ்வாண்டு ஜனவரியில் கையளிக்கப்பட்டன. தற்போது 70 வீடுகள் கையளிக்கப்படுகின்றன. இதனைவிட தற்போது அமைக்கப்பட்டு வரும் மேலும் 130 வீடுகள் அடுத்த ஆண்டு ஜனவரியில் கையளிக்கப் படவுள்ளன. யாழ்.மாவட்டத்தில் சுனாமி பாதித்த பருத்தித்துறை, மாதகல், சுழிபுரம், சேந்தாங்குளம் ஆகிய பகுதிகளில் கியூடெக் நிறுவனம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

2005ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை ஒரு பில்லியன் 286 மில்லியன் ரூபாவை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான திட்டங்களுக்கும் வாழ்வாதாரத் திட்டங்களுக்கும் கியூடெக் நிறுவனம் செலவிட்டுள்ளது.

தற்போது குடாநாட்டில் கட்டடப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் நாம் எதிர்பார்த்த அளவு திட்டங்களை செயற்படுத்தமுடியவில்லை. 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த விலைகளுடன் ஒப்பிடும்போது இப்போது பொருள்களின் விலைகள் இரட்டிப்பாகியுள்ளன. இதனால் எமது பணிகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.



இலங்கையின் தென்பகுதியில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகின்றன. எனினும் யாழ்ப்பாணத்தில் அதன் பணிகள் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை தொடரவுள்ளது.

கியூடெக் நிறுவனத்தின் பணிகளைப் பொறுத்தமட்டில் மீனவர்களுக்கான படகு வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைகள் வழங்குதல், விவசாயிகளுக்கான உள்ளீடுகளை வழங்குதல், சேதனப்பசளை உருவாக்கும் செயற்றிட்டம் மற்றும் பெண்களுக்கான சுயதொழில் முயற்சி என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

## உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் இயக்குநர் சி.ஜி.ஜெயக்குமார் அடிகள்

இவற்றைவிட வாழ்வாதாரப் பயிற்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றில் சாரத்தியப் பயிற்சி, மின் இணைப்புப் பயிற்சி, கணனிக் கற்கைநெறி என்பன அடங்கும்.

இவற்றுடன் வறுமையான மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு உதவுதல், இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்களுக்கு மலசல கூடங்களை அமைத்துக்கொடுத்தல், பாலர் பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், இடம்பெயர்ந்த மாணவர்களுக்குப் பாதணிகளை வழங்குதல் போன்ற உதவி நடவடிக்கைகளையும் கியூடெக் மேற்கொண்டு வருகின்றது.



கியூடெக்கின் உதவிப் பணிகளில் விதவைகளுக்கான உதவியும் மிக முக்கியமானது. விதவைகளுக்கு கோழி, ஆடு,மாடு ஆகியவற்றை வழங்கி அவற்றை வளர்த்துப் பயன்பெறும் முறைகள் பற்றியும் பயிற்சியளிக்கப்படுகின்றது. இந்த சுயதொழில் உதவி வழங்கலை எமது பணியாளர்கள் தொடர்ந்து மேற்பார்வை செய்து வருகின்றனர். தற்போது 10 மில்லியன் ரூபா செலவில் 300 விதவைகளுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்படுகின்றது. 'சீடா' நிறுவனம் இதற்கு உதவி வழங்கியுள்ளது. அத்துடன் 240 விதவைகளின் பிள்ளைகளுக்கு மாதாந்தம் 2ஆயிரம் ரூபா கல்வி உதவியாக வழங்கப்பட்டு வருகின்றது.

### உதவிபெறத் தகுதியுடையோர் உரிய வகையில் இனம் காணப்படுகின்றனர்

மிகவும் வறுமையான குடும்பங்கள், இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ளவர்கள், கணவனை இழந்தவர்கள், தொழில்வாய்ப்பினை இழந்தவர்கள், ஊனமுற்றோர் ஆகிய தரப்புகளில் இருந்தே உதவிகளைப் பெறும் பயனாளிகளைத் தெரிவுசெய்து வருகின்றோம்.

வன்னியில் தற்போது மோதலில் சிக்கியுள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளைக் கியூடெக் நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அனைத்து அரசசார்பற்ற, உதவி வழங்கும் நிறுவனங்களும் வெளியேறி விட்ட நிலையில் எமது பணியாளர்கள் அங்கு தொடர்ந்தும் தங்கியிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றார்கள். அவர்களுக்குத் தேவையான தற்காலிக கொட்டகைகள் அமைத்தல், மலசலகூடங்களை அமைத்தல், உலர் உணவு வழங்குதல், காசுக்காக வேலை செய்தல், நடமாடும் மருத்துவ சேவை போன்ற உதவிகளை நாம் வன்னியில் தற்போது முன்னெடுக்கின்றோம். வன்னி மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களில் பங்கு கொண்டவாறு கியூடெக் நிறுவனமும் அவர்களுடன் தொடர்ந்து பயணிக்கின்றது. பல் வேறு நிறுவனங்கள் வன்னிக்கு வருவதற்கு முன்பே கியூடெக் நிறுவனம் அங்கு தனது பணிகளை ஆரம்பித்திருந்தது. எனவே அது வன்னி மக்களுக்காகத் தொடர்ந்தும் சேவையாற்றும் - என்றார் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகள்.

# 17 வயதில் நிர்வாகசேவையில் இணைந்து பல்வேறு பதவிகளை அலங்கரித்து தமிழ்ப்பகுதிக்குப்பணியாற்றியபேர்சிவல்அக்லண்டைக்

**08.10.1867**

**அரசாங்க அதிபர் டைக் காலமானார்**

திரு.பேர்சிவல் அக்லண்ட்டைக் சிறிது காலம் கடற்படையில் பணியாற்றிய பின் தனது பதினேழாவது வயதில் 1822 ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி நிர்வாகசேவையில் இணைந்து கொண்டார்.

1824 ஆம் ஆண்டு யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்று பின் சிறிது காலம் பிஸ்காலாகவும் பொலிஸ் நீதிவானாகவும்கடமையாற்றிய பின் திருகோணமலை மாவட்ட நீதிவானாகவும் அரசாங்க அதிபராகவும் பதவி உயர்வு பெற்றுச் சென்றார். 1829 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபராக (அந்தக் காலத்தில் அரசாங்க அதிபரை கலெக்டர் என்றே மக்கள் அழைத்தனர். இந்தியாவைப் போல்) பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் திரும்பினார்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இவரது பதவிக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஆபத்துக்குதவும் வைத்தியசாலை (Friend in need society hospital) என்றே அப்போது அழைக்கப்பட்டது. டைக் தனது சம்பளத்தில் அரைவாசியை வைத்தியசாலைச் செலவுகளுக்குச் செலவிட்டார். விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றவர்களுக்கு உணவும், உடையும் இலவசமாக வழங்கப்பட்டன.

## அவர் காலமான போது யாழ்ப்பாணத்தில் நான்குநாள் துக்கம்

சுன்னாகம், சங்கானை, அச்சுவேலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற இடங்களில் சந்தைகளைக் கட்டுவித்தவரும் இவரே. இவர் தனது பதவிக்காலத்தில் பலவிதமான பழமரங்களை கச்சேரி வளவினுள் நாட்டுவித்து பராமரித்து வந்தார். கச்சேரி வளவினுள் நின்ற மரங்களைப் பார்வையிட விரும்பிய பொதுமக்கள் பழங்களைப்பறித்துச் சாப்பிடவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

வெட்டிக் கொள்ளையர் என அழைக்கப்பட்ட பகலில் காடுகளில் கரந்துறைந்து விட்டு இரவு வேளைகளில் கிராமங்களுக்குள் தீப்பந்தத்துடன் புகுந்து வீட்டுக்காரரை அழைத்து கொள்ளையடித்து வந்த தீவெட்டிக் கொள்ளையர்களின் கொட்டத்தை அடக்கியவரும் இவரே. முற்றவெளிப் பகுதியில் பல பூவரசுகளையும் இவர் உண்டாக்கினார்.

நாற்பத்தைந்து ஆண்டுகள் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கிய பேர்சிவல் அக்லண்ட் டைக் 08.10.1867 ஆம் ஆண்டு காலமானார். அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் நான்கு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

- தாரணி வதி -

# நாமும் சுயநலமற்று சோலைவனமாவோம்

இஸ்ரேல் நாட்டில் நிலத்தை - திராட்சைத் தோட்டத்தைக் குத்தகைக்கு விடுவது வழக்கம். அவ்வழக்கப்படி திராட்சைத் தோட்டத்திற்கு சொந்தக்காரன் ஒருவன் தனது தோட்டத்தைக் குத்தகைக்கு விட்டு குறித்த காலம் பிறந்தபோது குத்தகையைப் பெற்றுவர தனது ஊழியர்களை அனுப்பினான். தோட்டத்தைக் குத்தகைக்குப் பெற்றவர்களோ, குத்தகையை அளக்க மறுத்து அனுப்பப்பட்ட ஊழியர்களில் சிலரை அடித்தனர், சிலரைக் கொன்றனர்.




இறுதியாகத் திராட்சைத் தோட்டத்து உரிமையாளன் மற்றவர்களை மதிக்காவிட்டாலும் 'என் மகனை மதிப்பர்' எனச் சொல்லி தனது மகனை அனுப்பி வைத்தான். அவனையும் அவர்கள் தோட்டத்துக்கு வெளியே தள்ளிக் கொன்றனர். இதையறிந்து வீட்டுத்தலைவன் குத்தகையைக் கொடுக்க மறுத்து அனுப்பப்பட்டவர்களை அவமதித்து அழித்த அனைவரையும் அடியோடு அழித்தான்.

இந்த உவமையில் வந்த குடியானவர்கள் ஏன் அப்படி நடந்து கொண்டார்கள்? நிச்சயமாக அவர்கள் வீட்டுத் தலைவனிடமிருந்து நிலத்தைப் பெற்றபோது, குறிக்கப்பட்ட குத்தகையை கொடுத்து விடுவதாக கூறியிருப்பார்கள். அப்படி அவர்கள் கூறாமலிருந்திருந்தால் அவர்களிடம் அநத வீட்டுத்தலைவன் தனது தோட்டத்தை ஒப்படைத்திருக்க மாட்டான். பின் ஏன் அவர்கள் குத்தகையைக் கொடுக்க மறுத்தார்கள்?

நிலத்தின் விளைச்சல், பலன் அவர்கள் கண்களை கட்டி விட்டது! சுயநலம் அவர்கள் இதயத்தை இறுகப் பற்றிக் கொண்டது! அச்சுயநலம் அனுப்பப்பட்ட ஊழியர்களை அடித்தது, பின்னர் அழித்தது.

நான் வாழ வேண்டும், நான் மட்டுமே வாழ வேண்டும் என்ற நினைவு இப்படிப்பட்ட நினைவு தான் உவமையில் வந்த குடியானவர்களைக் குத்தகையைக் கொடுக்க விடாமல் தடுத்தது. இந்த உவமையில் வந்த வீட்டுத் தலைவன் தான் இறைவன், அனுப்பப்பட்ட ஊழியர்கள் தான் இறைவாக்கினர், வீட்டுத்தலைவனின் மகன் தான் இயேசுகிறிஸ்து: தோட்டம் தான் நமது வாழ்க்கை: அழிக்கப்பட்ட குடியானவர்கள் தான் கடவுள் எதிர்பார்க்கும் கனிகளைக் கொடுக்க மறுக்கும் மனிதர்கள்.

இந்த உவமை உணர்த்தும் உண்மை என்ன, இறைவன் எதிர்பார்க்கும் பலனைத்தர மறுக்கும் அனைவரும் இறை ஆசீரின்றி அழிந்து போவார்கள்.

நாமெல்லாம் வாழப்பிறந்தவர்கள் சாகப்பிறந்தவர்கள் அல்ல. ஆகவே நாம் என்ன செய்ய வேண்டும். இறைவனுக்கு உரியதை இறைவனுக்குக் கொடுத்து விட வேண்டும். ***

- நசரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத் தாக்குதல்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடும் என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். மேற்குறிப்பிட்ட இடங் களில் வான்காப்பு அணியினர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் அரச தரப்புக்கும் கட்டாயம் இருந்திருக்கும்.

அதனால்தான் இதுவரை புலிகளின் கேந்திர மையங்களை விட்டு விலகி, வேறு இடங்களில் அரசின் விமானப்படை தாக்கியது எனக் கொள்ளலாம்.

இந்தச் சந்தேகத்தை சோதித்துப் பார்த்து விட வேண்டும் என்பதற்காகவே இப்போது புலிகளின் அரசியல் தலைமையகம், பொலிஸ் தலைமையகம் என்பவற்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் பாதுகாப்புத் துறை உத்திகளில் அனுபவம் உள்ளவர்கள் கருதுகிறார்கள்.

அரசு எதிர்பார்த்ததைப் போலவே அந்தக் கேந்திர மையங்களில் புலிகளின் விமான எதிர்ப்பு அணி சற்றுத் தலையைத் தூக்கிக் காட்டியிருக்கிறது.

2ஆம் திகதியும் 3ஆம் திகதியும் புலி களின் மேற்படி தலைமையகங்கள் மீது தாக்குதல் நடத்தச் சென்ற குண்டு வீச்சு விமானங்களை நோக்கி புலிகளின் விமான எதிர்ப்பு அணி தாக்குதல் நடத்தியிருக்கிறது.

இதன்போது அரசவிமானங்கள் சேதம் இன்றி தப்பிவந்து விட்டாலும், பாதுகாப்புத் தரப்பு எதிர்பார்த்ததைப் போல புலிகள் ஆங்காங்கே, தமது கேந்திரநிலைகளை அண்டியுள்ள பகுதிகளில் விமான எதிர்ப்பு ஆயுதங்களை வைத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்பது நிரூபணமாகி இருக்கின்றது.

எனவே, இனி மீண்டும் புலிகளின் மையங்களைத் தவிர்த்து அரச விமானங்கள் பழையபடி பொது மக்களின் குடியிருப்புகள் மீது தமது கைவரிசையைக் காட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

அப்படியில்லாமல், இனியும் வன்னியில் புலிகளின் கேந்திர மையங்களைதேடிப் போய் தொடர்ந்து தாக்குதல் நடத்த விமானங்கள் முயன்றால், களநிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படவும் கூடும். யார் அறிவார்....?

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



விண்ணில் - மண்ணில்
02.04.1927 04.09.2008

அராலி மாவத்தை
விளையாட்டுக் கழகத்தின்
அனுசரணையாளரும்,
ஸ்ரீ நதியா நகை மாடம்
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
உரிமையாளருமான
நடராசா சத்தியரூபன்
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் தம்பையா நடராசா**
அவகளின் 31 ஆம் நாள்
நினைவு நாளான இன்று அவரின் ஆத்மா சாந்திபெற
அவரது குடும்பத்தினருடன் நாமும் பிரார்த்திக்கின்றோம்.

**அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினர்.**
மாவத்தை வீதி, ஸ்ரீ நதியா இல்லம், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

## கண்ணீர் அஞ்சலி

எமது தேவஸ்தான நிர்வாக போஷகர்
திரு.சு.இரத்தினசிங்கம்
அவர்களின் பாசமிகு மகன்
**அமரர் இரத்தினசிங்கம் கிரிதரன்**
அவர்கள் லண்டனில்
அகாலமரணமானதையிட்டு துயருறும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.



பாண்டியன் தாழ்வு அருள்மிகு
ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர்
தேவஸ்தானம்.

**ஆலய பரிபாலன சபையினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் கனகசபை நவரத்தினம்**

4.10.2008 உதயனில் 4ஆம் பக்கத்தில் பிரசுரமான அமரர் கனகசபை நவரத்தினத்தின் நினைவஞ்சலி விளம்பரத்தில் இடம் பெற்றுள்ள கோண்டாவில் என்னும் முகவரியை நீர் வேலி மேற்கு, கரந்தன் எனத் திருத்தி வாசிக்கவும்

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மாதன்**
**கதிர்காமநாதன்**

தோற்றம்
15.10.1952

மறைவு
05.10.1989

தினம் தினம் உங்கள் நினைவு எம்மனதினில்
பத்தொன்பது ஆண்டுகள் கடந்திட்டபோதும்
அப்பா நீங்கள் எம்மைவிட்டு கலைந்து
சென்ற நாள்களைக் கண்ணீருடன் நினைவு
கூருகின்றோம்.

மாவிலங்காடு,
கீரிமலை.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அருட்சகோதரி லூசில்லா**
**கிறிஸ்தோப்பிள்ளை**

தோற்றம்
22.12.1919

மறைவு
05.09.2008

"உயிர்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (அரு.11:17)
எங்கள் குடும்பத்தின் மூத்த சகோதரியே!
அருட்சகோதரி ஆசி அனைவருக்கும் இறைவனைக் காட்டினீர்!
கல்விஞான ஒளியுடன் ஆங்கில மொழியில் மாணவர்களை
உருவாக்கிய நல் உதாரண ஆசானாய் மிளிர்ந்தீரே!
ஆழமான இறை அனுபவத்துடன் வாழ்ந்து காட்டினீரே!
உம் பிரிவு எம்மை சோகத்தில் ஆழ்த்தினாலும்,
இன்றும் உம் நினைவுடன் உமக்காக இறைவைப் பிரார்த்திக்கின்றோம்.

*அருட்சகோதரியின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலிகள் நாளை (06.10.2008) திங்கட்கிழமை, காலை 6 மணிக்கு, அருள் ஆச்சிரமத்திலும், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும், யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும். யாழ்ப்பாணம்.*

**குடும்பத்தினர்.**

## விஞ்ஞானச் சங்கத்தின் கருத்துரை நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் ஏற்பாட்டில் ''ஆரம்பச் சிறுவர் பராயப் பாதுகாப்பும் அபிவிருத்தியும்'' என்னும் தலைப்பில் கருத்துரை ஒன்று நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் விரிவுரை மண்டபத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கருத்துரையில் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி லக்ஷ்மி கமலரூபன் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்.

(50)


## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ்.இந்து கௌரவ குடும்பம் 32, 30 வயது *UK citizen*, 28 வயது ஆஸ்திரேலியா *citizen*, 32 வயது கனடா *PR*, 29 வயது ஜேர்மனி *PR*, 38 வயது பிரான்ஸ் *PR*, உள்ள மணமகன்மார் உள்ளனர். மணமகள் ஆங்கில அறிவுடையவராகவும் கொம்பியூட்டர் அறிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

லண்டன் தொடர்பு:
00447961139759, 00447535384166,
00447502340714
(79000) *Fax No:* 00442086810707

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து மத கௌரவ குடும்பம், வயது 50, இளமைத் தோற்றமுடைய யாழ்.நகருக் கண்மையில் சொந்தமாக வீடும் சிறு நிறுவனமும் உள்ள விவாகரத்துப் பெற்றவருக்கு (பிள்ளைகள் இல்லை) 40 வயதுக்கு கீழ்ப்பட்ட தாரமிழந்த அல்லது விவாகரத்துப் பெற்ற கௌரவ குடும்பப் பெண் தேவை. முதல் கடிதத்திலேயே குறிப்பு உட்பட சகல விவரங்களையும், தொலைபேசி இருப்பின் இலக்கத்தையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல - 3148
*மே/பா உதயன், யாழ்ப்பாணம்.*

## கார் விற்பனைக்கு

*Mitsubishi carisma* கார் விற்பனைக்குண்டு. இக்கார் உற்பத்தி 2001 ஆம் வருடம் *U.K.* இல் இருந்து தருவிக்கப் பட்டு ஒருவரின் பாவனையில் உள்ளது. 1லீற்றர் பெற்றோல் 15 *Km* வரை ஓடக்கூடியது.

தொடர்பு: 0777917813
ஞாயிறு தவிர 021 222 2828

## காணி விற்பனைக்கு உண்டு

ஈவினை, புன்னாலைக்கட்டுவான் வடக்கில் அமைந்துள்ள பட்டையான்புலம் என்னும் 30 பரப்புகளை கொண்ட பதப்படுத்திய தோட்டக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு : வல்லிபுரம் விஷ்ணுஹரன்
தொ.பே. 077 521 5424, 011 2687469

## அருள்முருகன் திருமணப் பணியகம்

மணமக்களது சகல விவரங்களையும் வழங்கலாம். உடனிருந்து தெரிவுகளையும் மேற்கொள்ளலாம். நீங்கள் எதிர்பார்க்கின்ற மணமகன்/ மணமகள் எத்தகையவராயினும் இங்கிருக்கின்ற அல்லது தொடர்ந்தும் கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் இருந்து உள்ளூரில் இருந்தும் வருகின்ற மணமக்களில் இருப்பார்கள். 03,யாழ்.வீதி, (பெருமாள் கோயிலடி) சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். *T.P.* 222 9334 (தரகுப் பணியகமோ தரகுச் சேவைகளோ அன்று)

## Wanted

1.Administrative Officer
2.Information Officer
3.General Clerk

With Experience in the relevant field and two non related referees.

Send your cv's within seven working days:

To : Chairman,
Chamber of Commerce and Industries of Yarlpanam,
175, Point Pedro Road,
Anaipanthi,
Jaffna

## தேவை

நல்ல நிலையிலுள்ள *Sriram Honda 650 k.w* ஜெனறேற்றர் அல்லது டீசல் ஜெனறேற்றர் 1000 *kv* செல்ஸ்டாட் மொடல்.

தொடர்பு - 021 4591968 (78972)

## வீடு வாடகைக்கு

யாழ்.கொன்வென்ட் வீதியில், முதலாம் குறுக்குத்தெருவுக்கு அண்மையில் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலைக்கு அண்மையில்) அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 021 222 5103
0777 111530 (78971)


## மரண அறிவித்தல்



**A.V. நடராஜா**

அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை பிரபல வர்த்தகர் (A.V.N) அம்பலவாணர் வல்லிபுரம் நடராஜா அவர்கள் 01.10.2008 கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் கொத்தலாவோடை, கரவெட்டியைச் சேர்ந்த அம்பலவாணர் வல்லிபுரம் - சந்தனப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வதிரி,மந்திரிமடம்,இளையப்பாவளவு காலஞ்சென்ற மகேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும் சந்தான தேவி செல்வராஜா (முன்னாள் ஆசிரியை, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, யா/நெல்லியடி மத்திய மகா வித்தியா லயம்), யோகேஸ்வரன் (கனடா), மணீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராஜா (எஞ்சினியர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை), உதயராணி ஆகியோரின் அன்பு மாமனும் நீருஜா-ஐங்கரன் (எஞ்சினியர்), யோகிதா-அர்ச்சனா, கௌசிகன், ரிஷிராம், சாருஜன், விஸ்வாமி ஆகியோரின் பாசமிகு பாட்டனும் கிருஷ்ணராஜா, நாகரத்தினஅம்மா, அன்னப்பாக்கியம், காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருந்தவநாயகி, காலஞ்சென்ற செல்வராஜா, செல்வலிங்கம், தங்கராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி முதல் பி.ப. 4 மணி வரை பொறளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18 1/4, பெரேரா லேன்,*
*வெள்ளவத்தை.*
*தொ.பே.0114950358,*
*0112360246.*

தகவல்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(சி/554991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர்கள் மீது கண்வைக்கும் எத்தனமே பதிவு நடவடிக்கை

தமிழர்களுக்கு எதிரான கொழும்பு அரசின் இனப் பாகுபாட்டு நடவடிக்கையின் மற்றொரு அங்கம் இன்று தலைநகரில் அங்கேறப்போகின்றது.

வடக்கும், கிழக்கும் தமிழர்களின் பராம்பரிய தாயகம். அங்கிருந்து தலைநகர் உட்பட்ட மேல் மாகாணப் பிரதேசத்துக்கு வந்தவர்களை விசேடமாகப் பிரித்துப் பதிவு செய்யும் நவடிக்கையின் இரண்டாவது கட்டமே இன்று இடம்பெறுகின்றது.

முதற்கட்டமாக வடக்கிலிருந்து வந்தவர்களை பொலிஸார் பதிவு செய்யும் நடவடிக்கை இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தது.

இப்போது கிழக்கிலிருந்து மேல் மாகாணத்துக்கு வந்தவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையைப் பொலிஸார் இன்று மேற்கொள்கின்றனர்.

இந்த இனப் பாகுபாட்டு நடவடிக்கைக்கு எதிராக நியாயம் வேண்டி கடைசி முயற்சியாக நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியும் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கவே யில்லை.

தமிழர் என்ற காரணத்துக்காக யாரையும் பிரித்துப் பார்த்து நடத்தக் கூடாது, ஓரினத்தவர்களுக்கு என்று மட்டும் பொலிஸ் பதிவு இடம்பெறக்கூடாது, அப்படி பொலிஸ் பதிவு செய்வதானால் முழு மக்களுக்குமே சேர்ந்து செய்ய வேண்டும் என்றெல்லாம் ஆரம்பத்தில் நியாயம் கூறிய உயர்நீதி மன்றம் கூட, கடைசியில் தப்புத் தாளம் போடத் தொடங்கி விட்ட மையைக் கண்டு ஏங்கித் தவிப்பதைத் தவிர வேறு மார்க்கமே தமிழர்களுக்குத் தெரியவில்லை.

கொழும்பு அரசின் பொலிஸ்துறை இப்போது [illegible]கொள்ளும் இந்தப் பாகுபாட்டு நடவடிக்கையை சம்பந்தப்பட்ட பிரதேச பிரஜைகள் குழுக்கள் மேற் கொள்ளும் 'புள்ளி விவரம் திரட்டும் பதிவு நடவடிக்கை' என்று நிறம் பூசித் ''தீர்ப்பும்'' வழங்கப்பட்டுவிட்டது.

வடக்கு கிழக்கிலிருந்து தலைநகருக்கு வந்த வர்கள் பற்றிய இந்தப் 'புள்ளி விவரத்திரட்டல் நடவடிக்கை' இனி தென்னிலங்கையில் இருந்தும், மத்திய மாகாணப் பிரதேசத்திலிருந்தும் கொழும்புக்கு வந்தவர்கள் தொடர்பிலும் மேற்கொள்ளப்படுமா என்பது, இந்நட வடிக்கையை நியாயப்படுத்தும் உயர் நீதிமன்றத்துக்கே வெளிச்சம்.

கொழும்பில் வாழும் தமிழர்களை - அதுவும் கொழும்புக்கு கடந்த ஐந்து வருட காலத்துக்குள் வந்து குடியேறியவர்களை-அடையாளம் கண்டு, வேறுபடுத்தி, அவர்களின் விவரங்களைப் பதிந்து, அவர்கள் மீது ஒரு 'கண்வைக்கும்' இந்த நடவடிக்கையானது பல்வேறு சந்தேகங்களையும் அச்சங்களையும் தமிழர்களுக்குத் தந்து நிற்கின்றது.

இந்த நாடு 'சிங்களவர்களுக்கே சொந்தம்' என்று [illegible]குகின்றார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா. சிறுபான்மையினரான தமிழர்கள் தமது உரிமைகளைக் கோரக்கூட இங்கு உரிமையில்லாதவர்கள் என்ற தொனியில் அவரது பௌத்த - சிங்களப்பேரினவாத மேலாண்மைச் செருக்கு வெளிப்படுகின்றது.

''இது ஒரு பௌத்த நாடு'' என பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கா அடித்துக் கூறுகின்றார்.

இந்த அரசை இன்று வழிப்படுத்தி ஆட்டிப் படைக்கும் சக்தியாக விளங்கும் ஜாதிக ஹெல உறுமய இக்கருத்துக்களை வரவேற்று, ஆதரித்து அறிக்கை வெளியிடுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் -

வடக்கு, கிழக்கில் இருந்து வந்து குடியேறிய தமிழர்களினால் தலைநகர் கொழும்பின் குடிசார் பரம்பல் நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டு விட் டது என்ற விசனமும்-

கொழும்பில் தமிழர்களின் எண்ணிக்கை ஐம்பது வீதத்துக்கும் கூடிவிட்டது என்ற ஆதங்கமும்-

அரசுத் தரப்பினால் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்நிலைமையில்தான்-

கடந்த ஐந்து வருடகாலத்துக்குள் கொழும்புக்கு வந்து குடியேறிய தமிழர்களை வேறுபடுத்திப் பிரித்து அடையாளம் காணும் இந்தப் பதிவு நட வடிக்கை 'புள்ளி விவரத் திரட்டல்' என்ற பெயரில் அரங்கேற்றப்படு கின்றது.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுத்து அங்கு தமிழர்களின் 'குடிசார் பரம்பல்' நிலையைக் குழப்பி, தமிழர் தாயகத்தை சிங்கள மயப்படுத்தும் கொடூரத்தில் கடந்த ஆறு தசாப்த காலமாக முழுமூச்சில் - வீச்சில் - ஈடுபட்டுவரும் இலங்கை அரசு, இப்போது வடக்கு, கிழக்கில் தமிழர் தாயகம் மீது இலங்கை அரசு தொடுத்திருக்கும் மிகக் கோரமான - கொடூரமான - யுத்தத்துக்கு அஞ்சி உயிர் பாதுகாப்புத்தேடி தமிழர்கள் கொழும்புக்கு வந்தால் அதை தலைநகர் கொழும்பின் 'குடிசார் பரம்பலை'க் குழப்பும் திட்டமிட்ட இன ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக அர்த்தம் பண்ணுகின்றது.

அந்தப் பின்னணியிலேயே இந்தப் பதிவு நடவடிக்கைகள் 'புள்ளி விவரத் திரட்டல் செயற்பணி' என்ற வெளிப்பூச்சில் முன்னெடுக்கப்படுகின்றன.

## இந்து ஆலயங்கள் குறித்து முக்கிய கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.5

இந்து ஆலயங்களில் தற்போது இடம் பெறும் சம்பவங்கள் குறித்து கலந்துரை யாடுவதற்கென சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தால் அவசர கலந்துரையாடல் நடத்தப் படவுள்ளது.

யாழ்.மாவட்ட ஆலய நிர்வாகிகளுக்கும் ஆலய குருமார்களுக்குமான இந்தக் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பருத்தித்துறை வீதி, ஆணைப்பந்தியில் அமைந் துள்ள குருகுல தலைமைச் செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று இடம்பெற்ற அடையாள வேலைநிறுத்தத்தின் போது...

## சிங்கள வைத்தியரின் கொலையைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலும் அடையாள வேலை நிறுத்தம்

நல்லூர், ஒக்.5

அம்பாந்தோட்டை வைத்திய அதிகாரி டபிள்யூ.டீ.லக்ஷ்மி இடுநில் (வயது-38) கடந்த 29 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேற்கொள்ளும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் காலை 8 மணி முதல் 9 மணி வரை அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டதுடன் கொலை செய்யப்பட்ட வைத்திய அதிகாரியின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

நேற்றுக் காலை 8 மணிக்கு கூடிய வைத்தியர்கள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டதுடன் அஞ்சலிக் கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

அதன்பின் வைத்திய அதிகாரியின் கொலையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினர். (50-111)

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கற்கோவளத்தில் 70 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் நாளை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கற்கோவளத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் 70 வீடுகளையும், 39 மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

இவற்றை வைபவரீதியாகக் கையளிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை கரித்தாஸ்-கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக வீடுகளைக் கையளிப்பர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த வருடம் வரை கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் 279 வீடுகளை கையளித்ததுடன் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் சக்கோட்டைப் பகுதியில் 57 வீடுகளும், தும்பளையில் 97 வீடுகளும் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட் டன.

மே மாதம் தொடக்கம் கற்கோவளத்தில்- 70, திக்கத்தில் -55, இன்பர் சிட்டியில்-45 மற்றும் சுப்பர் மடப்பகுதியில்-30 வீடுகளுக்குமான கட்டுமாணப்பணி நடைபெற்று வரு கின்றது.

அவற்றில் கற்கோவளப் பகுதி யில் நிர்மாணிக்கப்பட்ட 70 வீடுகளும், 39 மலசல கூடங்களுமே பயனாளிகளுக்கு வைபவரீதியாக கையளிக் கப்படவுள்ளன. (202)

## இளங்கலைஞர் மன்றத்தில் இன்றுமுதல் வாணிவிழா

யாழ்ப்பாணம், ஒக்.5

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணிவிழா நிகழ்வுகள் இன்று முதல் மூன்று தினங்கள் பி.ப. 03.30 மணி முதல் மாலை 6 மணிவரை மன்ற மண்டபத்தில் இடம்பெறும். இன்றைய முதல் நாள் நிகழ்வில் மன்ற மாணவிகளின் குழு இசை, எஸ்.சூரியகுமாரின் இசைக் கச்சேரி, ஏ.ஜெயராமனின் மெண்டலின் இசைக் கச்சேரி ஆகியன இடம்பெற வுள்ளன. (1-111)

# நிகழ்வுகள்

கொக்குவில் மத்தி சனசமூக நிலைய கொக்குவில் இந்து முன்பள்ளியின் ஆசிரியர்தின, சிறுவர்தின நிகழ்வுகள் இன்று பி.ப. 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கலந்து கொள்வார். முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு, கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன. (01)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்ட சர்வதேச ஆசிரியர் தினவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர்பயிற்சிக் கலாசாலையில் லயன் டாக்டர் வை.தியாகராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.ரவீந்திரா, யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர் ஆஸ்ரீஸ்கந்த மூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த ஆசிரியர் தின மதிப்பளிப்பு நிகழ்வை யாழ்கல்வி வலயத்துடன் கோப்பாய், உரும்பிராய், அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்துவது குறிப்பிடத்தககது. (202-72)

★ ★ ★

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்ற நவராத்திரி விழா இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளது. மன்றத் தலைவர் பி.ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நவராத்திரி விழாவிலே இளைப்பாறிய ஆசிரியை திருமதி சிவமலர் சுப்பிரமணியம் "இறைபக்தி" என்னும் தலைப்பில்சொற்பொழிவு ஆற்றுவார். இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

★ ★ ★

மந்திகை, ஒக்.5

புலோலி கல்வி நிலையத்தின் பரிசளிப்பும்கலைவிழாவும் ஆசிரியர் தினமும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்வி நிலைய மண்டபத்தில்நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பி.ஜெயகோபால் விழாவிற்கு தலைமை வகிப்பார். பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் வாழ்த்துரை யும், ஆசிரியர் கே.வி.என்.சிவலிங்கம் சிறப்பு ரையையும் ஆற்றுவார்கள். அமரர் களான பண்டிதர் பொன்.சின்னத்துரை ஆசிரியர் அம்பலவாணர், ஞாபகார்த்தப் பரிசில்களும் வழங்கப்படும்.

நினைவுரையை பேராசான் ஏ.கந்தையா, ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர் எஸ். கைலாசபதி ஆகியோர் நிகழ்த்துவர். (202-218)

★ ★ ★

ஏழாலைமேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை நடத்தும் ஆசிரியர் தினவிழா, சமையற்கூடத்திறப்பு விழா ஆகிய நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினர் ச.கிருபானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.செயலக திட்டப் பணிப்பாளரும் செயற்திட்டப் பணிப்பாளருமாகிய ம.பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1-204)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.5

காரைநகர், கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் கலைக்கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

கலைக்கண்காட்சியின் ஆரம்ப விழா இன்று காலை 9 மணிக்கு மன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறுகின்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராக உடுவில் உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் கலந்து கொள்வார். (1-25)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.5

நல்லூர் முருகன் சனசமூக நிலையம் நடத்தும் வாணிவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நா.சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி சிறப்பிக்கவுள்ளார். (204)

★ ★ ★

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட முன் பள்ளிகளின் ஆசிரியர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முன் பள்ளி ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார். (01)

★ ★ ★

மனித உரிமைகள்பெறுமானங்களை சமூக மட்டத்தில் வலுப்படுத்தல் என்ற தலைப்பிலான ஒருநாள் செயலமர்வு இன்று காலைமுதல் 'பிள்ளையார் இன்' விடுதியில் இடம்பெறவுள்ளது. (01)

★ ★ ★

மருதனாமடத்தில் இயங்கும் வாழ்வகத்தில் இன்று காலை 8.30 மணி முதல் வாணிவிழா நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. வாழ்வகச் சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் விசேடமாக [illegible] விழாவில் இடம்பெறும். (01)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 20 | 06.10.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | சப்தமி |
| | மு.இ.11.40வரை |
| நட்சத்திரம் : | மூலம் |
| | மு.இ.11.26வரை |
| சுபநேரம் : | 12.02 -01.32 |
| ராகுகாலம் : | 07.32-9.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் மாதாந்த விசேட விருந்தினர் தினம் நேற்றுப் பிற்பகல் உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில், யாழ்.போதனா வைத்திய சாலையின் இதய வைத்திய நிபுணர் பூ.லஷ்மன் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு "சுகமான வாழ்வுக்கு நலமான இதயம்" என்னும் தொனிப் பொருளில் சிறப்புரை ஆற்றினார்.

வைத்திய நிபுணர் பூ.லஷ்மன் சிறப்புரை ஆற்றுவதையும் நிகழ்வுக்கு வந்திருந்தோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சுதன்)

# வன்னி அகதிகளை வவுனியாவுக்கு வருவிக்க ஐ.நா.தூதரகத்தின் உதவியை நாடுகிறது அரசு

## பேச்சுக்கள் இவ்வாரத்திலும் தொடரும்

கொழும்பு, ஒக். 5

வன்னியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களை வவுனியாவுக்கு வருவிப்பது தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவியை அரசாங்கம் நாடியுள்ளதாக அறியப்படுகிறது.

இது தொடர்பாக அரசாங்க உயர் அதிகாரிகள் சிலர் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக (யு.என்.எச்.சி.ஆர்) அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதாக நம்பகரமாக அறியவந்தது.

வன்னியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயரும் மக்களை வவுனியாவில் அமைக்கப்பட்டு வரும் நலன்புரி நிலையங்களுக்கு வருமாறு அரசாங்கம் கடந்த (செப்ரெம்பர்) மாதம் முதலாம் திகதி அறிவித்திருந்தது.

எனினும் நேற்று வரை எவரும் வவுனி யாவுக்குச் செல்லவில்லை.

வன்னி மக்களை வவுனியாவுக்கு வருவிக்கும் திட்டம் எதிர்பார்த்த அளவு பலனளிக்க வில்லை. எனினும் அவர்கள் இருக்கும் இடங்களுக்கு உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண நேற்று முன்தினம் நடந்த ஊடக வியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்நிலையில் -

போதியளவு பஸ்கள், லொறிகள் ஆகிய வற்றை ஐ.நா.கொடியுடன் வன்னிக்கு அனுப்பி இடம் பெயர்ந்த மக்களை வவுனியாவுக்கு பாதுகாப்பாக அழைத்துவர அரசு முயற்சி செய் வருகிறது.

இது தொடர்பாக அரச உயர்மட்டத்தினர் யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர் என்றும்-

இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்தும் இவ்வார மத்தியில் நடைபெறும் என்றும் - அரச உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-1)

## இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டது

கொக்குவில், ஆடியபாதம் வீதியில் ரயில்வே தண்டவாளத்துக்குச் சமீபமாக நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவரின் சடலம் நேற்று இனங்காணப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த சபாரத்தினம் சசிகுமார் (வயது 27) என்பவரின் சடலம் என அடையாளம் காட்டப்பட்டது.

யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் நேற்று விசாரணைகளை நடத்தினார்.

பிரஸ்தப நபர் கடையைப் பூட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, பின்னால் மோட்டார் சைக்கிளில் கலைத்துக் கொண்டு வந்த ஆயுததாரிகள் அவரை வழிமறித்துச் சுட்டு விட்டு தப்பிவிட்டனர் என்று விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## செய்மதி ஊடாக செயலாளர் - பணிப்பாளர்கள் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 05

வடக்கு மாகாண கல்வியமைச்சு செயலாளர் இ.இளங்கோ மற்றும் கல்வி அதிகாரிகளுக்கும் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கும் இடையிலான செய்மதி ஊடான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிமுதல் இடம் பெறவுள்ளது.

யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி குறித்து ஆராய்வர். (1)

## கல்வி மாணி விரிவுரை இன்று நடைபெறாது

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப் பட்டநெறி முதலாம்வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என்வும் அடுத்த விரிவுரைத் திகதிகள் பின்னர் அறிவிக்கப் படும் எனவும் தேசியக் கல்வி நிறுவன இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (01)

## யாழ்.....

(முதலாம் பக்க்த் தொடர்ச்சி)

வித்துருவி சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

ஆஸ்பத்திரியின் ஏனைய பகுதிகளிலும் தேடுதல்கள் இடம் பெற்றன.

பிற்பகல் வரை இத் தேடுதல் தொடர்ந்ததாகத் தக்வல்கள் தெரிவித்தன. (அ-01-149)

## கிளிநொச்சி பிரதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்கட்டத்தில் தேவை ஏற்படின், ஜெனரேட்டரை இடமாற்றும் போதுதான் மருந்துகளையும் மாற்றமுடியும்- என்றார் அவர்.

ஆஸ்பத்திரி உபகரணங்களையும் உடனடியாக முழுமையாக மாற்ற முடியாது. அவசரசிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் தவிர்ந்த ஏனைய உபகரணங்கள் வெவ்வேறு சுற்றயல் வைத்தியசாலைகளுக்கு மாற்றப் பட்டு வருகின்றன - என்றும் டாக்டர் சத்தியமூர்த்தி கூறினார்.

கிளிநொச்சி நகரப் பகுதிகளில் தற்போதும் பொது மக்கள் பிரசன்னம் இருப்பதாகவும் -

மருத்துவதேவை உட்பட பல்வேறு தேவைகளின்பொருட்டும் மக்கள் நகரப் பகுதிகளுக்கு வந்து செல்வதாகவும் - அவர் மேலும் சொன்னார். (அ-1-2)

## இலங்கைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அவர் சுட் டிக்காட்டியிருக்கிறார்.

அத்துடன் தமிழக மீனவர்கள் இலங் கைக் கடற்பரப்பில் எதிர்கொள்ளும் பிரச்சி னைகள் குறித்தும் மத்திய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

## பன்றிக்கெய்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மோதலில் பலமான நிலை ஒன்றை விடுதலைப்புலிகள் இழந்தனர்.

இரண்டாவது தாக்குதல் 40 நிமிடத்துக்கு பின்னர் இடம்பெற்றது. இந்த மோதலில் பலமான மூன்று நிலைகளைக் படையினர் கைப்பற்றினர்-

அந்தப் பிரதேசத்தை துப்புரவு செய்யும் பணியில் இருந்த படையினர் மீது பிற்பகல் ஒரு மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல மேற் கொண்டனர்.

இந்த மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்; 12 படையினர் காயமடைந்தனர். இதில் எட்டு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்; 10 பேர் காயமடைந்தனர் - என்று ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (அ-1)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் முன்னகர்ந்த படையினருடன் இரு மணி நேரம் மோதி அவர்களின் முன்னகர்வு முயற்சியை முறியடித்து, பழைய நிலைகளுக்கு திருப்பியனுப்பிவிட்டதாகவும் இந்த மோதலில் சிப்பாய் ஒருவரின் சடலத்தையும் படையப் பொருள்களையும் மீட்டதாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (அ-01)

## அமைச்சரவைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையில் கலந்துரையாடப்படும் போது சம்பந்தப் பட்ட முதலமைச்சர்களும் பங்குபற்ற வேண்டும் என்று ஜனாதிபதி வழங்கிய உத்தரவைத் தொடர்தே சகல மாகாண முதலமைச்சர்களும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஒருவர் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்றியமை இதுவே முதல் தடவை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. (அ-01)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேறி வரும் 57ஆவது படை அணியினருக்கு உதவியாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"கிபிர்" விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தியதாகப் படைத்தரப்பில் இருந்து நேற்று மாலை வரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை. (அ-01)

## கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமடு விமான ஓடுபாதை மீது பீரங்கித் தாக்குதலை நடத்தும் ஆற்றலை படைவீரர்கள் கொண்டுள்ளார்கள். பாதுகாப்புப் படையினரின் வெற்றிகரமான தாக்குதல்கள் காரணமாக புலிகள் கிளிநொச்சி யுத்த முனையில் பெருமளவு பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளார்கள்.

கிளிநொச்சி நகரில் தற்பொழுது ஆயிரத்து ஐநூறு புலி உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். கிளிநொச்சி புலிகளின் கோட்டையாக காணப்படுவதால் அடுத்த ஓரிரு நாள்கள் அவர்களின் இறுதிப்போராக அமையக்கூடும் - என்று லெப்டினட் ஜென ரல் பொன்சேகா சொன்னார்.

மேலும் -

சகல புலி இயக்க உறுப்பினர்களையும் சரணடையுமாறும் இராணுவத் தளபதி அறிவித்துள்ளார். இராணுவத்தின் ஆள்பலம் இரண்டு லட்சத்தினால் அதிகரிக்கப் பட் டுள்ளது; விரைவில் புதிதாக நான்கு படைப் பிரிவுக்ள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன - என்றும் அவர் கூறினார். (அ-2)

## விசுவமடுவும்..,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கடுமையான மோதல்களில் பொது மக்கள் சிக்காமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு என்று இராணுவத் தளபதி சொன்னார். அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். அவர்களின் பாதுகாப்புக் கருதியே மேற்படி இரண்டு இடங்களை தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசங்கள் ஆக்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார கூறியதாவது:-

விசுவமடு மற்றும் ஒட்டிசுட்டான் பகுதிகள் ஏ-9 வீதிக்கு கிழக்காக இருக்கின்றன. பொதுமக்களை மனித கேடயங்களாக புலிகள் வைத்திருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியும். அதனால் மக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி போரில் சிக்காமல் தப்புவதற்கு குறிப்பிட்ட இரண்டு இடங்களுக்கும் வரலாம். அவர்களுக்குத் தேவையான வசதிகளை அந்தப் பகுதி அரசாங்க அதிபரும், அதிகாரிகளும் செய்வர். இந்த நடைமுறை இப்போதே உடனடியாகவே அமுலுக்கு வருகிறது.

அங்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று எதுவும் கிடையாது. அங்கு விடுதலைப்புலிகளின் பிரசன்னம் உள்ளது; அவ்வளவுதான். இந்தப் பகுதிகளை நோக்கி நாங்கள் ஆயுதங்களைப் பயன் படுத்தப் போவதில்லை. நாங்கள் தாக்குதல் நடத்தப்போவதில்லை. எனவே மக்கள் இதனைப் புரிந்து கொண்டு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பிட்ட பகுதிகளுக்குவிடுதலைப் புலிகள் தங்களது கனரக ஆயுதங்களை அவற்றுக்குச் சமீபமாக எடுத்துவர முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். எல்லாப் பக்கங்களாலும் நாங்கள் அவர்களை சூழ்ந்து, நெருங்கி வருகிறோம். விடுதலைப் புலிகள் அங்கே வந்தால் மக்களுக்கு இழப்பு ஏற்படாமல் அங்கிருக்கும் புலிகளை கையாளக் கூடிய மாற்று ஏற்பாடுகளை நாங்கள் வைத்திருக்கின்றோம் - என்றார் இராணுவப் பேச்சாளர். (அ-2)

E.G மின்சார உற்பத்திப் பொருள்கள்
(LAMP HOLDER, CEILING ROSE, STRAIGHT BATTON, ANGLE BATTON & PLUG TOPS)
European General Company இடமிருந்து BAKE LITE மூலப்பொருள்கள் கொண்டும், தரமான BRASS PIN கொண்டும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் முதற்தரமான மின்சாரப்பொருள்கள்
"தீயில் இருந்து முற்றிலும் பாதுகாப்பானது"



MANUFACTURED BY
European General Company
Colombo.
Marketed BY
JAFFNA ELECTRiCALS
No. 94 (6), Stanley Road,, JAFFNA
Tel: 021 2222353

A/L ஆசிரியர் தேவை
எமது நிறுவனத்தில் விவசாய பாடம் கற்பிப்பதற்கு தகுதியுடைய ஆசிரியர் தேவை.
நேரில் தொடர்பு கொள்ளவும்:
காலம்: 05.10.2008 ஞாயிறு 2.30 p.m
பொதுளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ENGLISH
SPOKEN WITH GRAMMAR
By: Britto
புதிய பிரிவு
ஆரம்பம்: 06.10.2008
நேரம்: காலை 6.30
இடம்: கொக்குவில்
(ஞான பண்டித வித்தியாசாலை அருகில்)
திங்கள், புதன் வகுப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.